நன்றி - நூலகத்திட்டம்


# சரிநிகர்

சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி


இதழ் 18 ஒகஸ்ட்/செப்டம்பர்1992 விலை - 5/-


உள்ளே


- வடகிழக்கு முஸ்லிம்களின் அரசியல் எதிர்காலம்-மருதூர்பஷத்
- "முடிந்தால் அரசு கைது செய்யட்டும்" -உடுகம்பொல
- தற்கொலைக்கொலையாளிகள் (புலிகள் பற்றி பி.பி.ஸி. தயாரித்த வீடியோநாடா பற்றி)
- தேசிய விடுதலைப் போராட்டம் - ஒரு மீளாய்வை நோக்கி
- தென்னாசிய விவரண குறுந்திரைப்படவிழா பற்றி
- தமிழகதி


# தழிழைப் பேசுவதால் நாம் தமிழர்களுக்கு அடிமைகளல்ல

**-அஷ்ரஃப்**



தமிழைப் பேசுவதால் நாம் தமிழர்களுக்கு அடிமைகளல்ல. சமஷ்டிக் காலத்திலிருந்து எடுத்து வரப்பட்ட இப்போராட்டம் வட-கிழக்கு என்பது தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய தாயகம் என்ற அடிப்படையில் தான் வந்திருக்கிறது. அவ்வாறாயின் வட-கிழக்கில் தமிழ் மொழியைப் பேசும் இரண்டு இனங்கள் இருப்பது உண்மையானால் வடகிழக்கு என்பது தமிழர்களுடைய தாயகம் மாத்திரமல்ல. அது தமிழ், முஸ்லிம் ஆகிய இரண்டு சமூகங்களுக்குரிய தாயகம் என்பது ஏற்றுக் கொள்ளப்படவேண்டும். எக்காரணம் கொண்டும், எவ்வகையிலும் முஸ்லிம்கள் தமிழர்களுக்குக் குறைந்தவர்களல்ல.

ஜிஹாத் படை அமைக்கப்படுவதன் நோக்கம், விடுதலைப் புலிகளை அழிக்க வேண்டும் அவர்கள் விடுதலைப் போராட்டத்தில் ஈடுபடுகிறார்கள் என்பதற்காகவல்ல. அவ்வாறாயின் விடுதலைப் புலிகள் இன்னும் ஆயிரம் ஆண்டுகளுக்கு இருக்கலாம். அதைப்பற்றி எங்களுக்கு பிரச்சினை இல்லை. நாம் புலிகளைப் பற்றிப் பேசமாட்டோம். ஆனால் புலிகள் தம்முடைய போராட்டத்தில் முஸ்லிம்களை அழிப்பதுவும் ஒரு இலக்கு என நினைத்தால் தமிழர்களுக்கு என்ன கிடைத்தாலென்ன இல்லாவிட்டால்லென்ன எங்களுக்கு அது பிரச்சினை இல்லை. தமிழர்களுடைய விடுதலைக்காகவா முஸ்லிம்களைக் கொல்கிறார்கள், என்கிறார் முஸ்லிம் காங்கிஸ் தலைவர் எம்.எச்.எம். அஷ்ரஃப். அவரது பேட்டி பக்கம் 12,13 இல் முழுமையாகத் தரப்படுகிறது.

## பாடைதரும் பாடம்

"போர்க்களத்திற்குச் சென்றவர்கள் வென்றதுண்டு வந்ததில்லை" என்று ஜேர்மனியக் கவிஞர்/நாடகர் பர்தோல்ட் பிரெஃட் ஒருமுறை எழுதியிருந்தார். இலங்கையின் போர்க்களத்தைப் பொறுத்தவரை ஒருவரும் வெல்வதில்லை; அவ்வப்போது எலும்பும் இறைச்சியும் தொப்பியும் பொலித்தீனில் வருவதுண்டு.

டென்ஸின் கொப்பேகடுவ, விஜய விமலரத்தின, மோகன் ஜயமஹா உள்ளிட்ட பத்து அதியுயர் அதிகாரிகள் ஒரு நாளில் கண்ணி வெடியில் காலம் சென்றது தென்னிலங்கை எங்கணும் ஒரு பாரிய அதிர்ச்சி அலையையையும் சோகப் பிரலாபங்களையும் கிளப்பி விட்டுள்ளது. கண்ணி வெடிக்கு யார் பொறுப்பு என்று ஒரு சாரார் கொழும்பில் 'மயிர் பிளந்து' கொண்டிருக்க இன்னொரு சாராரோ, இறந்த அதிகாரிகளை வீர புருஷர்களாக 'மீள் படைப்புச்' செய்வதற்கு அயராது உழைத்தனர்.

சிங்கள இனத்தின் வீரத் தலைவனாகவும், நவீன சப்புமல் குமரையாவாகவும் கொப்பேகடுவ உயர்ந்தார். "எவ்வளவு அற்புதமான மனிதர் அவர் " என்ற தோரணையில் தமிழ் இயக்கங்களும் அனுதாப அறிக்கைகள் விட்டிருந்தார்கள்.

கொல்லப்பட்ட இராணுவ அதிகாரிகளின் உடல்களைக் கனத்தையில் கரியாக்க வந்தபோது துயரும் ஆத்திரமும் பொறுக்க முடியாத ஒரு பகுதி மக்கள் அரசுக்கெதிரான நடவடிக்கைகளில் இறங்கினர். அமைச்சர்கள் சிலரின் மண்டை பிளந்தது; பிரேமதாச அரசின் செல்ல நாய்க்குட்டி என்று அழைக்கப்படும் தயான் ஜயதிலக கடுமையாகத் தாக்கப்பட்டார். பொலிஸ் வாகனங்கள் தீயிடப்பட்டன. ராணுவத்தினரில் ஒரு பகுதியினரின் சாடைமாடையான ஆதரவு இந்தக் கனத்தை அனர்த்தங்களுக்கு இருந்தது என்று சொல்லப்படுகிறபோதிலும் இது எவ்வளவு தூரம் உண்மையென்று தெரியவில்லை.

பத்து சாதாரண ராணுவத்தினர் 1983ல் கொல்லப்பட்டபோது தமிழ் மக்களுக்கெதிரான பயங்கர அழிப்பே கட்டவிழ்த்து விடப்பட்டது. ஆனால் இன்று பத்துப் பெரும் அதிகாரிகள் கொல்லப்பட்டபோதும் "பாருங்கள்; மக்கள் எவ்வளவு அமைதியாக இருக்கிறார்கள்" என்று அரசும் பெரும் பத்திரிகைகளும் தம்மையே தட்டிக் கொடுத்துக் கொண்டுள்ளன.

இது பகுதி உண்மைதான். தமிழருக்கெதிரான தாக்குதல்கள் ஆங்காங்கே இடம் பெற்றன. பொரல்லையில் ஒரு நகைக்கடை தாக்கப்பட்டது. மைலந்தனையில் 35 பேர் படுகொலை செய்யப்பட்டார்கள். நீர்கொழும்பில் உயிரோடு கொளுத்தப்பட இருந்த தமிழரொருவர் நல்ல காலமாகப் பொலிஸாரின் தலையீட்டால் தப்பிவிட்டார்.

ஜுலை 83 உடன் ஒப்பிட்டால் இவைகளைத் தட்டிக் கழித்து விடலாம் தான்.

சரி, எனினும் இங்கு முக்கியமாகக் கனன்று கொண்டிருக்கும் உணர்வு என்னவெனில் பிரேமதாச அரசிற்கெதிரான எதிர்ப்பும் இந்த எதிர்ப்பை முன்னின்று வழிநடாத்துபவர்களின் பச்சை இனவாதமும்தான்.

நேற்று அரசுக் கெதிராகக் கனத்தையில் நிகழ்ந்தவை எந்தக்கணமும் சிறுபான்மை மக்களுக்கெதிராகத் திரும்பி விடக்கூடிய அபாயம் உள்ளது. இந்த அபாயத்தைத் தான் எதிர்க்கட்சிகளும் ஆளுங்கட்சியும் பதவிலியிருக்க உபாயமாகப் பயன்படுத்தி வருகிறார்கள் என்பதைத் திரும்பத் திரும்பச் சொல்லித் தொலைக்க வேண்டி இருப்பது எங்கள் பணியாகப் போய்விட்டமை அவலம்தான்.

தமிழ், முஸ்லிம் மக்களின் பிரச்சினைகளுக்கு யுத்தம் மூலம் தீர்வு காண முடியும் என்றும் யுத்தத்தில் வெல்லலாம் என்று நினைத்துக் கொண்டிருப்பவர்களுக்கும் டென்ஸில் கொப்பேகடுவ + ஒன்பது பேரின் மரணம் உணர்த்த வேண்டியுள்ளது; குண்டு வீச்சை நிறுத்தி அரசியல் வழியைக் கண்டு பிடி என்பதுதான்.

நித்திரையாக இருப்பவர்களை எழுப்பலாம்; நித்திரை போய் பாசாங்கு செய்பவர்களை யார் எழுப்ப முடியும்?

## படைகள் மாதகலில் ...

ஒகஸ்ட் 20ம் திகதி காலை 6.15 மணிக்கு ஆரம்பிக்கப்பட்ட பூமியதிர்ச்சி (Operation quake)இராணுவ நடவடிக்கையின் மூலம் மாதகல், இளவாலைப் பகுதிகளை படையினர் கைப்பற்றியுள்ளதாகவும் கைப்பற்றப்பட்ட பகுதிகளைப் பலப்படுத்துவதில் படையினர் ஈடுபடுவதாகவும் அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

டென்ஸில் கொப்பேகடுவ, விஜய விமலரத்ன உட்பட பத்து உயரதிகாரிகளும் ஒகஸ்ட் 8ம் திகதி அமுக்க வெடியில் கொல்லப்பட்ட பின் வட-கிழக்கிற்கான புதிய தளபதியாக ஜெனரல் ஜெரிசில்வாவும், யாழ்மாவட்டத் தளபதியாக மேஜர் தலுவத்தையும் நியமிக்கப்பட்ட பின் மேற்கொளளப்பட்ட முதலாவது இராணுவ நடவடிக்கை இதுவாகும்.

வழமைபோல் சியாமார் செட்டியும், ஹெலியும் வானிருந்து குண்டுகளைப் பொழிய, கடலிலிருந்து சீனக் கடற்படைக் கப்பல்கள் தீப்பிளம்புகளைக் கக்க சீன டாங்கிகளுடன் இம்முறை செக் கோசிலாவெக்யா டாங்கிகளும் முன்னே செல்ல படையினரின் படையெடுப்பு ஆரம்பமானது.

படையினரின் முன்னேற்றத்தைத் தொடர்ந்து இப்பகுதி மக்கள் குடாநாட்டின் உட்புறமான மானிப்பாய், சுன்னாகம், இணுவில், கோண்டாவில் பகுதிகளை நோக்கி இடம்பெயர்ந்துள்ளனர்.

வழமைபோல படையெடுப்பின் போது கொல்லப்பட்டவர்கள் அனைவரும் புலிகளே என அரசு அறிவித்துள்ளது.

தெல்லிப்பழையிலிருந்து முன்னேறிய படையினர் மாரீசன் கூடலில் நிலை கொண்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

மாதகலில் கடற்புலிகளின் முகாம் ஒன்றையும் படையினர் கைப்பற்றியுள்ளனர். கடற்கரையை ஒட்டிய விசாலமான வசதிகளைக்கொண்ட இந்தமுகாம் கடற்கண்காணிப்புக்கும், ஹெலி இறங்குவதற்கும் வசதியாக இருப்பதால் படையினரின் நிரந்தர இராணுவ தளமாக மாற்றுவதற்கான முயற்சிகளில் உயரதிகாரிகள் ஈடுபட்டுள்ளனராம்.

அரசு தெரிவுக்குழுவிலும், சர்வகட்சி மாநாட்டிலும் அரசியல் தீர்வைப் பற்றிப் பேசிக்கொண்டே மறுபுறத்தில் இராணுவ நடவடிக்கையையும் அழித்தொழிப்பையும் மேற்கொள்வது அதானது இனவாதப் போக்கையும், அரசியல் தீர்வு தொடர்பான அதனது அபிப்பிராயத்தையும் வெளிப்படுத்துவதாயுள்ளது.

## பேசிக் களைத்த....

கடந்த இரண்டு வருடங்களாக அரசுடன் 'பேசித் தீர்க்கும்' நடவடிக்கையிலீடுபட்டு வந்த தமிழ்க் குழுக்களுக்கும் அரசின் நடவடிக்கைகள் "பேச்சுவார்த்தை வெறும் பம்மாத்து" என்கிற நிலையை ஏற்படுத்தினாற்போல் தெரிகிறது. 'ஜனாதிபதியின் தொங்கு தசை' என வர்ணிக்கப்பட்ட அம்பாறை மாவட்ட த.வி.கூட்டணி எம்.பி. ஜே.திவ்வியநாதன் சுடலை ஞானம் வந்தாற் போல் 'அரசின் நடவடிக்கைகள் சந்தேகம் கொள்ள வைக்கிறது. கறிவேப்பிலையைப் போல் பயன்படுத்தி விட்டு எறிந்து விட முனைகிறது அரசு' என்று செப்பியிருக்கிறார்.

## சண்டையோடு கல்வி போம்

சண்டை ஆரம்பமானதைத் தொடர்ந்து அப்பகுதியில் இடம் பெற்று வந்த க.பொ.த. உயர்தரப் பரீட்சை தடைப்பட்டுள்ளதாக அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

ஒவ்வொரு முறையும் யுத்தம் பரீட்சையையும், கல்வியையும் குழப்புவது நடந்த; நடக்கிற விடயங்கள்.

90 ஒகஸ்டில் நடாத்தப்பட இருந்த பரீட்சை வட-கிழக்கில் யுத்தம் மூண்டதைத் தொடர்ந்து தடைப்பட்டதும், பிறகு எத்தனையோ இழுபறிகளுக்குப் பிறகு 91 ஏப்ரலில் நடாத்தப்பட்டதும் தெரிந்த விடயங்கள்.

இப்போது, 91 ஏப்ரலில் நடந்த பரீட்சையை அரசு தனியான பரீட்சையாகக் கருதி அப்பரீட்சையில் தோற்றியவர்களுக்கான பல்கலைக்கழக அனுமதிக்காக கூடிய வெட்டுப் புள்ளியை அமுல் படுத்தியுள்ளது.

ஸ்ரீ.ல.சு.கட்சியின் தரப்படுத்தல் முறையே பெருமளவான தமிழ் இளைஞர்களை ஆயுதப் போராட்டப் பாதைக்குள் தள்ளியது என்பது வரலாறு.

வரலாறு பின்நோக்கிச் சுழலுமோ?

நன்றி - நூலகத்திட்டம்



# மெல்லத் தமிழினி

## உனக்கென்ன விடுதலை?

அண்மையில் அடுத்தடுத்து கிழக்கில் நடந்த முஸ்லிம்கள் மீதான தாக்குதலின் பின் தமிழ் முஸ்லிம் உறவில் கொஞ்ச நஞ்ச ஒற்றுமைக்கான வாய்ப்பினையும் இல்லாதொழிக்கும் நோக்குடன் நடத்தப்பட்டிருப்பதாகவே சந்தேகிக்கப்படுகிறது. வடக்கு கிழக்கு பிரிப்பை எப்படியாவது சாதித்துவிட வேண்டும் என்று கருதுகிற அரசியற்சக்திகள், தமிழ் முஸ்லிம் மக்களிடையே உள்ள பரஸ்பர நல்லுறவை இல்லாதொழிப்பது அதற்கான முன்நிபந்தனை என்று புரிந்து கொண்டு செயற்பட்டு வருகின்றன.

வடக்கு கிழக்கில் ஜனநாயக உரிமைகளைக் கொன்று அவற்றுக்குச் சமாதி கட்டிய பின்னரே அங்கு தமிழீழ கொடி பறக்க விடப்பட முடியும் என்பது புலிகளின் கோட்பாடு. அந்தக் கோட்பாட்டுக்கிணங்க முஸ்லிம்களை அடக்கி ஒடுக்கி வாய் பேசா அடிமைகளாக்கி விடுவது வடக்கு கிழக்கைப் பிரித்து தமிழீழம் என்று அறிவிப்பதற்கான ஒரு முன்நிபந்தனை என்பது புலிகளின் கோட்பாடு. எப்படியோ வடக்கு கிழக்கை பிரிக்க முயல்பவரும், சேர்த்தே பெற நினைப்பவரும் முஸ்லிம்களை தாக்குவது என்ற கருத்தில் வேறுபட்ட அபிப்பிராயம் கொண்டிருப்பதாக தெரியவில்லை.

ஜே.வி.பி யினர் எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த பிரமுகர்களைக் கொன்ற போது, கறுப்புப்பூனை அதே வேலையை தீவிரமாக செய்ததன் மூலம் ஜே.வி.பியினை விரைவிலேயே மக்களிடமிருந்து தனிமைப்படுத்தும் ஊக்கியாகச் செயற்பட்ட வரலாறு கொஞ்சம் கொஞ்சமாக வெளியாகிக் கொண்டிருக்கிறது.

முஸ்லிம் படுகொலையிலும் இத்தகைய பூனைகளின் விளையாட்டுக்கு வாய்ப்பு இல்லாமல் இல்லை.

புலிகளாயினும் சரி, பூனையாயினும் சரி அவை சாரத்தில் (பலத்தில் வேறுபட்ட போதும்) ஒன்றுதான்.

எப்படியோ, உலகம் முழுக்கப் பரந்து வாழும் தமிழன், அவனை அந்த நாடுகள் திருப்பி அனுப்பப் போவதாக எடுக்கிற முடிவைவிட மோசமான ஒரு நிலைமைக்கு தள்ளப்படப் போகிறது இப்போது நிச்சயமாகிவிட்டது.

அதுதான், தன்னை தமிழன் என்று அடையாளப்படுத்திக் கொள்ளவேண்டியிருப்பது

முஸ்லிம்களைக் கொல்வதும் விரட்டுவதும் புலியாக இருந்தால் கூட, அந்தக் கறை புலிகளுக்கு மட்டுமல்ல 'புகழ் பூத்த' தமிழர் அனைவருக்கும்தான்.

வரலாற்றின் எல்லா அவமானச் சின்னங்களையும் விட மோசமான இந்த அவமானச் சின்னத்தை சுமக்கவிருக்கிற தமிழனை நோக்கி உலகம் கேட்கப் போகிற கேள்வி ஒன்றுதான்.

உனக்கு என்ன விடுதலை வேண்டி கிடக்கிறது?

## ஒரு பி(றி)ஸ்டல் கதை

1. வவுனியாவிலிருந்து யாழ் செல்லும் பயணிகளைப் பரிசோதிக்கும் புலிகளின் 'சென்றிப் பொயின்ற்!'
வரிசையாக அடையாள அட்டை, பயணப் பொதிகள் சகிதம் பயணிகள்
இடையிலே ஒ்ரு இளைஞன்.
அவனது காற்சட்டைப் பொக்கற்றுள் துருத்திக் கொண்டு ஏதோ ஒரு பொருள்.
'என்னடா அது?'
'பிஸ்டல்'
'பிஸ்டல்...?'
-இளைஞன் இழுத்துச் செல்லப்படுகிறான்.
வழமையான அடி உதைகளின் பின் தேடுதல்.
பிஸ்டல் இல்லாமல் போகவே தொடர்ச்சியான உதை. மண்டை உடைந்து, மயக்கம் அடையும் வரையான உதை. ஆயினும் பிஸ்டல் அகப்படவில்லை.
திரும்பவும் மயக்கம் தெளிந்த பின் அதே ஆராதனைகள்.
பிரிஸ்டல் சிகரெட் பைக்கற்றை பிஸ்டல் பிஸ்டல் எனவே உச்சரித்துப் பழகிய அந்த இளைஞன் ஊருக்குப் போய் சேரும் போது பாதி உயிர் போய் விட்ட நிலை.

## ஒரு சாம்போக் கதை

2 இது ஐ.பி.கே.எப் யாழ்ப்பாணத்தில் அமைதி காத்த காலத்தில் நடந்தது.
யாழ்ப்பாணம் மணிக்கூட்டு வீதிக் கடை ஒன்று.
மாலை மாலையாக தொங்கிய சாம்போ பைக்கற்றுகளை பார்த்தபடி ஒரு ஜவான் ஹிந்தியில் ஏதோ விசாரிக்கிறான்.
கடைக்காரர் ஓடிவருகிறார்;
'சாம்போ சாம்போ... திஸ் இஸ் ஸாம்போ பைக்கற்'
சாம்போ...? ஜவானுக்கு புரிய வைக்கிறார்.
'எக் சாம்போ...எக் எக்... 'முட்டையிலிருந்து தயாரிக்கப்பட்ட சாம்போ என்று அவர் விளக்குகிறார்.
ஜவான் புரிந்தது போல தலையாட்டியபடி ஒரு பக்கைற்றை பிய்த்து எடுக்கிறான்.
கடைக்காரர் பார்த்துக்கொண்டிருக்க, சிரித்த படி திரும்பவும் 'எக்' என உறுதிப் படுத்திக் கொண்டு பிரித்து வாயில் ஊற்றுகிறான்.
கடைக்காரர் தலையில் கையை வைத்து கத்துகிறார்:
'ஐயோ அது முட்டையில்லை, முட்டை சாம்போ.'

## ஒரு டிக்ஷனறிக்கதை

3 ஆனையிறவு புகழ்பூத்த இலங்கை இராணுவ சோதனை முகாம்.
யாழ்ப்பாணத்திலிருந்து வந்த பல்கலைக் கழக மாணவன் ஒருவனது உடமைகள் பரிசோதிக்கப்படுகின்றன.
தடிமனான ஒரு ஆங்கிலப் புத்தகத்தை காட்டி ஒரு ஆமி கேட்கிறான்
'மேக்க மொக்கத?'
'டிக்சனறி'- பயந்தபடியே பதில் சொல்கிறான் மாணவன்
'டிக்சனறி' - இராணுவத்தானுக்கு புரியவில்லை.
எடுத்து புரட்டிப் பார்க்கிறான்.
உள்ளே , படங்கள் அச்சிடப்பட் டிருக்கின்றன.
அந்த அகராதி யில் சில சொற்களுக்கு படங்கள் அச்சிடப்பட்டிருப்பதை புரிந்து கொள்ளாமல் தொடர்ந்து புரட்டுகிறான்.
ஆ..ங் இராணுவத்தானின் புருவங்கள் உயர்கின்றன. மாணவனை முறாய்ப்புடன் பார்த்து மிரட்டி தனியாகத் தள்ளிச் செல்கிறான்.
பீரங்கியின் படம் ஒன்று அச்சாகி இருந்த பக்கத்தைக் காட்டியபடி அவனை கழுத்தில் பிடித்து கொமாண்டரிடம் இழுத்துச் செல்கிறான்.
மாணவன் ஏதோ சொல்ல வாயெடுத்த போது-'பளார்' கன்னத்தில் ஒரு அறை. 'கட்ட வாஹென எனவா'(வாயை மூடிக் கொண்டு வாடா).
கொமாண்டர் அதிர்ஷ்டவசமாக டிக்சனறியை தெரிந்து வைத்திருந்தான்.
மாணவன் திரும்பவும் பஸ் ஏறினான்.

குறிப்பு: இந்த மூன்று துணுக்குகட்கும் என்ன சம்பந்தம் இருக்கிறது என்று இப்போது இதை எழுதுகிறாய் என்று நீங்கள் கேட்பது புரிகிறது. அதே கேள்வியை என்னையே நானும் கேட்டுக் கொண்டேன். புரியவில்லை. யாராவது புரிந்தவர்கள் சொல்லட்டும் என்று போட்டு வைக்கிறேன்.

## வைத்திய ஆலோசனைகள்

சரி,
நீங்கள் நோயாளியைக் கூட்டிப் போகலாம்
இவருக்குத் தேவை
ஓய்வு ;

இரும்புக் குழாய்களோ
அல்லது
அது போன்ற பொருட்களோ
இவர் கண்ணில் படவேண்டாம்

நெருப்பும்
புகையும்
நெய்வாசனையும் கூட
இவருக்கு ஒத்துக் கொள்ளாது.

பச்சை
அல்லது கரும்பச்சை
கவிழ்த்து வைக்கப்பட்ட சட்டி
வேலியோரத்தில்
சரசரக்கிற சருகு
இவைகளைத் தவிர்க்கவும்

புலி
வெடி
பீடி மற்றும் இந்தியா, அமைதி
போன்ற வார்த்தைகளை
இவர் முன்னிலையில் பேச வேண்டாம்

துவக்கு, குண்டு
ஷெல் என்பன பற்றி
நான் சொல்ல வேண்டியதில்லை

எல்லாவற்றுக்கும் மேலாக
இவரது உள்ளாடையை
யாரும் மாற்ற முயல வேண்டாம்
இவரது கணவராயினும் சரி.

யுதிஷ்ட்ரா



சரிநிகர், மாதம் ஒரு முறை இனங்களுக்கிடையே நீதிக்கும் சமத்துவத்துக்குமான இயக்கத்தின் சார்பில் (MIRJE) வெளியிடப்படும் இதழாகும். கருத்துச் சுதந்திரமும், பத்திரிகை சுதந்திரமும் பேணப்படுவதற்காகவும் இனத்துவ சமத்துவத்திற்காகவும் சரிநிகர் பாடுபடும். சரிநிகரில் வெளியாகும் எல்லாக் கருத்துக்களும் ஆசிரியருடையதோ அல்லது இனங்களுக்கிடையே நீதிக்கும் சமதத்துவத்துக்குமான இயக்கத்தினதோ கருத்துக்களாக அமைய வேண்டுமென்ற கட்டாயமில்லை. பத்திரிகா நாகரிகத்தையும் தர்மத்தையும் பேணியமைந்த எவ்வகையான மாற்றுக் கருத்துக்களையும் சரிநிகர் பிரசுரிக்கும்.

எல்லாத் தொடர்புகளுக்கும்:

ஆசிரியர்
'சரிநிகர்'
6, அலோசாலை,
கொழும்பு - 3.

சந்தா:
ஒருவருடம் :
உள்நாடு: 60/-
வெளிநாடு: 15 US $

சந்தாவை காசுக்கட்டளை/ தபாற்கட்டளை/ காசோலை மூலமாக MIRJE என்ற பெயருக்கு எடுத்து அனுப்பி வையுங்கள்.

நன்றி - நூலகத்திட்டம்



இரு வேறு கருத்துகளுக்கு இடமளிக்கக் கூடிய Suicide Killers எனத் தலைப்பிடப்பட்ட வீடியோ நிகழ்ச்சியைத் தனது Inside Story என்ற வரிசையில் பி.பி.ஸி தொலைக்காட்சி, கடந்த வருட இறுதியில் ஒளிபரப்பியது.

# தற்கொலைக் கொலையாளிகள்

திரு.பிரபாகரன் உட்பட தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்க உயர் மட்டத்தலைவர்கள் இதில் ஒரு சேரத் தோன்றியுள்ளமையையும் இந்நிகழ்ச்சி தயாரிக்கப்பட்ட காலப் பின்னணியையும் நோக்கும்போது விடுதலைப்புலிகள் இயக்கத்தினர் இதனை முக்கியமாகக் கருதியிருப்பது தெரிகிறது.

அதுவும் பிரபாகரன் நீண்ட காலத்திற்குப் பின்னர் சர்வதேச மட்டத்திலான, ஒரு வெளிநாட்டுச் செய்தி ஸ்தாபனத்தினருடன் உரையாடுவதற்கு ஒப்புக் கொண்டுள்ளார். பத்திரிகைகளுக்குப் பேட்டி அளிப்பதற்கும் பொது நிகழ்ச்சிகளிற் கலந்து கொள்வதற்கும் மிக மிக அரிதாகவே ஒப்புக்கொள்ளும் பிரபாகரன், பி.பி.ஸி க்குப் பேட்டி அளிக்க ஒப்புக்கொண்டமை வீடியோ நிகழ்ச்சியை விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் எத்தனை முக்கியமாகக் கருதினர் என்பதற்குப் போதுமான சாட்சியாகும்.

ஒரு வருடத்திற்கும் மேலாக இலங்கை ராணுவத்தினருடனான தொடர்ச்சியான யுத்தம், தமிழ் ஈழ விடுதலைப்புலிகள் பற்றிய இந்திய தமிழ் நாட்டு அரசின் கடும்பிடி நடவடிக்கை ஆகியவை விடுதலைப்புலிகள் இயக்கத்தினருக்கு உள் நாட்டிலும் சர்வதேச ரீதியாகவும் பல இடையூறுகளையும், தளர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளது என்பது மறுக்கமுடியாததாகும். இந்நிலையில் தமது அரசியல் இலட்சியத்தையும், தமது போராளிகளின் தியாகத்தையும் தமக்கு யாழ்ப்பாண மக்கள் அளிக்கும் 'ஆதரவையும்' வெளியுலகிற்குத் தெரிவிப்பதற்கும் அதன் மூலம் இழந்து போன ஆதரவை மீண்டும் ஏற்படுத்தவும் ஒரு வாய்ப்பாக பி.பி.ஸி தயாரிக்க விரும்பிய நிகழ்ச்சியை அவர்கள் கருதியிருக்கின்றனர். பி.பி.ஸி யாழ்ப்பாணத்தில் படமாக்கிய காட்சிகள் விடுதலைப் புலிகளின் ஒத்துழைப்பையும், பெரும்பாலும் அவர்களது காட்சித் தேர்வையும் புலப்படுத்துகின்றன.

தமது இயக்கம் பற்றிய சாதகமான அபிப்பிராயத்தை வெளி உலகில் ஏற்படுத்த வல்லது என்று கருதி, விடுதலைப் புலிகளின் உயர் பீடம் காட்சிகளைப் பெரும்பாலும் தேர்ந்து அளிக்க, பி.பி.ஸி குழு தயாரித்த இந் நிகழ்ச்சியில் பெண்கள் பற்றி வெளிப்படுகின்ற அவர்களது பார்வை குறித்து எனது விமர்சனத்தைத் தெரிவிக்க விரும்புகிறேன். பெண்கள், பெண்போராளிகள் பற்றிய விடுதலைப் புலிகளின் பார்வையும், கருத்துநிலையும் அவர்களை அறியாமலே தெளிவாக இந் நிகழ்ச்சியில் உருவாக்கம் பெறுகின்றன. பெரும்பாலான தேசிய இயக்கங்களைப் போலவே விடுதலைப் புலிகளின் தேசியமும் பால் நிலைப்படுத்தப்பட்டதாகவும் (gendered) ஆண் நிலைப்படுத்தப் பட்டதாகவும் Masculinized) உள்ளது என்பதற்கு இவ் வீடியோ நிகழ்ச்சியின் காட்சிகள் துல்லியமான உதாரணங்களாகின்றன.

இந்த வீடியோ நிகழ்ச்சியில் பெண்களைப் பற்றிய பேச்சு இடம் பெறும் போது புலிகளின் பிரதான பேச்சாளர் கலாநிதி பாலசிங்கத்தின் மனைவியான அவுஸ்திரேலியப் பெண் அடேல், விடுதலைப் புலிகள் இயக்கம் பெண்களைச் சமத்துவமாகவே நடத்துகிறது எனவும் பெண்கள் ஆண்கள் போலவே சகலவிதமான பயிற்சிகளும் பெற்று தாக்குதல் உட்பட சகல நடவடிக்கைகளிலும் பங்கு பற்றுகிருர்கள் எனவும் கூறுகிருர்.



இதனைத் தொடர்ந்து பெண்கள் பங்குபற்றும் சில காட்சிகள் பின்வருமாறு:

பெண்கள் இராணுவப் பயிற்சி பெறுவதும் இயக்கத்திற்கும் தலைவர்.வே.பிரபாகரனுக்கும் விசுவாசமாக இருப்போம் என சத்தியப் பிரமாணம் செய்தல்.

அவர்களது சத்தியத்தை ஏற்றுக் கொண்டு அதன் அடையாளமாக சைனைட் மாலை வழங்கப்படுதல்.

காயமடைந்த பெண் போராளி சிகிச்சை பெறுதல்.

அங்கவீனரான பெண் போராளியுடன் உரையாடல்.

பெண் போராளியின் இறுதிக் கிரியை.



—வீடியோ நாடாவிலிருந்து—

இந்தக் காட்சிகள் மேலே உள்ள ஒழுங்குமுறையிலோ, ஒன்றை அடுத்து ஒன்றாகவோ இடம் பெறவில்லை. ஆனால் விடுதலைப்புலிகள் இயக்கத்தினரின் பெண்கள் பற்றிய கருத்து நிலையைத் தெளிவாக்குவதற்காக இவற்றைத் தனியாகத் தொகுத்தேன்.

இந்த காட்சிகளின் உள் உறையும் கருத்துநிலையை வெளிக்கொணர முன்பு தேசிய இயக்கத்தில் பெண்களது பங்கு பற்றுதல் தொடர்பான முற்குறிப்பு ஒன்றைக் கூறவேண்டியது அவசியம். இந்தக் குறிப்பும் தகவல்களும் பின்னால் எனது கருத்தாய்வுக்கும் கூற்றுகளுக்கும் பின்னணியாக அமையும்.

தமிழ் தேசியக் குழுக்களிற் பெண்கள் சேர்வதும், வெளிப்படையான எதிப்பு நடவடிக்கைளிற் பங்கு பற்றுவதும் எண்பதுகளின் ஆரம்பத்திலிருந்து கணிசமாக அதிகரித்தது. அக்காலத்தில் தலைமறைவாக இயங்கிய இக்குழுக்களில் பெண்கள் சேர்ந்தமைக்கு தேசியவிடுதலை நோக்கத்தை விட, சமூகத்தில் அவர்களது தாழ்த்தப்பட்ட நிலையும் முக்கிய தூண்டுதலாக அமைந்தது. மீண்டும் மீண்டும் ஒரே வட்டத்துள் சுழலும் சாதாரண வாழ்விலிருந்து வேறுபட்டதாகவும் அதனுல் ஆர்வமூட்டுவதாகவும் இயக்க வாழ்வு அமைந்திருந்தது.

ஆனுல் ஆண்களால் தோற்றுவிக்கப்பட்டு அவர்களாலேயே வழிநடத்தப்பட்ட தேசிய குழுக்கள், சமூகத்தில் ஏற்கெனவே ஆண் பெண்ணுக்கிடையே நிலவிய வேலைப்பிரிவினையையே கடைப்பிடித்தன. நிதி சேகரிப்பு, செய்திப் பரிமாற்றம் உணவு, மருத்துவம் தொடர்பான வேலைகள் ஆகியவற்றில் ஆரம்பத்தில் பெண்கள் ஈடுபடுத்தப்பட்டனர்.

எனினும் நீண்ட தயக்க, மயக்கங்கள், விவாதங்களின் பின் பெண்களின் இடைவிடாத வற்புத்தல், அதிகளவான போராளிகளைச் சேர்க்க வேண்டிய தேவை ஆகியவற்றின் பயனாக பெண்கள் இராணுவப்பயிற்சிக்கு அனுமதிக்கப்பட்டனர், தாக்குதல்களிலும் பங்கு பற்றினர்.

தமிழ்த் தேசிய வாதக் குழுக்களின் வரலாற்றில் முதன் முதல் பெண்களும் பங்கு கொண்ட இராணுவத் தாக்குதல் 1985 இல் நடைபெற்றது. காரைநகர் கடற்படைத் தளம்மீது ஈ.பி.ஆர்.எல்.எப் மேற்கொண்ட தாக்குதலின்போது அதில் பங்கு பற்றிய சோபா கொல்லப்பட்டார். இதற்கு அடுத்ததாகப் பெண்கள் பங்குபற்றிய முக்கிய தாக்குதல் 1986 இறுதியில் மன்னாரில் விடுதலைப்புலிகள் இயக்கத்தினர் மேற்கொண்டதாக்குதலாகும் அவர்களது இராணுவ அணியின் முக்கியஸ்தர்களில் ஒருவரான விக்ரர் கொல்லப்பட்ட இம் மோதலின் போது, இந்தியாவில் பயிற்சி பெற்ற முதலாவது பெண்கள் அணி பங்கு பற்றியது. முதன் முதலாக இலங்கை ராணுவத்தினர் சிலர் கைப்பற்றப்பட்டதும் இத்தாக்குதலின் போதாகும்.

இதனைத் தொடர்ந்து விடுதலைப்புலிகளின் முக்கியமான தாக்குதல்கள் பலவற்றில் பெண்கள் பங்குபற்றியுள்ளனர். இவற்றில் குறிப்பிடக் கூடியவை 90 இறுதிப்பகுதியில் இடம்பெற்ற கொக்காவில், மாங்குளம் ராணுவமுகாம் தகர்ப்புகளாகும். கொக்காவில் தாக்குதல் ஒன்பது பெண்போராளிகளைப் பலிகொண்டது. மாங்குளம் போரின் போது அதிகளவான பெண்கள் கொல்லப்பட்டனர். இவை இரண்டும் ராணுவரீதியாக விடுதலைப்புலிகளின் முக்கியமான வெற்றிகளாகும். மாங்குளம் வெற்றியின் பின்னரே விடுதலைப் புலிகள் தமது தெற்கெல்லையை நொச்சிமோட்டை வரை விஸ்தரிக்கவும், வடக்கிற்கும் தெற்கிற்குமிடையிலான போக்குவரத்தைத் திறமையாகக் கண்காணிக்கவும் கட்டுப்படுத்தவும் முடிந்தது.

(வரும்)

சி.பௌலேமி

நன்றி - நூலகத்திட்டம்



# இன்றைய யாழ்ப்பாணத்தில் கலை

**கலாநிதி கிருஷ்ணதுரை**

துடிப்பாக இயங்குகின்ற யாழ்ப்பாணத்தில் சில ஆண்டுகளாக யாவும் உறைந்து போய்விட்ட நிலை. 1990 யூனிற்குப் பிறகு யாழ்ப்பாணத்தின் வாழ்க்கை முறை மாறியது. மக்கள் பஞ்சத்தில் ஆலாய்ப் பறந்தார்கள். ஒரு சோற்றுப் பருக்கைக்காக ஓடித்திரிந்தார்கள். இந்நேரத்தில் கலை, கலாசாரம் பற்றி யாரால் சிந்திக்க இயலும் ? மேலே விமானங்கள் குண்டு பொழிய மக்கள் நாடகம் பார்ப்பார்களா ? பதுங்கு குழி தேடி ஓடுவார்களா ? மின்சாரம் இல்லாத நேரத்தில் எந்தக் கலை நிகழ்வுகளுடன் தான் "மினைக்கெட" முடியும் ? எல்லாவற்றுக்கும் மேலாக ஜனநாயகம் மறுக்கப்பட்ட சூழலில் கலைகள் உயிர் வாழ முடியுமா ?

வாழ முடிந்தது மக்கள் நாடகம் பார்த்தார்கள். பாட்டுக் கேட்டார்கள். யுத்தம் தொடங்கி ஆறுமாதம் வரையில் ஒன்றும் இல்லாத சூனிய நிலை. காட்டுக்குள் ஓடியவர்கள்; கடல் தாண்டி தீவுக்குள் ஒளித்தவர்கள் ; வீட்டுக்குள் முடங்கியவர்கள்; வெளியில் சாமான்களுக்காக கியூவில் நின்றவர்கள் என்று மக்கள் அல்லாடிக் கொண்டிருந்தனர். ஆனால் பின்னர் இது தான் யதார்த்தம் என்றான போது, கொஞ்சம் கொஞ்சமாகக் கலை, இலக்கிய முயற்சிகள் அரும்பத் தொடங்கின. ஒரு முறை தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. வே. பிரபாகரன் கலைஞர்களைச் சந்தித்தார். கலைகள், இலயக்கியம் பற்றி உரையாடினார். கலை, பண்பாட்டுக் கழகம் தொடங்கப் பெற்றது. புதுவை இரத்தினதுரை அமைப்பாளரானார். போர்க்கால சூழலில் நிறையப் படைப்பதன் அவசியம் வலியுறுத்தப்பட்டது.

"புலி பற்றி வேண்டாம், போராட்டம் பற்றி கூறுங்கள்." என்றார்கள். ஆனால் படைப்புகளோ புலியைப் புகழ் பாடின. புலிகளுக்கே அலுப்புத் தட்டுகிற அளவுக்கு வரிப்புலி உடுப்புகளுடன் நாடகங்கள் மேடையேறின. சிறுகதைகள், கவிதைகள் வெளிவந்தன. கலாபூர்வமான முயற்சிகளும் அவ்வப்போது இடம் பெற்றன. பெரும்பாலும் நாடகங்களிலேயே இம்முயற்சியைக் காண முடிந்தது.

88, 89 காலப்பகுதிகள் புலிகள் காட்டுக்குள் இருந்த நேரம், இந்திய அமைதி காக்கும் படை அதிகாரம் செலுத்திய காலம். புலிகள் தமிழ்நாட்டுக் கலைஞர்களுடன் தொடர்பு கொண்டார்கள். அங்கு ஒலிப்பதிவு செய்யப்பட்டு சில போர்க்காலப் பாடல்கள் நாடாக்களாக வெளிவந்தன.

"பொங்கிடும் கடற்கரை ஓரத்திலே - மழை
பொழிந்திடும் கார்த்திகை மாதத்திலே
மங்களம் பிறக்கும் நேரத்திலே - நம்
மன்னவன் பிறந்தான் ஈழத்திலே."

எனப் புதுவை இரத்தினதுரையால் இயற்றப்பட்டு பிரபாகரன் புகழ்பாடும் பாடல் வெளிவந்தது. இப்பாடல் புலிகளின் முகாம் அமைந்துள்ள எல்லா இடங்களிலும் முழங்கியது. தமிழகத்தின் பிரபல பின்னணிப் பாடகர்கள் இவற்றைப் பாடினார்கள்.

"நெஞ்சினில் நெருப்பேந்தி வாருங்கள் - புலி
நிச்சயம் வெல்லும் என்று கூறுங்கள்"

எனும் வரிகள் புலிகளின் முழக்கத்திற்கு இன்னோர் உதாரணம். இவ்வாறு ஏனைய இயக்கங்களின் துரோகம், காட்டுக்குள் இருக்கும் புலி மாமா, அடைக்கலம் தந்த வீடுகள், குமரப்பா, புலேந்திரனின் இழப்பு, திலீபனின் தியாகம். ஆகியன பாடு பொருளாயின. இவைகளை மக்கள் முணுமுணுத்தனர். இவை யாவும் தமிழ் நாட்டின் தயாரிப்புகளாக இருந்தன.

ஆனால் தொடர்ந்து இந்திய அமைதி காக்கும் படை வெளியேறியது, புலிகள் வடக்கு-கிழக்கு அதிகாரத்தைக் கைப்பற்றினார்கள். இச்சந்தர்ப்பங்களில் கலைப்படைப்புகளுக்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. யாழ்ப்பாணத்தின் பல்துறைக் கலைஞர்களும் புலிகளால் ஈர்க்கப்பட்டனர். அவர்களுள் தனித்துவம் கொண்டோர் இருந்த போதிலும் தம் தனித்துவம் பேணுவதும் கடினமாக இருந்தது. ஏனையோர் உழைப்பில்லாத சூழல் காரணமாகவும், இயல்பான அவர்களின் "பச்சோந்திப்" போக்காலும், கருத்து ரீதியான உடன்பாடு காரணமாகவும் புலிகளுக்காகப் படைக்கத் தொடங்கினார்கள்.

யாழ்ப்பாணத்தின் பிரபல இசையமைப்பாளர்கள் பாடல்களைத் தொகுக்கத் தொடங்கினார்கள். இசைப்பாடல்களில் முன்னேற்றம் காணப்பட்டது. ஈழத்துக் கவிஞர்கள், ஈழத்துப் பாடகர்கள், ஈழத்து இசையமைப்பாளர்கள் என ஈழத்துக் கலைஞர்கள் முதன்மை பெற்றார்கள். அனேகமான எல்லா ஈழத்து மக்களும் முணுமுணுக்கும் பாடல் இது:

"எதிரிகளின் பாசறையைத் தேடிப் போகிறோம்-தமிழ்
ஈழமண்ணை மீட்டெடுக்க ஓடிப்போகிறோம்
கைவலிக்கும் கால்வலிக்கும் ஆறப்போவதில்லை - நம்
கனவு நனவாகுமட்டும் ஓயப்போவதில்லை."

"தூரம் அதிகமில்லை அந்தோ தெருவில் எதிரி இல்லை"

மண்மேடாய்க்கிடக்கும் அந்த வீடுகளைப் பாரும் - அது
முன்னாளில் தமிழர்களின் குடியிருப்பு ஆகும்.
வயல்வெளிகள் பாரும்
விதைக்கவில்லைப் பாரும்
தமிழர் நிலம் என்பதனால் விதைக்க வில்லைப் போலும்.
அழும் குரல்கள் கேட்கிறதே அகதி முகாம் போலும்-இங்கு
அழும் குழந்தை நாளை வந்து புலிகளுடன் சேரும்.
தமிழர் நிலை தொல்லை தலைவிதிகள் இல்லை.
தலைவன் சொன்ன வேதம் கேட்டு யாகம் செய்கிறோம் - நம்
தலை முறைக்குள் ஈழம் காண நேரில் போகிறோம்
அண்ணன் பெயர் சொல்லு உடன்
அணி வகுத்து நில்லு
அழிக்க வந்த எதிரி மீது அனலெடுத்துச் செல்லு"

இப்பாடலைப் பாடியபடி தான் முகாம் ஒன்றைத் தாக்குவதற்குப் புலிகள் சென்றதாகவும் கதை உலாவுகிறது !

இப்பொழுது தேனீர்க் கடைகளில் சினிமாப் பாடல்கள் ஒலிபரப்ப முடியாது சினிமாப் பாடல்கள் அபூர்வம்.

"இந்த மண் எங்களின் சொந்த மண்
இதன் எல்லையை மீறி யார் வந்தவன்
நிலவளம் உண்டு; நீர் வளம் உண்டு
நிம்மதி ஒன்றுதான் இல்லை. எனினும்
இந்தமண் எங்களின் சொந்த மண்"

இவ்வாறான பாடல்களைத் தான் கேட்க முடிகிறது. கவிதைகள் அபூர்வம்; இவ்வாறான பாடல்கள் தான் அதிகம்.

ஆனால் இப்பாடல்களிலும் கவிதைகள் இல்லாமல் இல்லை.

"ஓ .... மரணித்த வீரனே
உன் சீருடைகளை எனக்குத்தா
உன் பாதணிகளை எனக்குத்தா
உன் ஆயுதங்களை எனக்குத்தா
உன் வீட்டு முகவரியை
உனது இரு கண்ணீரை ........"

இப்பாடலின் கவித்துவம் வியக்கத்தக்கது. இவ்வாறு இசைப்பாடல்களின் வளர்ச்சி இங்கு வெளிப்படையாகத் தெரிகிறது.

---

# நாலு வார்த்தை எழுதவிடு

நாலு வார்த்தை பேசவிடு,
எழுதவிடு
நம் தேசவனப்பை
ரசிக்கவிடு

இது ஈழத்துக் கவிஞன் தமயந்தியால் 1986 இற்கு முன்னர் எழுதப்பட்ட ஒரு கவிதை வரி. மிகுதியை நான் ஏன் சொல்வான்?

## உலா

சட்டநாதனின் 'உலா' சிறுகதைத் தொகுதி வெளிவந்துள்ளது. முன்னர் 'மாற்றம்' எனும் அவரது சிறுகதைத் தொகுதி வெளிவந்திருந்தது. ஈழத்தின் இலங்கையர்கோன், அ.செ.மு., அ. முத்துலிங்கம், எஸ். பொ, செ. யோகநாதன், செ. கதிர்காமநாதன், நந்தினி, சேவியர், சாந்தன், நந்தி . , சிறீதரன், ரஞ்சகுமார் போன்றோரின் வரிசையில் இடம் பெறத்தக்கவர் இந்தச் சட்டநாதன். ஆண் பெண் உறவு பற்றிய இவரது கதைகள் அழகியல் தன்மை வாய்ந்தன. 'இப்படியும் காதல் வரும்' எனும் கதை இப்பொழுதும் ஞாபகத்தில் உள்ளது. இத்தொகுப்பிலும் 'தரிசனம்', 'தளம்பல்', 'ஒதுக்கம்' போன்ற கதைகளில் இவ்வுறவின் அழகியல் வெளிப்பாட்டைக் காணலாம். தலைப்புக்கதையான 'உலா' 'அரும்பு' சிறுவர்களின் உலகத்தை, மனநிலையை வெளிக்காட்டுகிறது. அட்டையை இன்னும் அழகாகக் கொண்டு வந்திருக்கலாம். பழைய வீரகேசரிப் பிரசுரங்களை ஞாபகத்திற்குக் கொண்டு வரும் அட்டை. சட்ட நாதனிடம் ஒரு கேள்வி! ''உங்கள் படைப்புகளில் வரும் பெண்கள் மிகப் பலமானவர்களாகவும், ஆண்கள் மிகப் பலவீனர்களாகவும் சித்திரிக்கப்படுவது ஏன்?''

## மணிவிழா

இது பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்களுக்கு மணிவிழா ஆண்டு. வாழ்த்துக்கள். இவ்விடத்தில் பேராசிரியர் க. கைலாசபதியையும் நினைவு கூர்வது தவிர்க்க முடியாதது. இரட்டையர்களாகத் தமிழிலக்கியப் போக்கை வளப்படுத்தினார்கள். தமிழிலக்கியங்களைப் பொருள் முதல் வாதக் கண்ணோட்டத்துடன் அணுகினார்கள். நவீன தமிழிலக்கியங்களை முதன்மைப் படுத்தினார்கள். பண்டித மரபுக்கு எதிரான இவர்களது தாக்குதல் முக்கியமானது. இருவரும் எதைப் பற்றி என்ன சொல்லப் போகிறார்கள் எனத் தமிழ் அறிஞர் உலகம் எதிர்பார்க்கும் அளவுக்கு இவர்களின் கருத்துக்கள் முக்கியப்பட்டது. ஆராய்ச்சித் துறையில் தமிழ் நாட்டை ஈழத்திற்கு ''அடிமை'' படுத்தினார்கள். மௌனகுரு, நுஃமான், சித்திரலேகா போன்றோர் இவர்களால் உருவாக்கப்பட்டனர். பேராசிரியர் சிவத்தம்பியை தமிழ் நாடக ஆராய்ச்சிக்காக, நவீன தமிழிலக்கிய வளர்ச்சிக்காக, தமிழிலக்கிய வரலாற்றின் விரிவு படுத்தலுக்காகப் போற்றுவோம். அவரது நீண்ட கால வாழ்வானது, தமிழ் மொழியினதும், தமிழ் மக்களின் வாழ்வியல் அம்சங்களினதும் ஆராய்ச்சிக்கான தொடர்ச்சி என்பதும் ஒரு காரணமாகையால் வாழ்த்துவோம்.

## மூன்று நாடகங்கள்

மூன்று நாடகங்கள் சமீபத்தில் மேடையேறியதாக யாழ்ப்பாணத்திலிருந்து வந்த நண்பர் கூறினார். இந்நாடகங்களின் தயாரிப்புக்களில் நாடக அரங்கக் கல்லூரியின் பங்களிப்பு கணிசமானது. **உயிர்த்த மனிதர் கூத்து', 'எந்தையும் தாயும்', 'அன்னை இட்ட தீ'** ஆகிய நாடகங்களே அவை. மூன்று நாடகங்களும் தமிழ் மக்களின் தேசிய இனப் பிரச்சினை தொடர்பானவை. மூன்று நாடகங்களையும் பார்ப்பதற்குச் சந்தர்ப்பம் கிடைக்கப் போவதில்லை என்பதுதான் துயரம். முன்னர் வீரசிங்கம் மண்டபத்தில் பண்ணைக் கடல் பக்கமிருந்து வரும் படபடக்கும் காற்றையும் ரசித்தபடி, நாடக அரங்கக் கல்லூரி, அவைக் காற்றுக் கலைக்கழகத்தினரின் நாடகங்களைப் பார்த்தது; யாழ் பல்கலைக்கழக கலாசாரக் குழுவின் 'மண் சுமந்த மேனியர்' ஐ ஓடி ஓடிப் பார்த்தது என்பதெல்லாம் இப்பொழுது ஏனோ ஞாபகத்திற்கு வருகிறது. நண்பர் யாழ்ப்பாணத்தில் நிகழும் கலாசார நிகழ்வுகள் பற்றி எழுதித் தருவதாகக் கூறினார். அக்கட்டுரையும் அருகில். 'உயிர்த்த மனிதர் கூத்தின் இறுதிக் கவிதை வரி இது:

''உயர்ந்தவர்கள் நாமெல்லாம்

உலகத்தாய் வயிற்று மைந்தர்

நலிந்து இனிக் கிடக்க மாட்டோம்

நாமெல்லாம் நிமிர்ந்து நிற்போம்''

தூர்யா

நன்றி - நூலகத்திட்டம்



# தமிழ் அகதி -

**- ரவீந்திரன்**

''அகதி முகாம்களில் இப்படி கும்பலாக ஆட்களைப் போடுவதால் சுகாதார வசதிகள் பெரிதும் பாதிக்கப்படுகின்றன. தண்ணீர் வசதி மிகவும் பெரிய சிக்கலாக மாறுகிறது. உடுப்பு துவைப்பதற்கு வசதியில்லாமல் அகதிகள் கஷ்டப்படுவதைக் கூட காணக் கூடியதாக இருந்தது. மலகூடங்கள் நம்மூர் பொது மலகூடங்களை ஞாபகப படுத்துமளவுக்கு மோசமாக இருந்ததையும் காணக்கூடியதாக இருந்தது... அகதிமுகாம்களைத் தாக்குவது, ஏன் தீ வைப்பது கூட நடந்துள்ளது..''

ஆயினும் இவற்றையும் மீறி அங்கு அகதிகள் வந்து குவிந்த வண்ணம் இருக்கிறார்கள் நிறைந்த எதிர்பார்ப்புக்களுடன் அப்படி வருகிற அகதிகளிடம் பல்வேறுவிதமான குண இயல்புகள், மாற்றங்கள் ஏற்பட்டு வருவதும் தெரிகிறது. வெறுமனே உழைப்பை மட்டுமே செய்பவர்கள், சொந்தமாக தொழில் செய்பவர்கள், தொழிலோடு 'கிறிக்கற் கிளப்' போன்ற கழக நிகழ்வுகளில் ஈடுபடுபவர்கள், சமூக அக்கறையுடன் வேறு கலை, கலாசார, பத்திரிகை துறைகளில் ஈடுபடுபவர்கள், அர்சியலில் ஈடுபடுபவர்கள், எல்லாவற்றையும் விட்டு விட்டேத்தியான ஜேர்மனிய-தமிழ் இரண்டும் கெட்டான் அவியல் கலாசார்ம் ஒன்றுக்கு பலியாகிப் போனவர்கள், ஒருவகை வன்மம் தீர்க்கும் வெறியுடன் சட்ட விரோத செயல்களில் கூட ஈடுபட தயங்காமல் செயற்படுபவர்கள் என்று பல்வேறு விதமான ஆட்களை இந்த அகதி வாழ்வு உருவாக்கி விட்டுள்ளது. இங்குள்ள காலங்களில் இருந்தது போலவே அங்கேயும் ஒரு விழிப்புணர்வு மந்த நிலை - குறிப்பாக தமது நிலை குறித்து இருக்கத்தான் செய்கிறது. குறிப்பாக குர்திஷ் மக்கள் அங்குள்ள பலமான அரசியல் முற்போக்கு அணிகளுடன் சேர்ந்து நடாத்துகிற போராட்டங்களை கூட நம்மவர்கள் அறிந்து கொள்ளாமல் இருப்பதை அவதானிக்க கூடியதாக இருந்தது''

ஜேர்மன் சென்று வந்த அந்த நண்பர் சொன்ன தகவல்களுக்கு மேலாக பல புதிய விடயங்கள் இன்றும் வந்து கொண்டிருக்கின்றன.

“நான் எற்கனவே குறிப்பிட்ட “சமூக அக்கறையுள்ளவர்கள்” அகதிகளின் நிர்கதியான நிலை. அவர்கள் அரசுகளாலும் அரசின் சமூக நிறுவனங்களாலும் கவனிக்கப்படும் விதம், நாட்டில் நடக்கும் சண்டையினால் ஓடித் தப்பி வந்தவர்களாக இவர்கள் இருக்கக் கூடும் என்று மனிதாபிமான அணுகுமுறைக்கு நேர் விரோதமான முறையில், கிரிமினல்களை நடாத்துவது போல நடாத்துதல், கணவன் மனைவி என்பதைக் கூடக் கவனியாது வெவ்வேறிடங்களுக்கு அவர்களைப் பிரித்து அனுப்புதல், அகதிகளை திருப்பி அனுப்பும் நோக்குடன் புதிய சட்டங்களை கொண்டுவருதல் போன்றவற்றிற்கு எதிராக செயற்பட வேண்டும் என்று வலியுறுத்தி வருகிறார்கள்.



அகதிகளின் வதிவிடங்களாக மாறும் 'கொண்டயினர்கள்'

இதையிட்டு மிகுந்த விழிப்புணர்வுடன் இருக்கும் அவர்களின் முயற்சிகள் அவ்வளவு பெரிய ஆதரவைப் பெற்றதாகத் தெரியவில்லை. இவை எவ்வளவோ முக்கியத்துவம் வாய்ந்தவையாக இருந்த போதும், இவை குறித்து ஒரு வகை அசமந்தமான நிலையே நிலவுகிறது. பிற நாட்டு அகதிகள் இவை தொடர்பாக செயற்படும் வேகத்துடன் ஒப்பிடுகையில் எம்மவர்களின் செயல்வேகம் பூச்சியமென்றே சொல்ல வேண்டும். குறைந்த பட்சம் பிறநாட்டு அகதிகள் நடாத்துகின்ற போராட்டங்களில் கலந்த கொள்கிற அளவுக்கு கூட அல்லது அதைப் பார்க்கப் போகிற அளவுக்கு கூட எம்மவர்களிடம் அக்கறை இருப்பதாக தெரியவில்லை.

தமிழ் அகதிகள் குறித்த அரச நடவடிக்கைகளையிட்டு அசமந்தப் போக்குடன் இருப்பவர்களில் பெரும்பாலானவர்களிடம் தாம் திருப்பி அனுப்பப்படுவோம் என்ற அச்சம் இருந்த போதும், அனுப்ப மாட்டார்கள் என்ற ஏதோ ஒரு நம்பிக்கையில் (இந்த நம்பிக்கைக்கான காரணம் எதுவும் அவர்களுக்கு இருப்பதாக தெரியவில்லை) வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். தாம் அங்கு தொடர்ந்து இருப்பதற்கான ஏதாவது வழிவகைகளை ஆராய்ந்து, அல்லது 6 மாதத்தில் “காட்” கிடைக்கிற போது(!) கனடாவுக்கு போக முயற்சிப்பது என்று அவர்களின் வாழ்வு ஒரே “ஓட்டமாக”வே உள்ளது. ஓடிக் கொண்டிருக்கும்வரை இவை துரத்திக் கொண்டேயிருக்கும் என்பது பலருக்கு முக்கியமாகப் படவில்லை.



அகதிமுகாம் ஒன்றின் மலகூடம்

நாட்டில் நடக்கிற போராட்டம் சீரழிந்து, தமிழனின் நிலை மோசமாகிப் போவதற்கும் இந்த ஓட்டத்திற்கும் ஒரு தொடர்பு இருக்கிறது என்று நான் நினைக்கிறேன். என்ன தான் அவர்களது வாழ்வு முறையும் தேவையும் அவர்களுக்கு இதற்கான நேர வசதியையும் வாய்ப்பையும் கொடுக்கவில்லை என்ற போதும், எமது நாட்டின் விடுதலை போராட்டம் “யாரோ சிலரின் ” நடவடிக்கை என்றும், எமக்குச் சம்பந்தமில்லாத நடவடிக்கை என்றும் இருந்து வரும் எமது தமிழ் சமுதாயத்தின் “சிந்தனைச் செல்வத்தின்” ஒரு அம்சம் என்றே நான் நினைக்கிறோன்.

* * * * *

கனடாவிலிருந்து வாசகர் ஒருவர் அனுப்பிய கடிதம் ஒன்றிலிருந்து ஒரு பகுதி அருகிலே பிரசுரிக்கப்பட்டுள்ளது. இக் கடிதத்தில் குறிப்பிடப்படும் விடயங்கள் ஒன்றும் புதியவை அல்ல. அவை ஐரோப்பிய நாடுகளிலும் தொடர்வது ஒன்றும் புதியது அல்ல. இங்கிருந்து வெளியேறுகின்றவர்களில் கணிசமானோரின் நோக்கம் பணம் சேர்ப்பது. ஏற்கனவே தொடர்ந்து. ஏற்பட்டு வந்த மாற்றங்களால் தகர்ந்து வந்த சாதீய சமூக அந்தஸ்துகள், தொடர்ச்சியான யுத்தம் ஏற்படுத்தியுள்ள பொருளாதாரம் உட்பட்ட அனைத்து நெருக்கடிகளாலும் மேலும் தகர்நதுள்ளது. இதை நிலை நிறுத்திப் பேண கிடைத், துள்ள ஒரே நம்பிக்கையாக அவர்களுக்கு இன்று தோன்றுவது வெளிநாட்டு “அகதி” வாழ்வு. இது எதைக் கொடுக்காவிட்டாலும், பொருளாதார ரீதியிலான ஒரு பலத்தை கொடுக்கவே செய்கிறது.



தனிமைப்படுத்தப்பட்ட அகதிமுகாம் ஒன்று

ஆசிரியருக்கு,

மேலும் உங்கள் சரிநிகர் 16 வது இதழில் இடம்பெற்ற தமிழ் அகதி என்ற கட்டுரையில் கொழும்பிலும் அதாவது இலங்கையில் நம்மவர்களின் கூத்துக்களை மட்டும் எழுதியிருந்தீர்கள். அதே நேரத்தில் மேற்குலகில் வாழும் நம்மவர்கள் செய்யும் கூத்துக்களையும் கண்டிப்பாக மற்றவர்களுக்கு தெரியப்படுத்த வேண்டும். உதாரணமாக இங்கு தம்மை உயர்ந்த சாதியினர் என்று சொல்லிக் கொள்ளும் பலர் இங்கு செய்யும் வேலை இலங்கையில் மிகவும் இழிவு வேலை என்று இவர்களாலேயே சொல்லப்படும் மலசலகூடம் கழுவுதல், கூட்டுதல், துடைத்தல் (இங்கு பெருமையாக நான் **Janitor's** வேலை செய்கிறேன் என்று சொல்லிக் கொள்வார்கள்) போன்ற வேலை செய்து கொண்டு பொய்களை ஊருக்கு எழுதி பெண் எடுக்கிறார்கள். உதாரணமாக இந்த வேலை செய்த ஒருவர் தான் கிளீனிங் செய்யும் **Bank**இல் கோட் சூட்டுடன் வேலை செய்வது போன்று படம் எடுத்து கொழும்புக்கு அனுப்பி ஒரு அப்பாவி பெண்ணை ஏமாற்றி இருக்கிறார். அப்பெண்ணின் வீட்டாரிடம் பல லட்சங்கள் சீதனமும் பெற்றிருக்கிறார். இன்னுமொருவர் **Security guard** (அதாவது நம் உயர் சாதியைப் பொறுத்த மட்டில் காவலாளி வேலை) வேலை செய்து கொண்டு அந்த உடையுடன் படம் எடுத்து ஏதோ தான் இங்கு பொலிசில் வேலை செய்வது போன்று பிரமையை எற்படுத்தி ஒரு அப்பாவிப் பெண்ணை ஏமாற்றி இருக்கிறார். இவரும் பல லட்சங்களை சீதனமாக பெற்றிருக்கிறார். இப்படியான கூத்துக்கள் இங்கு கணக்கிலடங்கா. பாரிஸ், ஜேர்மனி, சுவிசிலோ நம்மவர்கள் வீட்டுக்குப் பணம் அனுப்பாமல் தென்னிந்தியாவிலிருந்து வரும் நடிகைகளுக்கு மேடையில் ஏறி சங்கிலி போட்டு படம் பிடித்துக் கொள்கிறார்கள். இலங்கையிலும், தென்னிந்தியாவிலும் நம் அகதிகள் படும் வேதனைகளை எள்ளளவும் எண்ணிப் பார்க்காதவர்கள். மேற்குலகில் பெரும்பாலானோர் கூத்தடித்தாலும் சிலர் உண்மையிலே கஷ்டப்பட்டு தங்கள் தாய், தந்தையர், சகோதரங்கள், ஏன் மற்றையோர்க்கும் உதவி செய்கிறார்கள் என்பதை மறுக்க முடியாது.

தமிழ் அகதி என்ற கட்டுரையில ஜேர்மனியில் உள்ளவர்கள் அடிக்கடி “சைசே” என்று சொல்வதாகவும் அதற்கு அர்த்தம் மலம் என்று எழுதியிருந்தீர்கள். அனால் “சைசே” என்பதற்கு உண்மையான அர்த்தம் பன்றி என்பதுதான்.

நன்றி - நூலகத்திட்டம்



# இந்தியா ? எங்கே போகிறது?

முஹம்மட் ஹுசைனால் எழுதப்பட்ட இக்கட்டுரை இந்தியாவின் அண்மைக்கால மாற்றங்களைப் பற்றி சில அவதானங்களைத் தருகிறது.

நன்றி: THIRD WORLD NETWORK FEATURES

ராஜிவ் காந்தியின் படுகொலையைத் தொடர்ந்து வந்த தேர்தலுடன் நாட்டின் பொருளாதார நிலை மிகவும் மோசமான வங்குறோத்துக்குள்ளாகியது. உண்மையில் சந்திரசேகர் பிரதமராக இருந்த காலத்தில் இந்நிலைமை வருவதற்கான சூழ்நிலை ஏற்கனவே உருவாக்கப்பட்டிருந்தது. குவைத் மீதான ஈராக்கின் ஆக்கிரமிப்பு சோவியத்துடனான இந்தியாவின் ஆட்டம் கண்டு கொண்டிருந்த உறவில் வெடிப்பை ஏற்படுத்துவதில் ஒரு ஊக்கியாகத் தொழிற்பட்டது. தன்னுள் மிகவும் நெருக்கடிக்குள்ளாகி வந்த சோவியத் ரூபா/எண்ணை மாற்றீட்டு வியாபார முறைக்கு மேலும் உதவமுடியாத நிலைக்குள்ளானது. ஆயினும் ஈராக்கிற்கு அளித்த பெருமளவு ஆயுதங்களுக்கான பணத்தை எண்ணையாக இந்தியாவிற்கு ஈராக் வழங்கும் ஒழுங்கொன்றை ஏற்படுத்தித் தந்தது. இது குவைத் ஆக்கிரமிப்புடன் தொடரமுடியாத நிலைக்குள்ளாக்கப்பட்டது.


சர்வதேச நாணய நிதியத்தை (IMF) சேர்ந்தவர்கள் ஏற்கனவே புதுடில்லிக்கு அடிக்கடி வந்து போகத் தொடங்கியிருந்தனர். சந்திரசேகர், அமெரிக்க பி.52 (B52) 'பொம்மர்களுக்கு' எரிபொருள் நிரப்பிக் கொண்டு வளைகுடாவிற்குப் பறந்து போக அனுமதி வழங்கினார். கொங்கிரஸ் (ஐ) இன் தலைவர் என்ற முறையில் ராஜீவ் காந்தி, இதை ஒரு பெரிய பிரச்சாரத்திற்கான பிரச்சினை ஆக்கிக் காட்டிய போதும் தொடர்ந்து நடந்த நிகழ்ச்சிகள் அமெரிக்காவுடனான பேரங்கள் முறிந்து விட்டதாகக் காட்டும் முயற்சியாகவே இருந்தன. உண்மையில் சந்திரசேகர் செய்ததெல்லாம் உத்தரவு கொடுத்தது மட்டுமே. ஏற்கனவே ராஜீவ் காந்தி உருவாக்கி விட்டிருந்தார். இஸ்ரேலுடனான உறவை மேம்படுத்தியதுடன் பம்பாயில் ஒரு ஸ்தானிகராலயம் போல இயங்கும் அளவிற்கு ஒரு அலுவலகமும் உருவாக்கப்பட்டிருந்தது.

தேர்தலுக்குப் பிறகு நரசிம்மராவின் கொங்கிரஸ் அரசு சர்வதேச நாணயநிதியம், ( I.M.F) உலக வங்கியின் மடியில் மின்னல் வேகத்தில் விழுந்ததும் அல்லாமல், 60 பில்லியன் US டொலருக்குக்கு சேவை செய்யவும், நாட்டின் பொருளாதாரத்தை பாழடிக்கும் விதத்திலும் அவதானகரமான அவற்றின் நிபந்தனைகளுக்கும் ஒப்புக்கொடுத்தது. மேலும் ராஜீவ்பாணி பொருளாதார 'தாரள மயமாக்கம்' வெளிநாட்டுப்பணத்தை இன்னும் அதிகளவில் கடனாக வாங்கும் தேவையை உருவாக்கியுள்ளது.

இந்தியாவின் நிதி அமைச்சர் , சர்வதேச நாணயநிதியம் , உலகவங்கி ஆகியவற்றின் மிகச் சிறந்த இலட்சிய கூட்டாளியாகிவிட்டார்.

இந்த காப்பாற்றும் நடவடிக்கைகளுக்கான பொருளாதார ரீதியான விலை என்னவென்பது இன்னும் சில காலங்களில் தெரியவரும். ஆனால் அதற்கான அரசியல் விலை இப்போதே வெளிப்படையாக தெரியத் தொடங்கியுள்ளது. மூன்றாம் உலகின் 'சம்பியனாக' இருந்த இந்தியாவின் நிலை இப்போதைய வியாபார பேரங்களில் கவனிப்பாரற்ற ஒன்றாக மாறிவிட்டது.

இந்தியாவின் சுங்கவரி மற்றும் வணிகம் தொடர்பான ஒப்பந்தத்திற்கான ( GATT) பேரத்தில் அசைக்கமுடியாத நிபுணத்துவம் எங்கே போனதென்று தெரியவில்லை. உலக வளங்கள் மீதான பல்தேசிய மேலாதிக்கத்திற்கு எதிரான இந்தியாவின் அடிப்படை நிலைப்பாடு கைவிடப்பட்டுவிட்டது. இவற்றின் விளைவாக (U.S.T.R) ஐக்கிய அமெரிக்க வணிகப்பிரதிநிதி இந்திய இறக்குமதிக்கு எதிரான நடவடிக்கைகளை அமெரிக்காவில் எடுப்பதற்கான முன்மொழிவுகளை முன்வைத்துள்ளனர்.



அடுத்த இலக்கு இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கை. இஸ்ரேலுடனான உறவை சுமூகமாக்கியது. ஏற்கனவே அமெரிக்காவிடம் இருந்து சமிக்ஞைகள் காட்டப்பட்டுள்ளன. இதற்கான ஆரம்பமாக சியோனிசத்தை ஒரு இனவாதமாக குறிப்பிடும். ஐக்கிய நாடுகள் தீர்மானத்தை விலக்கிக் கொள்வதற்கு சார்பாக வாக்களிக்குமாறு பிரதமராவிடம் ஜோர்ஜ்புஷ் வேண்டியுள்ளார். பிறகு இந்தியா இஸ்ரேலுடனான இராஜதந்திர உறவுகளை உருவாக்கும் வாய்ப்பை பெற்றுக்



ரஜீவ்

கொள்ளும். சில மாதங்களுக்கு முன் காஷ்மீர் விடுதலைப்போராளிகளால், தங்களை உல்லாசப்பயணிகள் எனக் கூறிக்கொண்ட இஸ்ரேலிய ஏஜன்டுகள் கடத்தப்படும் வரை இது வெறும் மூடு மந்திரமாகத்தான் இருந்தது.

இவற்றுக்கான 'வெகுமதிகள்' வெளிப்படையானவை. காஷ்மீர் தொடர்பான ஐ.நா தீர்மானத்திற்கு மதிப்பளிக்கும்படி தற்போது இந்தியாவை அமெரிக்கா கோருவதில்லை. அமெரிக்காவும் இங்கிலாந்தும் காஷ்மீரில் இந்தியப் படைகள் செய்யும் அட்டூழியங்களைப் பொருட்படுத்தாது விட்டுள்ளன.

1982 ஜனவரி 6ம் திகதி கார்டியனில், பிரிட்டிஷ் உள்துறைச் செயலாளர் இந்தியா வந்து திரும்பிய பின் வெளிவந்த செய்தியின் படி, டெல்லியின் அனைத்துப் பத்திரிகைகளும் திரு. ஜேம்ஸ் பேக்கர் பயங்கரவாதத்தைச் சாடியது பற்றியும் இந்தியப்படைகள் இரத்தக்களரியாக இருக்கும் பஞ்சாப் காஷ்மீரில் நடந்து கொள்ளும் நடைமுறையைப் பாராட்டியதையும் ஏற்புடன் பிரசுரித்திருந்தன. இந்த மானிலங்களில் கடந்த ஆண்டு மட்டும் 6000 மக்கள், பாதுகாப்புப் படைகளினாலும் பிரிவினைவாத தீவிரவாதிகளாலும் கொல்லப்பட்டுள்ளனர்.

உண்மையில் நிச்சயமான, உத்தியோக பூர்வ செய்திகளின்படி பஞ்சாப்-காஷ்மீரில் நடக்கும் அசிங்கமான பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளில் செய்த குற்றங்களுக்காக இன்றுவரை பாதுகாப்புப் படையின் ஒரு நபர் கூட விசாரிக்கப்பட்டு தண்டிக்கப்படவில்லை. ஒரு சில இராணுவத்தினர் தற்காலிகமாக நிறுத்தப்பட்டதோடு அல்லது இடமாற்றம் செய்யப்பட்டதோடு சரி. எண்ணிக்கையற்ற உயர் மட்ட உத்தியோகபூர்வ விசாரணைகள் எவையும் ஒரு நீதிமன்ற நடவடிக்கைக்காக சமர்ப்பிக்கப்படவில்லை.

பாகிஸ்தானுடைய அணுசக்தி திட்டம் மீதான அமுக்க அதிகரிப்புக் காரணமாக பாகிஸ்தானுக்கான அமெரிக்க நிதி உதவிகள் வெட்டிக் குறைக்கப்பட்ட அதே வேளை, இந்தியாவின் இத்திட்டமானது குற்ற



சந்திர சேகர்

மற்றதாக அங்கீகரிக்கப்பட்டது. ஜனவரி 1992இல்,செனற் உறுப்பினர் லாரி பிரஸ்லர்(Larry Pressler) இந்தியாவிற்கு வருகை தந்த பின் (இவர்தான் அணுவாயுத உற்பத்தி தடயங்களை காணக்கூடியதாக இருக்கின்றது என்று கூறி பாகிஸ்தானிற்கான அமெரிக்க உதவிகளை நிறுத்தும் சட்டத்திருத்தத்தை உருவாக்க காரணமாக இருந்தவர்) இவ்வாறு தெரிவித்திருந்தார். ''அந்த நாட்டில் ஒரு அணுவாயுத திட்டமிருப்பதாக நான் நினைக்கவில்லை''.

1985இல் ரோமானியாவிற்கு செல்வதில் இருந்து திருப்பியனுப்பப்பட்ட 12.5 தொன் பார நீரைப் பெற்றுக் கொண்டநாடு இந்தியாவே என்பதை நோர்வேஜியர்கள் ஆதாரபூர்வமாக கண்டுபிடித்ததொரு வேளையிலேயே இது நடந்தது. பாரநீர் அல்லது தியூத்தேரியம் ஒட்சைட், அணு ஆயுத உற்பத்தியிலும், அணுக்குண்டு தயாரிப்பிலும் பயன்படுத்தப்படும் புளுட்டோறியத்தை தயாரிப்பதற்கு பாவிக்கப்படுவது தெரிந்ததே.

உத்தியோகபூர்வமாக, அமெரிக்காவைப் பொறுத்தவரை இந்தியா இப்போது எந்த அணு ஆயுத திட்டத்திலும் ஈடுபட்டிருக்கவில்லை.

இந்தியா தற்போது கூட்டுச்சேரா இயக்கத்தில் தனக்கிருந்த ஈடுபாட்டைக் கைவிட்டதுடன் லொக்கர்பே குண்டு வெடிப்பிற்கு காரணமானவர்களாகக் குற்றம் சாட்டப்படும் லிபியர்களை வெளியேற்றுமாறு லிபியாவை நிர்ப்பந்திக்கும் தீர்மானத்தில் அமெரிக்காவுடன் சேர்ந்து வாக்களித்தல் போன்ற நடவடிக்கையில் ஈடுபடவும் தொடங்கியுள்ளது.

சோவியத்தின் திடீர் உடைவும், இந்தியாவின் அம்பலமாகிப் போன நிலைமையும் சேர்ந்த இத்தகையதொரு யு (U) வளைவை எடுக்க இந்தியாவுக்கு உதவியதுடன் நாட்டின் நீண்டகால நலனுக்கு இது முக்கியமானதொன்றென நியாயப்படுத்தவும் வாய்ப்பளித்துள்ளன. இது நாட்டினுள் எத்தகைய எதிர் விமர்சனமும் எழாமல் செய்யவும் வாய்ப்பளித்துள்ளது. எழுந்த ஒரேயொரு எதிர்ப்பு, பெருமளவு முஸ்லீம் சிறுபான்மை மக்களிடமிருந்து வந்த ஒன்று மட்டுமே. அதுவும் பெருமளவிற்கு இஸ்ரேலுடனான புதிய இராஜதந்திர ரீதியான உறவு குறித்தே எழுந்தது. அமெரிக்கா தவித்துப்போயிருந்த கொங்கிரஸ் (ஐ)யை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து மட்டுமல்லாமல், இன்னொரு வஞ்சகமான திட்டத்தையும் கொண்டிருந்தது. பாரதிய ஜனதாக் கட்சியின் தலைவர் முரளி மனோகர்ஜோஷி, அயோத்தியப் பிரச்சினையை கையாளுவதில் தம் கட்சிக்கு உள்ள இயலாமையை மூடி மறைத்து மக்களின் கவனத்தை திருப்புவதற்காக தமது ''எக்தா யாத்ரா'' (ஐக்கிய யாத்திரை)வை ·தலைமை ஏற்று நாட்டுக்கு குறுக்காக நீண்டதூரம் நடாத்திக் கொண்டிருக்கின்ற அதே நேரத்தில் எல்.கே.அத்வானி அமெரிக்காவிற்கு பயணமாகிக் கொண்டிருந்தார்.

அத்வானியின் 10 நாள் அமெரிக்க 'யாத்ரா' எந்த அமெரிக்க சார்பாளர்களதும் பொறாமையைத் தூண்டக் கூடியதாக இருந்தது என்கிறது 'இந்தியா ருடே'. இந்திய வலது சாரியைச் சேர்ந்தவரான அத்வானி, அமெரிக்க அரசு உதவி செயலாளர் ரீ. ஸ்சப்பர் (T.Shaffer) போன்றவர்களுடன் கூடிக் குலாவினார். சக்தி வாய்ந்த 'கன்சர் வேட்டிவ் ஹெரிப்டேஜ் பவுண்டேசன் ' உறுப்பினர்களுடன் நன்கு ஒன்றிப் பழகினார். அமெரிக்க யூத இனத்தவர்களின் தோளோடு தோள் முட்டப் பழகினார். சிக்காக்கோ, வொஸ்டன்றோக், லொஸ்ஏஞ்சல்ஸ் ஆகிய இடங்களில் விருந்துக்களில் கலந்து கொண்டார். கட்சியின் கருத்துக்களை உறுதியாக பற்றி நின்று, வாசிங்டன் பத்திரிகையாளர் கிளப்பில் கருத்துக்களை தெரிவித்தார்......

அவரது அமெரிக்க பெரும் பயணத்தின் போது, அத்வானி அயோத்திப் பிரச்சினையை கைவிட்டுவிட்டதுடன் மதச்சார்பின்மையை, அதன்கீழ் எல்லா மதங்களும் வளர முடியும் எனக் கூறிப் புகழத் தொடங்கினார். அமெரிக்கர்கள் மீது அழியாத விதத்தில் பாரதிய ஜனதாக் கட்சியின் பற்குறியைப் பதித்து வைத்த



அத்வானி

'கடி' இது தான் - இது அத்வானியால் நேரடியாக அறிவிக்கப்பட்ட கருத்தாகும். அதாவது அவரது கட்சி தற்போது ஒரு அசைக்க முடியாத கட்சியாக பலம் பெற்றுள்ளது அதனுடன் தொடர்புகளைக் கொண்டிருப்பது அமெரிக்காவிற்கு மிகவும் சிறந்தது. அது கம்யூனிச எதிர்ப்பு, தனியார்துறை ஊக்குவிப்பு, நேருவின் சோசலிசக் கொள்கை எதிர்ப்பு, இஸ்லாமிய அடிப்படை வாதப் போக்குக்கு எதிர்ப்பு போன்ற கொள்கைகளைக் கொண்ட ஒரு உறுதியான நீண்ட வரலாற்றைக் கொண்ட கட்சியாகும். இது மூன்றாம் உலகின் தார்மீக தலைமைத்துவத்தைக் கொண்டிருந்த ஒரு அரசிலிருந்து வந்த ஒருவரால் பேசப்பட்ட பேச்சு என்ற முறையில் அமெரிக்கர்களின் காதுகளில் தேனாகப் பாய்ந்தது. அதுவும் வாசிங்டனின் கொள்கை வகுப்பாளர்களது மண்டைகளில் முக்கிய விடயமாக புதிய இஸ்லாமிய அணி அணு ஆயுதமேந்தி நிற்பது பற்றிய நினைவுகள் ஓடிக் கொண்டிருக்கும் இவ் வேளையில் இப்பேச்சு மிகுந்த ஆர்வத்தை தூண்டித்தானிருக்கும் என்பதில் வியப்பில்லை. இந்தியாவின் உள்ளேயான மாற்றங்கள் மேலும் மேலும் முஸ்லீம் மக்களுக்கு கவலை தருவனவாக உள்ளன. கொங்கிரஸ், பாரதிய ஜனதா கட்சியின் கூட்டு, இந்து உயர்சாதி மேலாதிக்க நாட்டின் அதிகார அமைப்பின் மீது தொடர்வதை பாதுகாப்பைத் தொடர்ந்து வருகிறது. உண்மையில் பாரதிய ஜனதா கட்சிக்கு பெருமளவு வாக்குகளைப் பெற்றுத் தரும் ஆர். எஸ். எஸ் என்ற அமைப்பு அக் கட்சியிலிருந்து விலகி கொங்கிரஸை நோக்கி நகரத் தொடங்கியுள்ளது. இந்த நிலை நீடிக்குமானால் இந்தியாவின் சிறுபான்மையினர் முற்றாக வாக்குரிமையற்றவர்களாக மாற வேண்டித் தான் ஏற்படும்.

அமெரிக்காவின் பின்னால் இழுபடுகின்ற, பிலமான இந்து அடிப்படை வாதத்தைக் கொண்ட ஒரு இந்திய பிராந்தியத்தின் மீது அழிவு நடவடிக்கைக்கான ஒரு மையமாகவே அமையப் போகின்றது.

நன்றி - நூலகத்திட்டம்



# கறுப்புப் பூனைகள்

# அரசின்

# விஷேட படைப்பிரிவே

முன்னாள் பிரதிப் பொலிஸ் மா அதிபர் திரு பிரேமதாச உடுகம்பொல அவர்கள் எமது சகோதரப் பத்திரிகையான 'யுக்திய' வுக்கு வழங்கிய பேட்டியைக் கீழே தருகின்றோம்.

தற்போது உடுகம்பொலவிற்கு எதிராக அரசினால் பகிரங்கப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளதும், அவர் மறைந்து வாழ்ந்து வருவதும் தெரிந்த விடயங்கள்.

ஜூலை மாதத்தின் ஒரு பகற்பொழுதில் ''உடுகம்பொலவைச் சந்திக்க விரும்பின் காலிமுகத் திடலில் தாஜ் சமுத்ரா ஹோட்டலுக்கு முன்பாக 2 மணிக்கு நிற்கவும்'' என இனந்தெரியாத நபரால் எமது யுக்திய நண்பருக்கு தொலைபேசி மூலம் அழைப்பு விடுக்கப்பட்டது. அவ்வாறே நண்பர் காலி முகத் திடலுக்கு சென்றதும் வெள்ளை நிற வான் ஒன்றில் அழைத்துச் செல்லப்பட்டு (வானின் கண்ணாடி யன்னல்கள் பழுப்பு நிற கன்வஸ் துணியால் மூடப்பட்டிருந்தன.) உடுகம்பொல இருந்த வீட்டின் கராஜினுள் கொண்டு சென்று இறக்கப்பட்டார். அந்த வீட்டில் வைத்தே இப்பேட்டி வழங்கப்பட்டது.

88,89 களில் ஜே.வீ.பியினர் என்ற போர்வையில் ஆயிரக்கணக்கான இளைஞர்கள் கொல்லப்பட்டனர். காணாமல் போகப்பண்ணப் பட்டனர். இவ்வாறான கொலைகளுக்கும் உடுகம்பொலவிற்கும், கறுப்புப் பூனைகளிற்கும், அரசிற்கும் நெருங்கிய தொடர்பிருந்ததாகப் பேசப்பட்டது;படுகிறது.



**நீங்கள் நீதிமன்றத்தின் முன் ஆஜராக மாட்டீர்களா? நீங்கள் நீதிமன்றத்தின் முன் வந்து உங்கள் தவறற்ற தன்மையை நிரூபிக்க முடியும் தானே?**

நான் நீதிமன்றத்திற்கு மதிப்பளிப்பது உண்மை. நீதியரசர்கள் நியாயமானவர்கள் என்பதையும் ஏற்றுக் கொள்கிறேன். வேறு காரணத்தாலேயே நான் நீதிமன்றத்தின் முன்னே தோன்றாமல் ஒரு சுயாதீனமான ஆணைக்குழுவை நியமிக்குமாறு கூறுகின்றேன். அத்தகைய ஆணைக்குழு நியமிக்கப்பட்டால் அதன் முன்னே நான் கட்டாயம் தோன்றுவேன். அதியுயர் பொலிஸ் உத்தியோகத்தராக நான் கடமையாற்றினேன். எனது கூற்றை அவர்கள் முழுமையாக நம்பலாம்.

**உங்களுக்கு எதிராக தொடரப்பட்டிருக்கும் வழக்குகளில் உங்களின் சார்பில் சட்டத்தரணிகள் தோன்ற விருப்பதாக ஒரு கதை நிலவுகின்றது. அது உண்மையா?**

அது பற்றி தற்போதைக்கு ஒன்றும் கூற முடியாது. நான் சட்டரீதியான சில பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள இருப்பது உண்மை. நான் நீதி மன்றம் செல்ல மாட்டேன். நான் நீதி மன்றத்தில் ஆஜராகாவிட்டாலும் வழக்கை விசாரிக்க முடியும். இது பற்றி நான் எடுக்கும் நடவடிக்கைகளை உரிய சந்தர்ப்பத்தில் முழு நாட்டிற்கும் பிரகடனப்படுத்துவேன்.

**உங்களை கைது செய்வதற்கு பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது அல்லவா? அதன்படி பொலிஸார் உங்களை தேடிக் கொண்டிருக்கின்றார்கள். அவர்கள் கையில் பிடிபட்டால் நீங்கள் நீதிமன்றம் செல்ல நேரிடும் தானே?**

ஆம் அப்படி நடந்தால் நீதி மன்றம் செல்ல நேரும். அப்படி நான் பிடிபட்டால் என்னை மறு உலகத்திற்கே அனுப்புவார்களோ என்று கூற முடியாது என்று கிண்டலாக கூறினார்.

**அது எப்படி?**

அதன் அர்த்தம் இதுதான். என்னைப் பிடிப்பதற்கு பொலிஸார் மாத்திரமல்ல, பல குண்டர்களும் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். கறுப்புப்பூனைகள் அவர்களுள் ஒரு பிரிவினர். அவர்களிடம் பிடிபட்டால் என்னை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கிறார்களோ இல்லையோ. என்னுடைய உடம்பில் ஒரு சிறு துரும்பு கூட மிஞ்சாது. அப்படி நடந்தால் நானும் ரயரிலேயே சாம்பலாக நேரும்.

நான் ஓர் உயர் பொலிஸ் உத்தியோகத்தரின் வீட்டிலிருந்துகொண்டே உங்களுடன் கதைக்கிறேன். பொலிஸ் நண்பர்கள் எந்த உதவியும் செய்வார்கள். எனது நடமாட்டங்களின் போது அவர்களே உதவி செய்கின்றனர். எனது அண்ணாவின் இறுதிச் சடங்குகளில் நான் ரகசியமாக பங்குபற்றவில்லை.

என்னைப் பிடிக்க எத்தனிப்பவர்களுக்கு நான் சவால் விட விரும்புகிறேன். ''முடிந்தால் முன்னைநாள் பிரதிப் பொலிஸ் மா அதிபர் பிரேமதாச உடுகம்பொலவை கைது செய்யுங்கள்''

**நீங்கள் உங்களுடைய கடமையை செவ்வனே செய்தீர்கள் என்று கூறுகிறீர்கள் ஆனால் நீங்கள் கொலை செய்திருக்கிறீர்கள். மனித உரிமைகளை மீறியிருக்கிறீர்கள் என்று உங்களுக்கு எதிராக குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன அல்லவா?**

''அரசாங்கம் எனக்கு எதிராக அத்தகைய குற்றச்சாட்டுக்களை சுமத்தவில்லை. வேறுயாராவது செய்ததாகவும் நான் அறியேன்.நான் ஓய்வில் அனுப்பப்படும்வரை அப்படியான முறையீடு எனக்கெதிராக எங்குமே செய்யப்படவில்லை.

குற்றச்சாட்டுகள் இருந்திருந்தால் ஏன் விசாரணை நடத்தப்படவில்லை. 'லியனாராச்சி' வழக்கின் சந்தேக நபர்களான பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு பாக்கிச் சம்பளத்துடன் தொழில் வழங்கப்பட்டுள்ளது. அந்த வழக்கில் அரசாங்கம் என்மீது மாத்திரம் குற்றம் சுமத்த முடியாது என்று இதிலிருந்து புலனாகிறது.

**அவ்வாறாயின் நீங்கள் ஏன் ஓய்வில் அனுப்பப்பட்டீர்கள்? சர்வதேச ரீதியாக நீங்கள் மனித உரிமைகளை மீறியிருக்கின்றீர்கள் என்று உங்களுக்கு எதிராக குற்றச்சாட்டுக்கள் உள்ளன அல்லவா?**

''இல்லை! இல்லை! இல்லை!. நான் இத்தகைய காரணத்திற்காக ஓய்வில் அனுப்பப்படவில்லை. அது தவறான கருத்து. காரணத்தை நான் கூறுகிறேன். DIGஉடுகம்பொல லலித்திற்கும், காமினிக்கும் உதவி செய்வதாக ஓரிரு உயர் பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஜனாதிபதியிடம் ஓர் அறிக்கையை சமர்ப்பித்திருந்தனர். இதன் காரணமாகவே ஜனாதிபதியின் பணிப்புரையின் கீழ் நான் ஓய்வில் அனுப்பப்பட்டேன். நான் ஓய்வில் அனுப்பப்பட்டு ஒரு சில தினங்களின் பின்னர் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் தனது அலுவலகத்திற்கு என்னை அழைத்து வருமாறு கூறினார்.

''நீங்கள் ஓய்வு பெறுவதற்கு முன் விடுமுறையில் அனுப்பப்பட்டுள்ள காரணத்தினால் உங்களை மூல வேலையில் அமர்த்த முடியாது. உங்களுடைய மனைவி மக்கள் வாழும் அமெரிக்காவிற்கு அனுப்புகின்றேன். நீங்கள் ஓய்வூதியத்தைப் பெற்று அங்கே வாழுங்கள்''

இதனிடையே திரு. காமினி திசநாயக்காவிற்கு எதிராக 'ரல்ஃப் வுல்ஜன்ஸ்' வழக்கின் வில்பட் முதலாளிக்கு நான் நிர்ப்பந்தங்களை ஏற்படுத்துவதாக ஓர் அறிக்கை மேலிடத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. இவ் வழக்கின் முக்கிய சாட்சிக்காரர் வில்பட் முதலாளி. தற்போது திரு காமினி திசநாயக்க இவ் வழக்கு விசாரணையின் பின் விடுவிக்கப்பட்டுள்ள காரணத்தினால் இவ் விடயத்தை நான் அம்பலப்படுத்துகின்றேன். மேற்படி அறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட பின்பு எனது மனைவி அமெரிக்காவில் உள்ள இலங்கை தூதரகத்தில் இருந்து வெளியேற்றப்பட்டார். யாருடையதோ பொய்யான தகவலின் பேரில் இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இதன் பின்னர் எனக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன.

**உங்களை ஓய்வில் அனுப்பும்வரை நீங்கள் கரும்பூனைகளைப் பற்றி சொல்லவில்லையே?.. இதனை ஏன் முன்னரே அம்பலப்படுத்தவில்லை.**

இதற்கு முன்னரும் நான் அம்பலப்படுத்தினேன். குறிப்பிட்ட பிரதேசங்களிலிருந்த இராணுவத் தலைவர்களும் இதை அம்பலப்படுத்தினர். கரும்பூனைகளின் தொல்லைகளை நாம் அரசாங்கத்திற்கும், உரிய அதிகாரிகளுக்கும் அறிவித்தோம். பயங்கரவாதிகளை ஒழித்துக் கட்டும் சாட்டில் அப்பாவி மக்கள் படுகொலை செய்யப்படுவதையும் அதனை உடனடியாக நிறுத்த வேண்டும் என்றும் நாம் கோரினோம். கரும்பூனைகள் விளையாட்டை நிறுத்துமாறு அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா அவர்களுக்கும் வேண்டுகோள் விடுத்தோம் ஆனால் எதுவித பயனும் கிட்டவில்லை

**கரும் பூனைகளுக்கு எதிராக செயல்படுவதற்கு உங்களுக்கு அதிகாரம் இருந்தது அல்லவா? இதனைச் செய்யாமை மறைமுகமாக நீங்கள் கரும்பூனைகளுக்கு உதவி செய்வதாக அமையாதா?**

கரும்பூனைகள் கொழும்பில் இருந்து வந்தன. அல்லது அனுப்பப்பட்டன. அவ்வாறு இல்லாவிடின் குறிப்பிட்ட பிரதேசத்தின் ஆளும் கட்சி அதிகாரி கரும் பூனைகளை அனுப்பி, அவை அனுப்பப்பட்டமை பற்றி அறிவிப்பார் அது மாத்திரமல்ல கரும் பூனைகளின் தங்குமிடமும் உணவும் எங்களாலேயே வழங்கப்பட்டது. கரும்பூனைகளின் செலவினங்களையும் அரசாங்கமே ஏற்றது. அவர்களுக்கு ஆயிரக்கணக்கில் சம்பளமும் வழங்கப்பட்டது. இந்நிலையில் நாம் எப்படி கரும்பூனைகளை கைது செய்வது? குறிப்பிட்ட பிரதேசத்தின் அரசியல் அதிகாரி பெயர்குறிப்பிடும் தனிநபர்களைப் பிடித்து கொலை செய்யும் பொறுப்பு கரும் பூனைகளிடம் ஒப்படைக்கப்பட்டது. அதனைப் பார்த்து சகிக்க முடியாத காரணத்தினாலேயே நாம் உயர் இடத்திற்கு முறையிட்டோம். என்றோ ஒரு நாள் இதனை மக்கள் மத்தியில் அம்பலப்படுத்தும் குறிக்கோளுடனேயே நான் மேற்படி தகவல்களை சேகரித்தேன்.

**''அவ்வாறாயின் இக்கொலைகார அரசியல் அதிகாரிகளின் பெயர்களை அம்பலப்படுத்துவதற்கு உங்களுக்கு ஆற்றல் இருக்க வேண்டும் அல்லவா''?**

''ஆம்!. சுயாதீன ஆணைக்குழுவொன்று எனது சத்தியக் கடுதாசிகளை விசாரணை செய்யும் பட்சத்தில் மேற்படி பெயர்களையும், முகவரிகளையும் நான் அம்பலப்படுத்துவேன். இது உறுதி.

**அரசாங்கம் ஓர் ஆணைக்குழுவை நியமிக்க மாட்டாதாம்.?**

ஆனால் அதற்கும் ஒரு நாள் வரும். இன்றைய நிலைமை தொடர்ந்தும் நீடிக்கப் போவதில்லை. அந்நாளில் நான் பார்த்துக்கொள்வேன்.

**நீங்கள் உங்கள் மனைவி மக்களை சந்திப்பதற்கு வெளிநாடு செல்லவிருப்பதாக அறிகிறோம். ஆனால் உங்களிடம் கடவுச் சீட்டு இல்லை அல்லவா?. நீங்கள் ஒரு வெளிநாட்டுத் தூதரகத்தில் இருப்பதாக கூறுகிறார்கள். இது உண்மையா?**

நான் எதிர்க்கட்சித் தலைவியிடம் மாத்திரமே பாதுகாப்புக் கோரினேன். அவர் எனக்கு ஒரு தகவல் அனுப்பினார். எனக்கு பாதுகாப்பு வழங்க வேண்டும் என்று பகிரங்கமாக கூறினார். வெளிநாட்டுத் தூதரகங்களுக்குச் சென்று நான் மறைந்து வாழ வேண்டிய அவசியம் இல்லை. எனக்கு இப்போது இருக்கும் பாதுகாப்பு போதுமானது. என்றோ ஒரு நாள் எனது மனைவி மக்களைப் பார்க்க நான் செல்வேன். இன்று போக முடியாது என்பது உண்மை. ஆனால் அதற்கும் வெகு விரைவில் ஒரு நாள் வரும்; அல்லது அவர்கள் இங்கு வந்து என்னைப் பார்ப்பார்கள். ஆனால் இந்த அரசாங்கத்தின் கீழ் அல்ல.

**நீங்கள் திரு ஜே.ஆர். ஜெயவர்த்தன அவர்களின் வீட்டில் இருப்பதாகவும் ஒரு கதை நிலவியது?**

அது ரகசியப் பொலிஸாருக்கு உரிய வேலை. நான் இருக்கும் இடங்களையோ இல்லாத இடங்களையோ கூறுவது எனது பொறுப்பு அல்ல.

**நீங்கள் மாலைதீவில் மறைந்திருந்து இங்கு வந்து போவதாக ஒரு கதை?.**

''முன்னர் கூறிய பதிலையே குறித்துக் கொள்ளுங்கள்.

நன்றி - நூலகத்திட்டம்



# புதிய உலகின் கவிஞன்

புகழ் பூத்த கவிஞன் **முகம்மது இக்பாலின்**வாழ்வையும் கவிதையும் சித்தரிக்கும் இந்தப் பாகிஸ்தான் படத்தை **ஷாகித் நடீம்** இயக்கியுள்ளார். முற்போக்காளனாகவும், தீவிர ஏகாதிபத்திய எதிர்ப்பாளனாகவும் அடிப்படைவாதத்தை அறவே வெறுத்தவனுமான இக்பாலின் வாழ்க்கையை ஏழு கட்டங்களாக இந்தப் படம் சித்திரிக்கின்றது. இன்றைய பாகிஸ்தான் ஆட்சியாளர்களினால் தடைசெய்யப்பட்டுள்ள இந்தப் படம் உண்மையில், சில வருடங்களுக்கு முன்பு பாகிஸ்தான் அரச தொலைக்காட்சி நிறுவனத்திற்காகத்தான் தயாரிக்கப்பட்டது என்பது ஒரு முரண்சுவை!. சோவியத் ஒக்டோபர் புரட்சிக்கும் போஸ்செவிக் கட்சிக்கும் ஆதரவாக இருந்தான் என்பது மட்டுமல்லாமல் வளர்முக நாடுகளின் தனித்துவமான ஏகாதிபத்திய விரோத சிந்தனைப் போக்கின் பிதாமகனாகவும் இக்பால் இருந்தான் என்பதை இந்தப் படம் ஆதாரங்களுடன் உறுதியாக விளக்குகிறது.

**அட்டியா ஃபைஸி** எனும் புலமைவாய்ந்த பெண்ணுடன் இக்பாலின் நெருக்கமான - மனோரதியமான உறவு பற்றியும் இந்தப் படம் அழகாகவும் நளினமாகவும் எடுத்துச் சொல்கிறது. இங்கிலாந்து, ஜேர்மனி போன்ற நாடுகளில் தத்தவத்தைப் பயின்றிருந்தாலும் இக்பால் கீழைத்தேய, முற்போக்குச் சிந்தனை ஒன்றினை அடிமட்ட வகுப்பினரின் வாழ்வூடாக உருவாக்க முனைந்தான். தேசிய விடுதலைப் போராட்டங்களின் பின்னான சிந்தனை உலக மாற்றங்களால் உந்தப் பெற்று எவ்வாறு 'பாகிஸ்தான் 'எனும் எண்ணக் கருவை இக்பால் உருவாக்கினான் என்பதுவும் இந்தப் படம் மூலம் தெளிவாக்கப்படுகிறது.

1940 மார்ச் 23 இல் முகமது அலி ஜின்னா சொன்னார்: ''இப்போது இக்பால் உயிருடன் இருந்தால் அவனுடைய கனவை நாம் நிறைவேற்றுவதைப் பார்த்திருப்பான்''.

**1**

பாகிஸ்தானிலிருந்து கிடைத்திருக்கும் இன்னொரு சிறந்த படம் **விஸால்** என்பது. பிரிந்தவர் கூடினால் என்று பொருள் பொதிந்த இந்தப் படம் காஷ்மீர் மக்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தைப் பற்றியது. காஷ்மீர் மக்களின் தலைவிதியை இந்தியாவும் தீர்மானிக்கத் தேவையில்லை; பாகிஸ்தானும் தீர்மானிக்கத் தேவையில்லை; காஷ்மீர் மக்களே தீர்மானிக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி விவரணப் படுத்தும் இந்தப் படத்தை நெறியாள்கை செய்திருப்பவர் ஷாகித் நடீம்.

**2**

தன்னுடைய தீவிரமான கருத்துக்களுக்காகவும், ஜனநாயக மீட்சிக்கான போரில் ஈடுபட்டதற்காகவும் பாகிஸ்தானிய அரசால் (சியா வுல் ஹக் காலத்தின் போது) கைது செய்யப்பட்டு சிறையிலடைக்கப்பட்ட ஷாகித் நடீம் இப்போது சர்வதேச மன்னிப்புச் சபையின் பிரசுரப் பிரிவில் பணிபுரிகிறார்.







பறவைகளின் ஒரு காட்சி

# பறவைகள்

மூன்றாவது அரங்கம் அல்லது சுதந்திர நாடக இயக்கம் என்று இப்போது வழங்கப்படுகிற ஒரு போக்கிற்கும் பீதாமகராக விளங்குகிற பாதல் சர்காரின் நாடகம் பற்றிய விவரணப் படம் மிகப் பொருத்தமான முறையில் ''பறவைகள்'' என்று தலைப்பிடப்பட்டுள்ளது.

கவிஞன் ஷெல்லிக்கு வானம்பாடி சுதந்திரத்தின் குறியீடாக இருந்தது; கவிஞன் கீட்ஸுக்கோ நைற்றிங்கேள்; நமது கவி பாரதிக்கோ சிட்டுக் குருவிதான் விடுதலையின் சின்னம்.

பாதல் சர்க்காரின் சுதந்திர அரங்கம் ஆடம்பரமான ஒப்பனை மேடையமைப்பு, பெரும் பொருட் செலவு எல்லாவற்றையும் நிராகரித்து மிகவும் எளிமையான முறையில் மனிதர்களை மட்டுமே வைத்துக் கொண்டு மனிதர்களுக்காக நிகழ்த்தப்படுவது. ''நடிகர்களாகவும், பார்வையாளர்களாகவும், பங்காளிகளாகவும் இருக்கிற மனிதர்களே போதும் எனக்கு'' என்பவர் பாதல் சர்க்கார். வர்த்தகமயமாக்கப்படுவதிலிருந்து நாடகக் கலையைப் பாதுகாக்க மூன்றாவது அரங்கம் உதவும் என்று வலியுறுத்துகிறார் பாதல் சர்க்கார்.

''பறவைகள்'' என்ற இந்த விவரணப் படம் கல்கத்தாவிலும் அதனைச் சூழ உள்ள பிரதேசங்களிலும் நிகழ்த்தப்பட்டு வருகிற சுதந்திர நாடக இயக்கத்தின் அறிக்கைகளை பதிவு செய்வது மட்டுமல்லாமல் சமகால அரசியல் , வாழ்க்கைப் பிரச்சினைகளை எவ்வளவு தாக்கமான முறையில் எளிமையாகவும் சுலபமாகவும் மக்களுக்கு வெளிப்படுத்தலாம் என்பதையும் காட்டுகிறது. பாதல் சர்க்காரின் இயல்பான குரலில் விவரணப்படுத்தப்பட்டிருக்கும் பறவைகள் படத்தின் முதலாவது காட்சியில் மேசையுடன் விலங்கிடப்பட்டுப் பிணைக்கப்பட்டிருக்கும் ஒரு மனிதன் (வேறு யாருமல்ல; பாதல் சர்காரே தான்!) தோன்றுகிறான். உலக மனிதர்களில் பெரும்பாலானோர் இன்னும் நவீன அடிமைத் தனத்துட் கட்டுண்டு கிடப்பதைச் சுட்டுவதன் மூலம் விடுதலை வேட்கை பூடகமாக வெளிக் கொண்டு வரப்படுகிறது.

ஒடுக்கப்படுகிற மக்கள் பலரது வாழ்க்கைக் கணங்களை 'பறவைகள்' பாதல் சர்க்காரின் வீதி நாடகங்களுடாகப் படம் பிடிக்கிறது.

''ஓ மனிதர்களே என்ற அமைப்பின் சார்பில் **சிவானந்த முக்கர்ஜி, அஸிம் சௌத்ரி, டெபாஷிஸ் சக்ரவர்த்தி** ஆகியோரால் நிர்மாணிக்கப்பட்டுள்ள 'பறவைகள்' ஒரு வண்ணப் படமாகும்.

# நண்பர்களின்

மனச்சாட்சியின் கைதிகள், பம்பாய் எங்கள் நகரம் போன்ற சிறப்பு மிக்க விவரணப் படங்களை நெறியாள்கை செய்த **ஆனந் பட்வர்தனின்** முக்கியமான இன்னொரு படம் நண்பர்களின் நினைவாக. பஞ்சாப்பில் இடம்பெறும் போராட்டம், வன்முறைகள் பற்றிய இந்தப்படத்தில் சீக்கியர்களினதும் இந்துக்களினதும் மன நிலையையும் உணர்வுகளையும் படம் பிடிக்கிறார் பட்வர்த்தன். இன்றைய பஞ்சாபின் நிலைமையையும் சுதந்திரப் போராட்ட வீரர் பகத் சிங்கின் வாழ்வையும் பொருத்தமான வகையிலிணைத்து இந்தப்படத்தை பட்வர்த்தன் உருவாக்கியுள்ளார்.

பகத் சிங்கின் பணியையும் வாழ்க்கையையும் போராட்டத்தையும் எவ்வாறு சீக்கிய தீவிரவாதிகளும், அடிப்படைவாதிகளும் மற்றும் அவர்களுக்கு எதிரானவர்களும் பாவிக்க முற்படுகிறார்கள் என்ப எடுத்துக்காட்டி பகத்சிங் எவ்வாறு ஒரு மதச் சார்பற்ற மனிதாபிமானம் மிக்க போராளியாக இருந்தான் என்பதை ஆனந்த் பட்வர்த்தன் சித்திரிக்கிறார். படத்தின் மூலவேரே பகத் சிங்கின் எழுத்துக்கள்தான். இனத்துவ ஒற்றுமையை வலியுறுத்தி எடுக்கப்பட்ட இந்தப் படத்திற்குஇரண்டு சர்வதேச விருதுகள் கிடைத்துள்ளன.

பகத் சிங் பற்றிய பட்வர்த்தனின் சித்திரிப்பு இந்தப் படத்தில் மிகவும் முக்கியமானது. 1931 இல் பிரித்தானியர் பகத்சிங், ராஜ்குரு, சுத்தேவ் ஆகிய மூன்று இளைஞர்களையும் தூக்கிலிட்டனர். பகத் சிங்குக்கு அப்போது வயது 23. ஹிந்துஸ்தான் சோஷலிஸ்ட்

# சஞ்சாரி

இந்திய நெறியாளர் அருண் கோப்காரின் **சஞ்சாரி**பரத நாட்டியத்தில் புகழ் பெற்ற லீலா ஸாம்ஸனைப் பற்றியது. ''நாட்டியத்தின் ஒவ்வொரு அசைவையும், ஒவ்வொரு அடியையும் திரைப்படத்தால் சிறைப்பிடிக்க முயன்றுள்ளேன்.'' என்று கூறும் அருண் கோப்ரார் - நவீன ஓவியங்களைப் பற்றி ''சிந்தனையின் படிமங்கள்'' என்ற வண்ணத் திரைப்படத்தையும் இயக்கியுள்ளார்.

பரதநாட்டியத்தைப் படம் பிடிப்பதில் அதிசயிக்கத்தக்க அளவு நுட்பத்தையும் திறமையையும் காட்டியுள்ள அருண் கோப்கார் பரத நாட்டியத்தின் கேத்திர கணித வடிவங்களையும், வரைபுகளையும் விளைவுகளையும் மிகுந்த கற்பனை வளத்துடன் படமாக்கியுள்ளார்.


கமெராவின் நேரடியான பார்வையில் இந்த அம்சங்கள் விட்டுப் போய் விடும். ஒரே நேரத்தில் மூன்று பரிமாணங்களிலும் பல்வேறு திசைகளிலும் இயங்கும் ஒரு நாட்டிய நிகழ்வை கமெராச் சிறைக்குள் பூட்டுவது அவ்வளவு இலகுவான காரியமல்ல என்பது நுனித்து நோக்கினால் அனைவருக்கும் விளங்கும் ஒரு விஷயம்;

இந்தப் படத்தில் லீலா மட்டுமல்ல கமெராவும் கூடச் சஞ்சாரிதான்.

**1. சித்தேஸ்வரி**
**2. பறவைகள்**
**3. சஞ்சாரி**
**4. கடவுளின் பெயரால்**

நன்றி - நூலகத்திட்டம்





## மணிகௌல்

புகழ்பெற்ற பூனா திரைப்படக் கல்லூரியின் ஆரம்பகால மாணவர்களில் உலகளாவிய சிறப்புப் பெற்றவர்களில் முதன்மையானவர் **மணிகௌல்**.. தன்னுடைய இருபத்தாறாவது வயதில் **உஸ்கி றொட்டி** எனும் திரைப்படமூலம் ஆரம்பித்த அவருடைய கலை வாழ்வு விவரணப் படங்கள், கதைப்படங்கள் என்பனவற்றை மட்டும் உள்ளடக்கியதல்ல. ஓவியத்திலும் சிறப்புப் பெற்றவர்; சங்கீதத்தில் மரபு சான்ற பாண்டித்தியமும் நவீனம் சேர்ந்த புலமையும் மிக்கவர்.


**3** பாரம்பரியச் செழுமையிலிருந்து நவீனத்துவத்தை உருவகப்படுத்திக் கட்டி எழுப்புவது எவ்வாறு என்பதே மணிகௌளின் விவரணப் படங்களினதும் குறுந்திரைப்படங்களினதும் உயிர்த்துடிப்பு மிக்க வேட்கையாகும்.

இலக்கியத்தை வெறுமனே திரைப்படத்துக்கான மூலப் பொருளாக மட்டுமே


திரைப்படத்தில் மோகன் ராகேஷின் கதைக்கு மேலதிகமான சோடனை எதனையும் மணி கௌல் சேர்க்கவில்லை. கமெரா, பின்னணி இசை 'நுட்பமான' ஒளியமைப்பு என்பவற்றினூடாக மூலக் கதையை அப்படியே நிர்மாணிக்கிறார் மணிகௌல்.

திரைப்படத்திற்கும், நாடகத்திற்கும் இடையே ஏற்படக்கூடிய உறவைப்பற்றி ஆஷாத் கா ஏக் தின் பேசுகிறது. இந்தப் படத்தின் காட்சிப் படிமங்களில் அஜந்தா ஓவியங்களின் பாதிப்பு இருப்பதாக விமர்சகர்கள் கருதுகிறார்கள்.

நவீன சினிமாவை நாடகம், சித்திரம், ஓவியம், இசை போன்ற ஏனைய கலைத்துறைகளுடன் நுட்பமாக இணைத்தவர் மணி. இது போலவே விவரணப் படத்துறையைப் பொறுத்தும் இந்தியாவில் புதிய, பலமிக்க மாறுதல்களைக் கொண்டு வந்தவை அவருடைய விவரணப் படங்கள்.




4



**மணிகௌல்** –

பயன்படுத்தும் நெறியாளர்கள் வரிசையில் மணிகௌல்ஐச் சேர்க்க முடியாது. தாகூரின் இலக்கியத்தைப் பொறுத்தவரை சத்யஜித்ரே இந்தக் குற்றச்சாட்டுக்கு உள்ளானவர் என்பதை நாம் நினைவில் கொள்ளலாம்.

தன்னுடைய முதல் மூன்று படங்களிலும் **(உஸ்கி ரொட்டி, ஆஷாத் கா ஏக் தீன், த் வித)** இலக்கியத்துக்கும் சினிமாவுக்குமிடையே எழக்கூடிய சிக்கலினை ஆனால் நெருக்கமான உறவைப் பற்றி மணிகௌல் ஆராய்கிறார்.

உதாரணமாக **உஸ்கி ரொட்டி** (அன்றாட ரொட்டி ) ஹிந்தி நாடகாசிரியர் மோகன் ராகேஷின் கதையிலிருந்து வருகிறது. (மோகன் ராகேஷை எம்மூர் ரசிகர்களுக்கு ஞாபகமிருக்கலாம். அவைக்காற்று கலைக் கழகத்தின் தயாரிப்பில் அவருடைய ''அரையும் குறையும்'' என்ற நாடகம் பாலேந்திரா நெறியாள்கையில் வெற்றிகரமாகப் பல இடங்களில் மேடையேறிற்று)

குறிப்பாக சித்ரகதி, வருகை, நடமாடிப் பொம்மலாட்டக்காரர்கள். துருபத், சித்தேஸ்வரி போன்றன இந்திய விவரணப் படத்துறையின் சிகரங்கள் எனக் கருதப்படுகின்றன.

தோஸ்தோயொவ்ஸ்கியின் 'முட்டாள்' (The Idiot) என்ற புகழ்பெற்ற ரஷ்ய நாவலைத் திரைப்படமாக்கும் முயற்சியில் இப்போது ஈடுபட்டுள்ள மணி கௌலின் திரைப்படங்கள் அனைத்தினதும் மீள்பார்வை (retrospective), நெதர்லாந்தின் **நொட்டர்டாம்** நகரிலும், இத்தாலியின் **பிஸரோ**நகரிலும், ஃபிரான்ஸின் தலைநகர் **பாரிஸிலும்** இடம் பெற்றுள்ளன.

இப்போது முதல் தடவையாக தென்னாசிய நாடொன்றில் - இலங்கையில் - இடம் பெறுகிறது. அவருடைய எல்லாக் குறுந்திரைப்படங்களையும் விவரணப் படங்களையும் பார்க்கிற ஒரு அரிய சந்தர்ப்பம், இரண்டாவது தென்னாசிய விவரண மற்றும் குறுந்திரைப்படங்களின் விழாவில் உங்களுக்குக் கிடைக்கிறது.

## ...நினைவாக

பார அமைப்பு எனும் இயக்கத்தை ட... தான் அவர்கள் நிறுவியிருந்தனர். ந்தானிய ஏகாதிபத்தியத்திற்கெதிராகப் ராடியதே அவர்கள் செய்த 'குற்றமாகும்'.

பகத் சிங் காலத்திலேயே இந்தியாவில் த்துவ, மதப் பிளவுகள் தலைதூக்க ம்பித்து விட்டிருந்தன. பகத்சிங்கும் னுடைய நண்பர்களும் இனத்துவ, மத ங்களைக் கடந்த ஒரு வர்க்கப் ராட்டத்தையே வலியுறுத்தியது டுமல்லாமல் இனத்துவப் பிளவுகளையும் ர்த்தார்கள். பகத்சிங்கினுடைய டைப்புகள் பிரித்தானியரால் தடை ப்யப்பட்டிருந்தன. ''நான் ஏன் ஒரு த்திகனாக இருக்கிறேன்'' என்பது வருடைய சிறப்பான படைப்புக்களி லொன்று.

இன்றைக்கு காலிஸ்தான் கோருபவர்களும் அதனை எதிர்ப்பவர்களும் பகத்சிங்கின் முக்கியமான இயல்பை/பங்களிப்பை வசதியாக மறந்து விடுகிறார்கள். வர்க்க ஒற்றுமையையும் இனத்துவ ஒற்றுமையையும் பகத்சிங்கின் வழியில் வற்புறுத்தி வந்த பலர் காலிஸ்தான் தீவிரவாதத்தாலும் இந்திய அரசினாலும் கொல்லப்பட்டுள்ளனர் என்பதை பட்வர்த்தனின் படம் தெளிவாக்குகின்றது. அவ்வாறு கொல்லப்பட்டவர்களில் ஒருவரான **ஜய்மால் சிங் பட்டா**என்பவரும் இந்தப் படத்தில் பங்கேற்றுள்ளார். அவருடைய புகழ் பெற்ற பாடலின் வரிகளிலிருதே ஆனந்த் பட்வர்த்தன் 'நண்பர்களின் நினைவாக..' என்ற தலைப்பைத் தேர்ந்தெடுத்துள்ளதாகச் சொல்கிறார்.

## சித்தேஸ்வரி

மணி கௌலின் **சித்தேஸ்வரி**என்னும் ...புதமான படம் 'தும்ரி' என்று ...ங்கப்படும் ஒருவகைப் பாரம்பரியச் ...கீதத்தின் கதை. இந்திரனுடைய அவையில் ...வர்கள் இசைத்த கானம் 'தும்ரி' என்பது ...கம். இது போலவே அருச்சுனன் மீது காதல் ...ண்ட நர்த்தகி ஊர்வசியின் கதையிலும் ...ரி சங்கீதத்தின் தோற்றங்களைச் ...டுபவர்களும் உள்ளார்கள்.

மணிகௌலின் சித்தேஸ்வரி ஒரு ...ன்மையான பாத்திரம். சங்கீதத்தையும் ...ழ்வையும் ஐதீகங்களூடாகத் தேடாமல் அக ...ழ்வூடாகவும் கீத ஆராதனைகளூடாகவும் ...ற்புதமான காட்சிப் படிமங்களூடாகவும் ...டிச் செல்கிற ஒரு கவிதை. சித்தேஸ்வரி - ஓர் ...ழகிய இளம் பெண்; அவளுடைய சங்கீத ...ாழ்வு எப்படி மிக இளமையிலே ...ரம்பமாகிறது. எவ்வளவு உணர்வுபூர்வமாக ... அவளது வாழ்க்கையோடு இணைந்து வருகிறது என்பதை பிரதானமான கதாபாத்திரமான சித்தேஸ்வரியின் வாழ்க்கையூடாக நளினமாகச் சித்திரிக்கிறார் மணிகௌல்.

தன்னுடைய மாமி வீட்டில் வாழ்ந்து தரும் சித்தேஸ்வரி மாமியாரை எதிர்த்துக் கேள்விக்குள்ளாக்குவதால் வீதியில் தூக்கி வீசப்படுகிறாள். பண்டிகைகளும் மரணமும் குறியீடாக விளங்கும் காசி நகரத்தின் தெருக்களில் அலைந்து ஒருவாறு சங்கீத விற்பன்னர் **சியாஜ் மகராஜின்** வீட்டை அடைகிறாள் சித்தேஸ்வரி.

அங்கிருந்து ஒரு அபூர்வமான பாடகியாகப் பரிணமிக்கிறாள். தன்னுடைய வாழ்வின் அரைப்பங்கை 'வீடற்றவளாகவே' கழிக்க நேர்ந்த சித்தேஸ்வரி இறந்த பிற்பாடு சங்கீத உலகம் முழுவதையும் சுவீகரித்துக் கொள்கிறாள்.

Festival of South Asian
Documentaries
& Short Films
Colombo 1992

Presented by the International
Centre for Ethnic Studies,

சர்வதேச இனத்துவ ஆய்விற்கான நிறுவனத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட தெற்காசிய விவரண குறுந்திரைப்பட விழா ஒகஸ்ட் 27,28,29,30 ஆகிய தினங்களில் இலங்கை மன்றக் கல்லூரியில் நடைபெறுவதையிட்டு இது பிரசுரமாகிறது

நன்றி - நூலகத்திட்டம்



## முகாமில் எரிப்பு

நவம்பர் மாத நடுப்பகுதியில் மட்டக்களப்பு வனத் திணைக்களக் கட்டிடப்பகுதியில் அமைந்துள்ள இராணுவ முகாமில் ஐந்து அல்லது ஆறு உடல்கள் எரிக்கப்பட்டமை அவ்விடத்து மக்களுக்குத் தெரிய வந்தது. மட்டக்களப்பு சமாதானக் குழுவினர் பொலிஸ் மேலாளரை இது தொடர்பாக அணுகிய போது இராணுவத்தினர் அடையாளம் காணப்பட முடியாத சில உடல்களை எரிக்கும்படி கேட்டுக்கொண்டதாகவும் அதனால்தான் அந்த உடல்களை எரிக்கவேண்டி நேர்ந்தது என்றும் தெரிவித்தார்.

அடையாளம் காணப்பட முடியாத உடல்களாயிருந்தாலும் அவற்றை எரிப்பது தொடர்பாக ஒரு ஒழுங்கான நடைமுறை பேணப்பட்டிருக்க வேண்டும் என்றும் மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து இராணுவத்தினர் நடந்து கொள்ளவேண்டும் என்றும் சமாதானக் குழுவினர் எதிர்ப்புத் தெரிவித்தனர். பொலிஸ் மேலாளர் இவ்வகையான சம்பவங்கள் இனி நடைபெறாதென உறுதியளித்த போதிலும் டிசம்பர் மாதம் முதல் வாரத்தில் கல்லடிப் பாலத்தருகே, ஒரு அதிகாலையில், பத்து உடல்கள் எரிக்கப்பட்டன. அரைகுறையாய் எரிந்த கைகளும் வேறு அங்கங்களும் பாலத்தையண்டியுள்ள வளவுகளுக்குள் காணப்பட்டன.

தம்பிராஜா தியாகராஜா, தேவநாயகம் தம்பிராஜா ஆகிய இருவருக்கும் வயது 21. இருவரும் 9.11.91 காலை ஏழு மணியளவில் மட்டக்களப்பு பார் அருகே மீன் பிடித்துக் கொண்டிருந்தனர். இந்த இடத்திற்கு வந்த இராணுவம் ரெலோவின் தகவலின் அடிப்படையில் இவர்களைக் கைது செய்தது. ஏறாவூரின் ஆறுமுகத்தான் குறிப்புப் பகுதியில் இருந்து, சாவற்குடி படுகொலைக்குப் பின்னர் மட்டக்களப்பு வந்திருந்தவர்கள் இந்த இருவரும்.

இரண்டு மூன்று தினங்களாக இவர்களைப் பற்றி உறவினர்களால் எதுவித தகவலும் பெறமுடியவில்லை. சமாதானக்குழு ராணுவத்தை அணுகியது. கொலோனல் விபுலகுண, தான் இவர்கள் பற்றி கண்டுபிடிப்பதாக உறுதியளித்த பின்னர், ராணுவத்தினரிடமே இவர்கள் இருப்பதாக கண்டுபிடித்தார். நெருங்கிய உறவினர்கள் எவரும் பார்க்க அனுமதிக்கப்படவில்லை.

படுகொலைகளில் இருந்து தப்பி மட்டக்களப்பு வந்த பலரும், ரெலோவின் நடவடிக்கைகளால், பாதுகாப்பற்ற நிலைமையை உணர்கின்றனர். பெருமளவில் அப்பாவிகள் கைதாவதற்கு உறுதியான ஆதாரங்களோ, நியாயமான காரணங்களோ இல்லை; ரெலோவின் தனிப்பட்ட காரணங்கள் அல்லது சிறு சந்தேகங்கள், ஒரு கிராமத்தைப் பற்றிய தப்பெண்ணங்கள் போன்றவையே காரணமாக அமைகின்றன. ரெலோ உறுப்பினர்கள் எழுந்தமானமாக சிலரைப் புலிகள் என அடையாளம் காட்டி, அவர்களது வாழ்க்கையை ஆபத்துக்கு உள்ளாக்குகின்றனர்.

## கனிஸ்ரன் மைக்கேலின் கொலை

நாவற்குடாவைச் சேர்ந்த கனிஸ்ரன் மைக்கேல், ராணுவத்தால் கைதாகி விடுவிக்கப்பட்டவர். ஒவ்வொரு வாரமும் ராணுவ முகாமிற்குச் சென்று வருமாறு அவர் சொல்லப்பட்டிருந்தார். அவர் அவ்வாறே செய்துவந்தார். நவம்பர் மாதம் 12ஆம் திகதி அவர் ரெலோவால் கொண்டு செல்லப்பட்டார் மறுதினம் அவரது உயிரற்ற உடல் கழுத்தில் பிளேட் வெட்டுக் காயங்களுடன் காணப்பட்டது.

ரெலோவின் நடவடிக்கைகளால் கோபம் கொண்ட மக்கள் இது பற்றி ராணுவத்திடமும், பொலிசாரிடமும் முறையீடு செய்துள்ளனர். தாம் ரெலோ பற்றி ஒன்றும் செய்ய முடியாது எனப் பொலிசார் கூறியுள்ளனர். ரெலோவின் நடவடிக்கைகள் பற்றி ஒன்றும் புரியாத மக்கள், தமக்கு விருப்பமான, ஆனால் மோசமான நடவடிக்கைகளைச் செய்யவும் அவற்றுக்கான பழியைப் பொறுப்பெடுக்கவும் ராணுவம் ரெலோவைப் பயன்படுத்துகிறது என நம்புகின்றனர். ரெலோவை இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபடுத்திய கப்ரன் 'எம்' வேறு இடத்திற்கு மாற்றப்பட்டுள்ளார். சமூகத்தின் முக்கிய பிரமுகர்கள் சிலர், ரெலோ தன்னிச்சையாக திரிவதாகவும் ஒரு தண்டனை வழங்கும் குழு போலச் செயற்படுவதாகவும் கூறியுள்ளனர்.

## நாவற்குடாவில் டிக்கின் கொலை 08.12.91

றோமன் கத்தோலிக்கரான டிக் என்ற இளைஞர், மதகுருவாவதற்காக செமினரியில் கற்றுக் கொண்டிருந்தார். எட்டாம் திகதி இரவுணவிற்காக அவர் தனது வீட்டிற்கு வந்தார். வழியில் ரெலோ அவரை நிறுத்தியது. உடன் அவர் அருகிலிருந்த வீட்டுக்குள் ஓடினார். அவருக்கு அடைகலம் வழங்கிய அந்த வீட்டுப் பெண் வீட்டின் வாசலில் நின்றுகொண்டிருந்தார். டிக்கைத் தங்களிடம் தருமாறு ரெலோ கேட்டதுடன், அந்தப் பெண் காயப்படுத்தப்பட்டார். டிக் ரெலோவால் கைதானார். வீட்டுப் பெண்மணி டிக்கின் வீட்டிற்கு ஓடிச் சென்று அவர் கைதான தகவலைத் தெரிவித்தார். டிக்கின் தாயாரும் சகோதரியும் அருகிலுள்ள ராணுவ முகாமுக்குச் சென்று படையினருக்கு இதுபற்றித் தெரிவித்தனர். அவர்கள் இவ்வாறு ஒரு சம்பவமே நிகழவில்லை என மறுத்தனர். மறுநாள் காலை ஆற்றங்கரையில் டிக்கின் உடல் பெற்றோரால் அடையாளம் காணப்பட்டது.

உடல் பிளேட்டால் வெட்டப்பட்டுக் காணப்பட்டது. தொண்டை வெட்டப்பட்டு வாயினூடாக தொண்டைவரை செபமாலை செலுத்தப்பட்டிருந்தது. பிளேட்டும் வாயினூடு செலுத்தப்பட்டிருந்தது.

## எலிசபெத்தின் மர்மக் கொலை

16 வயதான எலிசபெத்தின் மரணம் மட்டக்களப்பு நகரில் பெரும் பீதியை ஏற்படுத்தியது. கொன்வென்டில் படித்துக் கொண்டிருந்த எலிசபெத் ஒரு பொலிஸ்காரருக்குத் திருமணம் செய்து வைக்கப்பட நிச்சயம் செய்யப்பட்டிருந்தார். அவரது உடல் ஏரியில் காணப்பட்டது. பலரால் பாலியற் பலாத்காரத்துக்கு உட்படுத்தப் பட்டிருந்த அடையாளங்கள் உடலில் காணப்பட்டன. ரெலோ உறுப்பினர்களுடன் அவர் சிறிது நேரம் முன்னர் ஆனைப்பந்திப் பிள்ளையார் கோயிலடியில் காணப்பட்டார். ஒரு சிவப்பு நிற கார் ஏரியை அண்மித்ததைச் சிலர் கண்டுள்ளனர்.

எவ்வாறு இந்தக் கார் தடை முகாம்களைக் கடந்து வந்தது என்பது மக்களுக்கு புரியவில்லை. இந்த அருவருப்பான நிகழ்ச்சியில் ராணுவத்தின் மறைமுக ஆதரவு இருந்ததா அல்லது இதில் சம்பந்தப்பட்ட ரெலோ உறுப்பினர்களுக்கு விரும்பியபடி திரிய ராணுவத்தின் அனுமதி இருந்ததா என்பது தெளிவாகவில்லை.

அண்மையில் உக்கன் என்பவர் இது தொடர்பாக பொலிசாரால் கைதாகியுள்ளார். மக்களின் மீதான உதாசீனப்படுத்தும், அதிகார நடவடிக்கைகளுக்குப் புகழ் பெற்ற இவர் முன்னர் ஈஎன்டிஎல்எஃப் குழுவில் இருந்தவர், பின்னர் ரெலோவுடன் திரிந்தவர்.


## பச்சைப் படகுப் பயணம்

விடுதலைப்புலிகள் இயக்கத்திலிருந்து மேல்மட்ட உறுப்பினர்கள் சிலர் வெளியேறிய பிற்பாடு தெரியவந்த தகவல்களில் பச்சைப் படகுப் பயணம் முக்கியமானது. இது விடுதலைப் புலிகள் இயக்கத்தின் குணாம்சத்தைப் பற்றி நிறையவே சொல்கிறது.

இந்தியாவில் பயிற்சியளிக்கப்படும் போதே விடுதலைப்புலிகள் தமது புதிய உறுப்பினர்களை மிகவும் அவதானமாகக் கவனித்து வருவது வழக்கம். சுயமாகச் சிந்திக்கத் தெரிந்தவர்களும் சரி எது பிழை எது என்று இனங்கண்டு கொண்டு செயல்படக்கூடியவர்களும் கேள்வி எழுப்பக்கூடியவர்களும் இயக்கத்திற்கு ஆபத்தானவர்களாக எதிர்காலத்தில் விளங்க நேரிடலாம் என்று கவனித்து வைத்துக் கொள்ளப்படுவார்கள். பயிற்சி முடிவடைந்த பிற்பாடு உறுப்பினர்கள் பல படகுகள் மூலம் வடக்குக்கும் கிழக்கிற்கும் அனுப்பப்படுவார்கள். எதிர்காலத்தில் ஆபத்தானவர்களாக வரலாம் என்று குறிக்கப்பட்டவர்கள் பச்சை நிறப் படகொன்றில் அனுப்பப்படுவார்கள். இந்தப் பச்சைப் படகில் பயணம் செய்தவர்கள் ஒரு நாளும் கரை சேர்ந்ததில்லை. கடலின் நடுவில் அவர்களது தலைவிதி தீர்மானிக்கப்படும். அவர்களைக் கொன்ற பின்பு வயிறு வெட்டிப் பிளக்கப்பட்டு உடல் கடலுள் வீசப்படும்.

## புலிகளின் சிறை

ஏனைய இயக்கங்களைப் புலிகள் தடை செய்து கொன்றொழித்தாலும் ஒரு சிலர் புலிகளிடமிருந்து தப்பிப்பிழைத்து விட்டிருந்தனர். இவ்வாறு தப்பிப்பிழைத்தவர்களையும் இன்னும் எஞ்சியிருப்பவர்களையும் புலிகள் தொடர்ந்தும் வேட்டையாடிக் கொண்டிருக்கிறார்கள். புலிகளால் பிடிக்கப்படுபவர்கள் பயங்கரமான சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டு இயக்க விஷயங்களைப் பற்றிச் சொல்ல நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள். இந்திய இராணுவம் பின்வாங்கிச் சென்ற பிற்பாடு இலங்கை அரசுடன் புலிகள் பேச்சு வார்த்தைகள் நடத்திய காலகட்டத்தில் புலிகளால் கைது செய்யப்படுபவர்களின் எண்ணிக்கை அதிகமாயிற்று. கொழும்பில் தஞ்சம் புகுந்த பல இளைஞர்களைப் புலிகள் இலங்கை இராணுவத்தின் உதவியுடன் கைது செய்து யாழ்ப்பாணம் கொண்டு சென்றனர். யாழ்ப்பாணத்தில் பிடிக்கப்பட்டவர்கள் புகழ் பெற்ற துணுக்காய்த் தடைமுகாமுக்கு அனுப்பப்பட்டனர். இப்போது புலிகளின் சிறையிலிருக்கும் கைதிகளின் எண்ணிக்கை 2000-6000க்கும் இடையில் என்று பலரால் பலவழிகளில் மதிப்பிடப்படுகிறது. எனினும் நம்பிக்கையான தகவல்களின்படி இந்த எண்ணிக்கை 3000-4000 க்கும் இடையில் இருக்கலாம் என்று தெரியவருகிறது. இந்தக்கைதிகள் மீது கட்டவிழ்த்து விடப்படும் பயங்கரமான சித்திரவதைகளும், இச்சித்திரவதைகளுக்குச் சிறுவர்களைப் பயன்படுத்துவதும், இத்தகைய சித்திரவதைகளில் ஈடுபடுபவர்களின் வக்கிரமான இயல்பும் போராட்டத்தின் நிலையைத் தெளிவாக அம்பலமாக்குகின்றன.


THE TRAPPED PEOPLE
AMONG
PEACE MAKERS AND WAR MONGERS

Report no.9
by
University Teachers for Human Rights (Jaffna)

Issued: 18 February 1992

UTHR (Jaffna)
University of Jaffna
Thirunelvely, Jaffna
Sri Lanka

மனித உரிமைகளுக்கான பல்கலைக் கழக ஆசிரியர் சங்கம் (யாழ்ப்பாணம்) வெளியிட்ட ஒன்பதாவது அறிக்கையிலிருந்து சில பகுதிகளைத் தமிழில் தருகிறோம். The Trapped People Among Peace - makers and War Mongers என்ற தலைப்பில் வெளியாகியுள்ள இந்த அறிக்கையின் (பக்கங்கள் 62; விலை ரூபா 35.00) பிரதிகள் தேவைப்படுவோர் இனங்களுக்கிடையே நீதிக்கும் சமத்துவத்துக்குமான இயக்க அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

## தமிழீழ விடுதலை இயக்கம் (Telo) தமிழீழ மக்கள் விடுதலைக்கழகம் (PLOTE) மற்றும் ஈழ தேசிய ஜனநாயக விடுதலை முன்னணி E.N.D.L.F) உறுப்பினர்கள்

இலங்கை அரச படைகளுக்குப் பக்கத் துணையாக நின்று இப்போது TELO வும் , PLOTE உம் விடுதலைப்புலிகளுக்கு எதிராகப் போர் புரிந்து வருகிறார்கள். இந்த இயக்கத்தின் உறுப்பினர்களது நிலைபற்றிச் சொல்வது அவர்களுடைய தலைவர்கள் தங்கள் கடமையை மீள் பரிசீலனை செய்ய உதவும் என்று கருதுகிறோம். கிழக்கு மாகாணத்தில் பொது மக்களைத் துன்புறுத்துவதில் தமிழீழ விடுதலை இயக்க உறுப்பினர்கள் பங்கு பற்றுகிறார்கள் என்று முன்பும் குறிப்பிட்டிருந்தோம். அதிக எண்ணிக்கையில் உறுப்பினர்கள் இந்த இயக்கங்கள்லிருந்து விலகி வெளிநாடுகளுக்கும் அகதிகளாகவும் சென்று விட்டனர். தரத்திலும் இயல்பிலும் இந்த இயக்கங்கள் எல்லாமே ஒரே மாதிரியானவைதான். ஏனென்றால் இவர்கள் ஒருவரிடமுமே சீரிய வேலைத்திட்டம் ஏதும் இருக்கவில்லை. இந்த இயக்கங்களுக்கிடையேயான பிரதான ஒற்றுமை இவற்றின் உறுப்பினர்கள் பெரும்பாலானோர் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர்கள் என்பதே. வடக்கிலுள்ளவர்கள் ஏதோ ஒரு வழியில் வெளிநாடுகளுக்குத் தப்பிச் செல்லும் சாத்தியம் இருக்கிறது. ஆனால் கிழக்கு மாகாணத்திலிருந்தோ வறிய பின்னணியிலிருந்து வரும் உறுப்பினர்கள் தான் அதிகம். இவர்கள் வெளிநாடு தப்பிச் செல்வது அசாத்தியம். இவர்களுக்கு அரசியல் கண்ணோட்டமும் இல்லை. எதிர்காலத்தைப் பற்றியும் இவர்களுக்கு நிச்சயமில்லை. புலிகளால் எப்போதுமே வேட்டையாடப்படுவதால் சாதாரண பொது வாழ்வுக்கும் இவர்கள் திரும்பமுடியாமலுள்ளது.

இலங்கை இராணுவத்திற்கும் இவர்கள் மீது வெறுப்புத்தான் உள்ளது. பல கொலைகளிலும், கொள்ளைகளிலும் இவர்கள் சம்பந்தப்பட்டிருந்தாலும் அது பற்றி இவர்கள் அலட்டிக் கொள்வதில்லை. கிழக்கு மாகாணத்தில் புலிகள் ஆயுத முனையில் பணம் பறிப்பது உண்மை. அது போலவே தமிழீழ விடுதலை இயக்கத்தினரும் வருகின்றனர். ஒரு எளிமையான காரணம் அவர்களுக்குக் கிடைக்கிறது. புலிகளுக்குக் கொடுக்கலாம் என்றால் ஏன் எங்களுக்குத் தரக்கூடாது? கொழும்பிலும் ENDLF கொள்கைகளில் ஈடுபட்டுள்ளது.

வெளிநாட்டில் வாழும் ஒரு தமிழீழ மக்கள் விடுதலைக்கழக உறுப்பினர் ஒருவர் அண்மையில் தன்னுடைய அனுபவம் ஒன்றைச் சொன்னார். எப்படிக் கொழும்பில் தாங்கள் கொலை செய்தார்கள் என்பது பற்றிய அவலக்கதை அது:

அவர்களுடைய பழைய உறுப்பினர் ஒருவர் பூஸா தடுப்பு முகாமில் இருந்த பின்னர் ENDLF இயக்கத்துடன் சேர்ந்து கொண்டார். ENDLF என்பது PLOTE இலிருந்து பிரிந்த ஒரு சிறு இயக்கமாகும். ENDLF அதிகார உன்னதத்தில் இருந்தபோது கிளிநொச்சிப் பகுதிக்குத் துணைப் பொறுப்பாளராக இருந்தார் அவர். ENDLF இல் சேர மறுத்த PLOTE இயக்கத்தினர் சிலரைக் கொலை செய்ததாக அவர் மீது குற்றச்சாட்டுகள் இருந்தன. இந்திய இராணுவம் வெளியேறிய பிற்பாடு அவர் கொழும்பில் தஞ்சம் புகுந்திருந்தார். ஒருநாள் தங்களுடைய இராணுவக் கொமாண்டருடன் வாகனத்தில் சென்று கொண்டிருந்த போது PLOTE இயக்கத்தினர் தற்செயலாக அவரைக் கொழும்புத் தெரு ஒன்றில் கண்டனர். உடனடியாகவே அவரைப் பிடித்து வாகனத்தில் ஏற்றிய பின்னர் தாக்கத் தொடங்கினார்கள்.

பின்னர் வாகனத்துள் இருந்த PLOTE உறுப்பினர் ஒருவர் அவருடைய கழுத்தைக் கத்தியால் வெட்டினார். எல்லா இடமும் குருதி தெறித்தது. பின்னர் உடலைக் கொண்டு போய்க் கடலில் போட்டு விட்டார்கள். மறுநாள், காலை பத்திரிகைகளில் 'அடையாளம் காணப்படாத ஒரு உடல் கரையொதிங்கிற்று' என்ற செய்தி வெளியாயிற்று.

நன்றி - நூலகத்திட்டம்



1982 இலிருந்தே தமிழ் நாட்டுக்கு இலங்கை அகதிகள் வர ஆரம்பித்து விட்டன. பாண்டிபஜாரில் பிரபாகரனுக்கும் உமாமகேஸ்வரனுக்கும் இடையே நடந்த துப்பாக்கிச் சண்டை தமிழ் நாட்டிலும் இலங்கைத் தமிழ்த் தீவிரவாதிகளின் ஆதிக்கம் வளரத் தொடங்கியமையைக் காட்டிற்று. பாண்டி பஜார் துப்பாக்கிச் சண்டையை எம்.ஜி.ஆர். தீவிரமான ஒரு சம்பவமாகக் கருதியதோடு மட்டுமல்லாமல் தமிழ்த் தீவிரவாதிகளைக் "கையாளும்" பொறுப்பை என்னிடமே ஒப் படைத்தார். முற்று முழுதாக உள்ளூர்ப் பொலிஸ்காரர்களை அவர் நம்பத் தயாராக இருக்கவில்லை.

அந்த நேரத்திலேயே பின்னர் நடக்க இருக்கிற சம்பவங்களைப் பற்றி எனக்கு ஒரு உள்ளுணர்வு ஏற்பட்டது. இலங்கை நிலைமையைப் பயன்படுத்தி டில்லியிலுள்ளோர் "மாபெரும் திட்டங்களை" தீட்டி வருகிறார்கள் என்ற கதை காற்றில் உலாவியது. டெல்லியிலிருந்த சில முக்கியமானவர்கள் எடுக்கப்படடிருந்தால் பின்னர் நடந்த நிறைய விஷயங்களை நடக்காமலே தடுத்திருக்கலாம்.

இலங்கைப் பிரச்சினை தொடர்பாக இந்திராகாந்தியின் அணுகுமுறையை சர்வதேசத் தலைவர்கள் வரவேற்ற அதேசமயம் தமிழ் நாட்டில் இந்திராகாந்தியின் அணுகுமுறை குறித்து அதிருப்தியே நிலவியது. அதே வேளை இந்திராகாந்தியின் ஆலோசகர்கள் தமிழீழ விடுதலைப் இயக்கத்தற்கு (TELO) பயிற்சியளிப்பது மற்றும் விதிகள் வழங்குவதற்காக இரவு பகலாக உழைத்தார்கள். தமிழ்நாடு, கர்நாடகம் டெல்லி போன்ற இடங்களில் அவர்களுக்கு முகாம்கள் அமைக்கப்பட்டன. இந்த விசயம் மிகவும் இரகசியமாக காணப்பட்டது. மத்திய அரசை விட மானில அரசுகளுக்கு கூட ஆரம்பத்தில் இந்த இரகசியம் தெரிந்திருக்க வில்லை. ஒழுங்கற்ற முறையில் ஏற்பாடு செய்யப்படிருந்தமையால் இந்த விசயங்கள் கூடிய விரைவிலேயே அம்பலப் படுத்தப்பட்டு விட்டன. பயிற்சி முகாம்கள் ஒவ்வொன்றும் வும் செய்தார்கள். எனினும் தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் ஏதோஒரு வகையில் நிலமையை நான் கூர்ந்து கண்காணித்து வந்தேன். ஒரு சந்தர்ப்பத்தில் இந்த விஷயங்கள் பற்றி எம்.ஜிஆருக்கு சொன்னேன். எல்லா இயக்கங்களின் தலைவர்களையும் தான் ஒரு தடவை சந்திக்க வேண்டுமென்று அவர் என்னிடம் தெரிவித்தார். குறிப்பாக விடுதலைப் புலிகளின் தலைவரை சந்திக்க வேண்டும் என்றும் விரும்பினார். அவர் விரும்பியபடி எல்லா இயக்கத் தலைவர்களையும் சந்திக்க ஏற்பாடு செய்வதில் ஒரு சிரமமும் இருக்க வில்லை. எல்லாத் தலைவர்களையும் அவர் சந்தித்தாலும் பிரபாகரனுக்கும் அவருக்கும் இடையே உடனடியாகவே ஒரு அந்நியோன்னியம் ஏற்பட்டு விட்டது. இதனால் விடுதலைப் புலிகளுக்கு அவ்வப்போது எம்.ஜி.ஆர் நிதியுதவி செய்து வந்தார். தன்னுடைய சொந்தப் பணத்தில் இருந்து மட்டுமல்லாமல் அரசாங்கப் பணத்தில் இருந்தும் வழங்கி வந்தார்.





# மொஸாட்

# எம். ஜி. ஆர்.

# மோகன்தாஸ்

இலங்கையில் இன்னொரு பங்களாதேஷை உருவாக்குவது பற்றியும் என்னிடம் கதைத்திருக்கிறார்கள். டெல்லியிலுள்ள வேறு சிலரோ, திருகோணமலைத் துறைமுகம் இந்து சமுத்திரப் பகுதியில் எவ்வளவு முக்கியமானதென்றும் இந்தியாவின் பிரசன்னம் அங்கு இருக்க வேண்டியதன் அவசியத்தைப் பற்றியும் கூறினார்கள். நம்பிக்கையான வட்டாரங்களிலிருந்து பெறப்பட்ட இந்த விஷயங்களை நான் எம்.ஜி. ஆரிடம் எடுத்துச் சொன்னேன். எம்.ஜி.ஆர். ஒரு வார்த்தை யாவது பேசவில்லை.

எம்முடைய உடனடியான பிரச்சினை தமிழ்த்தீவிரவாதிகள் தான் என்றும் அவர்கள் தமிழ்நாட்டை இன்னொரு லெபனானாக மாற்றி விடுவார்கள் என்றும், எம்.ஜி. ஆருக்கு நான் சொன்னேன். மேலும் டெல்லியிலுள்ளவர்களுக்கு இது ஒரு பிரச்சினையாகவே தெரியவில்லை என்றும் அவருக்குத் தெரிவித்தேன்.

எனினும் இந்திராகாந்தியைப் பகைத்துக் கொள்ள எம்.ஜி.ஆர் அப்போது விரும்பவில்லை. அந்த நேரமே உரிய நடவடிக்கை நேரடியாக மத்திய அரசின் ஆணையின் கீழ் இருந்தமையால் அவை கிட்டத்தட்ட "யூனியன் பிரதேசங்கள்" போலவே இயங்கின. அவற்றின் மீது மானில அரசுகளுக்கு எந்தவிதமான மேலாதிக்கமும் இருக்கவில்லை.

இந்திய மத்திய அரசு மற்றும் உளவு சேவைகள் விட்ட முதலாவது தவறு என்னவெனில் TELO வை தமது கைப்பொம்மைகளாக தேர்ந்தெடுத்தமைதான். TELO விற்கு எவ்வகையான சித்தாந்த அடிப்படையும் இருக்க வில்லை. மேலும் கொலைகாரர்களும், தண்டனைப்பெற்ற குற்றவாளிகளும் சேர்ந்தமைத்த கூட்டமைப்பாகவே அது இருந்தது. E.P.R.L.F. PLOT விடுதலைப் புலிகள் போன்ற அமைப்புகளுக்கு ஒரு சித்தாந்தம் இருந்தது. இந்த இயக்கங்களின் மேல்மட்டத் தலைமைகள் லிபியா, லெபனான், இஸ்ரேல் போன்ற நாடுகளில் பயிற்சி பெற்றிருந்தனர்.

மானில அரசு உளவுத் துறை தமிழ்த்தீவிரவாதிகளைப் பற்றி தலையிடுவது தொடர்பாக மத்திய அரசு உளவுத் துறைக்கு விருப்பமில்லை என்பது மட்( வெறுக்க

ஒரு முதுநிலை இந்திய உளவுச்சேவை (RAW) உத்தியோகத்தர் ஒருமுறை என்னிடம் கூறினார்; விடுதலைப் புலிகளுக்கு மட்டும் எம்.ஜி.ஆர் பணம் வழங்குவது அவ்வளவு சரியில்லை.

இதுபற்றி எனக்கு ஒன்றும் தெரியாதென்றும் இந்திய உளவுச்சேவையின் அதிமுக்கியமான இரகசியமான விஷயங்களைப் பற்றி தெரிந்துகொள்வதற்கு எனக்கு உரிமை இல்லையென்றும் அவருக்கு தெரிவித்தேன். என்னுடைய தந்திரமான பதில் வேலை செய்தது.

தமிழ்த் தீவிரவாதிகள் தொடர்பாக இந்திய மத்திய அரச நிறுவனங்களின் நடவடிக்கை உட்பட எல்லாமே கேலிக்கூத்து என்று ஒப்புக்கொண்ட அவர் இந்திய உளவுச்சேவையின் பணிப்பாளரை சந்திக்க ஒழுங்கு பண்ணித்தருவதாகவும் எனக்கு வாக்குறுதி அளித்தார்.

(இன்னும் வரும்)

# ஆப்கானிஸ்தானும் அமெரிக்காவும்

**ஆதி**



மொஜாதிதி



ஹெக்மடயார்

ஆப்கானிஸ்தானில் 14வருட சோவியத் சார்பு நஜிபுல்லாவின் ஆட்சி முடிவிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. நஜிபுல்லாவின் ஆட்சியை எதிர்த்துப் போராடிய ஏழு கிளர்ச்சிக் குழுக்களில் ஆறு கிளர்ச்சிக் குழுக்கள் ஒன்று சேர்ந்து ஆட்சிக் கவுன்சில் ஒன்றையும் உருவாக்கியுள்ளன. காபுல் பல்கலைக் கழக பேராசிரியரான "ஷிபகதுல்லா மொஜாதிதி" ஆட்சிக் கவுன்சிலின் தலைவராக தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார். பலம் வாய்ந்த குழுக்களில் ஒன்றான "ஜமாதே இஸ்லாமி" குழுவின் தலைவரான அக்மட்ஷா மசூத் பாதுகாப்பு அமைச்சராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். இக் குழுக்களை ஒன்றிணைப்பதற்கும் ஆட்சிக் கவுன்சில் அமைப்பதற்கும் மறைமுகமாக அமெரிக்காவும், பாகிஸ்தானுமன உதவியுள்ளன

கிளர்ச்சிக் குழுக்களில் இஸ்லாமிய அடிப்படைவாதத்தை முன்னெடுப்பதும் ஈரானின் ஆதரவு பெற்றதுமானஹெஸ்பி இஸ்லாமியக் குழு அவ்வாட்சிக் கவுன்சிலை ஏற்காது எதிர்த்து வருகின்றது. இக் குழுவின் தலைவரான குலாவுத் தீன் ஹெக்மடயார் ஆட்சிக் கவுன்சிலுக்கு எதிரான தமது தாக்குதல் தொடரும் என அறிவித்துள்ளார். இவ்வறிவிப்போடு நிற்காது தாக்குதலையும் இக் குழு தொடர்ந்து வருகின்றது.

ஆப்கானிஸ்தானில் நஜிபுல்லா அரசாங்கத்திற்கெதிரான கெரில்லாக் குழுக்கள் போராடத் தொடங்கிய காலத்தில் இருந்து கெரில்லாக்கள் மத்தியில் அமெரிக்க செல்வாக்கு அதிகரித்து வந்துள்ளது. கிளர்ச்சிக் குழுக்களுக்கு ஆயுத உதவியையும், பண உதவியையும் அமெரிக்கா பாகிஸ்தானுடாகவும் நேரடியாகவும் கொடுத்து வந்தது. சோவியத் யூனியனுக்கும் அமெரிக்காவுக்குமிடையில் பனிப் போர் நடந்து கொண்டிருந்தமையால் கிளர்ச்சிக் குழுக்களுக்கே உதவியளிக்க வேண்டியது அமெரிக்க நலனைப் பொறுத்த வரையில் அவசியமானதாகவும் இருந்தது.

சோவியத் யூனியனின் வீழ்ச்சிக்குப் பின்னர் இஸ்லாமிய அடிப்படைவாதத்தின் செல்வாக்கும் அரபுத் தேசியவாதத்தின் செல்வாக்கும் கிளர்ச்சிக் குழுக்களுக்கிடையே ஆதிக்கம் செலுத்தக் கூடாது என்பதில் அமெரிக்கா கவனமாக இருந்து வந்தது. அரபுத் தேசியவாதத்திலும் பார்க்க இஸ்லாமிய அடிப்படைவாத நாடான ஈரான் அருகில் உள்ளதால் அதன் ஆதரவு பெற்ற கிளர்ச்சிக் குழுவே அமெரிக்காவிற்கு பிரதான பிரச்சினையாக இருந்தது. எனவே எந்த வகையிலும் இக் குழு ஆதிக்கம் பெறாத வகையில் ஏனைய குழுக்களை வளர்க்கும் பணியில் அமெரிக்கா ஈடுபட்டது. நஜிபுல்லாவின் அரசாங்கம் வீழ்ச்சியுற்ற போதும் அதிகாரத்தைக் கைப்பற்ற முயன்ற இஸ்லாமிய அடிப்படைவாதக் குழுவான ஹெஸ்பி இஸ்லாமியக் குழுவிற்கெதிராக ஏனைய குழுக்களை ஒன்று சேர்த்து ஆட்சிக் கவுன்சிலை அமைத்ததல்லாமல் ஹெஸ்பி இஸ்லாமியை பூண்டோடு ஒழிக்கும் வகையில் தாக்குதலுக்கும் தூண்டி விட்டுள்ளது.

ஆட்சிக் கவுன்சிலில் இணைக்கப்பட்ட குழுக்களும் இஸ்லாமிய அடிப்படைவாதக் குழுவை எதிர்க்க வேண்டும் என்ற வகையில் அமெரிக்காவினால் ஒன்று சேர்க்கப்பட்டார்களே தவிர கருத்துரீதியில் ஒன்றுபட்டவர்களாக இல்லை. இதனால் அவர்களுக்கிடையே மோதல்கள் ஆரம்பித்துள்ளன.

ஆப்கானிஸ்தானில் கிளர்ச்சிக் குழுக்களின் நடவடிக்கைகளும் அமெரிக்கத் தலையீடும் இலங்கையில் தமிழ்,ஆயுதக் குழுக்களின் நடவடிக்கையோடும் தமிழர் பிரச்சினையில்இந்தியத் தலையீட்டோடும் ஒப்பு நோக்கக் கூடியனவாக காணப் படுகின்றன. ஆப்கானிஸ்தான் கிளர்ச்சிக் குழுக்களை அமெரிக்கா பயன்படுத்தி வருவது போன்றே இலங்கைத் தமிழ்க் குழுக்களையும் இந்தியா பயன்படுத்தியது. இலங்கை தமிழர் பிரச்சினையில் இந்தியா பயன்படுத்திய தமிழ்க் குழுக்கள் இன்று சிதைந்தும் மக்களால் புறக்கணிக்கப்பட்ட நிலையிலும் உள்ளன. இந்நிலைமையை ஆப்கானிஸ்தான் கிளர்ச்சிக் குழுக்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.


அமெரிக்க நலன்களிலிருந்தும் தமது சொந்தக் குழு நலன்களிலிருந்தும் பிரச்சினைகளைப் பார்க்காமல் ஆப்கானிஸ்தான் மக்களின் நலன்களிலிருந்தே பிரச்சினைகளை அணுக வேண்டும். அமெரிக்காவில் தங்கியிருப்பதைவிட தமது சொந்த மக்களின் பலத்தில் தங்கியிருப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும். ஆப்கானிஸ்தான் மக்களின் தற்போதைய எதிரி இஸ்லாமிய அடிப்படைவாதம் அல்ல. அமெரிக்காதான் என்பதை உணர வேண்டும். தமது சொந்த குழு நலன்களை ஒதுக்கி விட்டு அமெரிக்காவை எதிர்க்கின்ற வகையில் பரந்துபட்ட ஐக்கிய முன்னணியைக் கட்டுவதற்கு முன்வர வேண்டும். இவ் ஐக்கிய முன்னணி ஆப்கானிஸ்தானில் மட்டுமல்ல இஸ்லாமிய நாடுகள் அனைத்திலும் ஆதிக்கம் செலுத்திவரும் அமெரிக்க ஆதிக்கத்திற்கு எதிராக போராட முன்வர வேண்டும். அப்போது தான் ஆப்கானிஸ்தான் மக்கள் விடுதலை அடைவதோடு உலகெங்குமுள்ள இஸ்லாமிய மக்களும் விடுதலை அடைவர்.

நன்றி - நூலகத்திட்டம்



# புலிகளுடனும் பேசத் தயார்

எம்.எச்.எம் அஷ்ரஃப்



கல்முனையைச் சேர்ந்த சட்டத்தரணி எம்.எச்.எம். அஷ்ரஃப் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் மட்டுமல்ல மிகவும் நீண்டகாலமாகக் கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம் நலன் பேணுதலுக்காக உழைத்தவர். எண்பதுகளின் ஆரம்பத்தில் கிழக்கு மாகாணம் எங்கும் ஊர் ஊராக அவர் பிரச்சாரக் கூட்டங்களும் சிறு சிறு கருத்தரங்குகளும் நடத்தி வந்தபோது அவரையும் அவருடைய அரசியல் கட்சியையும் எள்ளி நகையாடியோரே அதிகம். ஆனால் இன்று சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஒரு பலமிக்க சக்தியாக உருவாகியுள்ளது. கட்டுப் பெட்டித் தனமும் தீவிரமாக பழமைபேணும் பாரம்பரியமும் வாய்க்கப் பெற்றவரல்ல அஷ்ரஃப் அவர்கள். கலை இலக்கியங்களால் புடமிடப்பட்டு வளர்ந்த அஷ்ரஃப் ஒரு நல்ல எழுத்தாளர். நவீன தாராள வாதத்தையும் (Liberalism) இஸ்லாமிய இனங்காணலையும் (Identity)அவர் எவ்வாறு சமரசம் செய்யப்போகிறார் என்பதிலேயே சிறீலங்கா முஸ்லிம் காங்கிரசினதும் அஷ்ரஃப்னதும் எதிர்காலம் தங்கியுள்ளது.

'ஐலண்ட்' பத்திரிகையின் செய்தி ஆசிரியர் றோகான் அபேவர்த்தன சிறுபிள்ளைத் தனமாக குறிப்பிடுவதுபோல முஸ்லிம்களின் பிரபாகரனாக அஷ்ரஃப் மாறமாட்டார். முஸ்லிம்களின் அமிர்தலிங்கமாகவும் முஸ்லிம்களின் லோங்கோவாலாகவும் அவர் மாறாமலிருப்பதே ஆரோக்கியமான அரசியலுக்கு அவசியமாகும்.

அஷ்ரஃப் சரிநிகருக்கு அளித்த சிறப்புப் பேட்டி கீழே பிரசுரமாகிறது. (ஆ-ர்)

**இலங்கை அரசியல் வரலாற்றில் உருவாகி வந்த முஸ்லிம் தலைமைகள் முஸ்லிம் மக்களது நலன்கள் பற்றிய அக்கறையின்றி எப்போதும் தென்னிலங்கை சிங்களப் பேரினவாதக் கட்சிகளுடன் சேர்ந்து தமிழ் மக்களது சுயநிர்ணய உரிமைக் கோரிக்கைக்கெதிராகச் செயற்பட்டு வந்துள்ளனர் என்றும், ஆளும் பேரினவாத அரசுக்கெதிராக சிறுபான்மை இனம் போராட்டம் நடாத்தும் நாடுகளில் இரண்டாவது சிறுபான்மை இனத்தை முதலாவது சிறுபான்மை இனத்துடன் மோதவிடும் அரசியல் தந்திரோபாயமே இதுவென்றும் கூறப்படுவது பற்றி தங்களது அபிப்பிராயம் என்ன ?**

இது நூறுவீதமான உண்மை. ஆனால் இதுவரை இருந்து வந்த முஸ்லிம் தலைமைத்துவம் சிங்களப் பேரினவாத சக்திகளால் தாங்கள் பயன்படுத்தப் பட்டதை உணர்ந்து கொண்டு இருந்தார்களா அல்லது அவர்களின் அறியாமை காரணமாக எடுப்பார் கைப் பிள்ளைகளாகப் பாவிக்கப்பட்டார்களா என்பதில் எனக்கொரு சந்தேகம் இருக்கிறது. என்னைப் பொறுத்தவரை இதுவரை இருந்து வந்த முஸ்லிம் தலைமைத் துவத்தில், சிங்களப் பேரின வாத அரசியல் இரண்டாவது சிறுபான்மை இனத்தை முதலாவதுடன் மோதவிடுகிறது. அப்போராட்டத்தில் தம்மையொரு ஆயுதமாகப் பாவிக்கிறார்கள் என்பதை சிந்திக்க கூடிய திராணியுள்ளவர்கள் முஸ்லிம் சமூகத்தின் தலைவர்களாக இருக்கவில்லை. அவர்களுக்கிருந்த ஒரேயொரு நோக்கம், அந்தந்தத் தேர்தல்களில் எப்படி வெல்வது ? எவ்வாறு எம்.பியாவது, ஆகக் கூடினால் எப்படி மந்திரியாக இருப்பது ? வந்த மந்திரிப் பதவியை எப்படிக் காப்பாற்றிக் கொள்வது என்கிற விடயங்களைத் தான் செய்தார்களேயொழிய அவர்கள் முஸ்லிம் மக்களுடைய தலைவர்களாக இருக்கவில்லை. ஏனெனில் முஸ்லிம் மக்களுடைய தலைமைத்துவம் முஸ்லிம் மக்களால் தெரிவு செய்யப்பட்ட தலைமைத் துவமாக இருக்க வேண்டும். தமிழ்ச் சமூகம் அடியிலிருந்து ஒரு தலைமைத்துவத்தைத் தேர்ந்தெடுத்துள்ளது. சிங்கள சமூகம் அடியிலிருந்து ஒரு தலைமைத்துவத்தைத் தேர்ந்தெடுத்துள்ளது. ஆனால் முஸ்லிம் சமூகத்திற்கு மட்டும் மேலேயிருந்து ஒரு தலைமைத்துவம் கொடுக்கப்பட்டது. இத்தகைய மேலேயிருந்து கொடுக்கப்பட்ட தலைமைத் துவத்திற்கு ஒரு சவாலாகவே முஸ்லிம் காங்கிரஸ் தோற்றம் பெற்றது.

**முஸ்லிம்களது நிலங்கள் அரசால் பறிக்கப்படுவது பற்றியோ, முஸ்லிம்களது வர்த்தக மேலாண்மை உடைக்கப்பட்டது பற்றியோ, சிங்கள மொழிவழிக் கல்வியின் காரணமாக முஸ்லிம்களது ஒருமைப்பாடு தகர்க்கப்படுவது பற்றியோ முஸ்லிம் மக்களது தலைமைகள் அக்கறை காட்டுவதில்லை என்று முஸ்லிம் மக்களிடமிருந்து எழுகிற குரல் பற்றி தாங்கள் என்ன கூறுகிறீர்கள் ?**

நீங்கள் கூறுவதில் உண்மை இருக்கிறது. முஸ்லிம் காங்கிரஸ் முஸ்லிம் மக்களது நிலப் பிரச்சினை தொடர்பாக முதலில் செய்த வேலை அவற்றை.அடையாளம் காண்பதாகும். இரண்டாவது, நாம் இழந்து, அடையாளங்கண்ட பிரதேசங்களை திரும்பத் தாருங்கள் எனக் கேட்க வேண்டிய இடங்களில் கேட்டு வருகிறோம். நாம் இவ்வாறு கேட்கிறபோது பேரினவாதக் கட்சிகளில் பதவிகளில் ஒட்டிக் கொண்டிருக்கும் முஸ்லிம் அமைச்சர்கள் இப்பிரச்சினைக்கு முட்டுக்கட்டையாக இருக்கிறார்கள்.

உதாரணமாக அண்மையில் அம்பாறை மாவட்டத்தில் பொன்னன் வெளி என்ற இடத்தில் ஒலுவில் எனும் கிராமத்தைச் சேர்ந்த 300 முஸ்லிம் குடும்பங்களது காணிகள் இல்லாது போயுள்ளன. இது தொடர்பான பிரச்சினையை எடுத்த போது அரசாங்கக் கட்சியில் பதவியில் ஒட்டிக் கொண்டிருக்கும் முஸ்லிம் அமைச்சர் ஒருவர் "இது தேவையில்லை" என முட்டுக்கட்டை போட்டார். நாம் மேலும் வலியுறுத்திய போது 'இது தேவையில்லையென அவர் சொல்கிறார், இவர் சொல்கிறார் என மழுப்பப் பார்க்கிறார்கள்.

இது தொடர்பாக நாம் சர்வகட்சி மாநாட்டில் பேசியிருக்கிறோம். பாராளுமன்றத்தில் பேசி வருகிறோம், இப்போது தெரிவுக் குழுவிலும் பேசியிருக்கிறோம். இவற்றின் போது இந்த நிலப்பிரச்சினை தொடர்பாக ஒரு திட்டவட்டமான முடிவைச் சொல்லியிருக்கிறோம். அதாவது பறிக்கப்பட்ட நிலங்கள் அடையாளங் காணப்பட்டு மீளக் கையளிக்கப்பட வேண்டும். மற்றையது; அரச நிலங்கள், மகாவலி உட்பட பங்கிடப்பட வேண்டிய நிலங்கள், ஒதுக்கப்பட வேண்டும். எவ்வாறெனில், ஏதாவது ஒரு வருடத்தை அடியாகக் கொண்டு அவ்வாண்டில் ஒவ்வொரு மாவட்டத்திலும் இருந்த இன விகிதாசாரத்திற்கேற்ப அது தொடர்ச்சியாகப் பேணப்படக்கூடிய வகையில் நிலங்கள் பங்கிடப்பட வேண்டும் எனக் கோரியிருக்கிறோம்.

**பறிக்கப்பட்ட நிலங்கள் தொடர்பான புள்ளி விபரங்கள்ஏதாவது தரமுடியுமா ?**

துரதிர்ஷ்டவசமாக புள்ளி விபரங் களாகக் காட்டுகின்ற அளவுக்கு எம்மிடம் தரவுகளில்லை. முஸ்லிம் காங்கிரஸ் அந்தளவிற்கு வளர்ச்சி பெறவில்லை. இனிமேல் தான் அது தொடர்பான தரவுகளைச் சேகரிக்க வேண்டியிருக்கிறது.

**மேலெழுந்தவாரியாகவாவது இது தொடர்பான ஏதாவது தகவல்களைத்தரமுடியுமா ?**

அம்பாறை மாவட்டத்தில் ஒலுவில் கிராமம், மற்றையது தீகவாவி பிரதேசத்தில் புனித நகராக்கும் திட்டத்தின் கீழ் 300க்கும் மேற்பட்ட ஏக்கர் நிலங்கள் முஸ்லிம்களிடமிருந்து பறிக்கப்பட்டுள்ளன. கல்முனைக்குடியைச் சேர்ந்த முஸ்லிம்களுக்குச் சொந்தமான 319 ஏக்கர் - இது முடிக்குரிய மன்னரால் முஸ்லிம்களுக்கு வழங்கப்பட்ட துறவிக்காடு என்ற பகுதியாகும்.- சீனிக் கூட்டுத்தாபனத்திற்கு என முஸ்லிம்களிடமிருந்து அபகரிக்கப்பட்டுள்ளது. இதே போல் கல்லோயா அபிவிருத்தித் திட்டத்தின் போது மானாவாரி அடிப்படையில் முஸ்லிம்களுக்கு தற்காலிக உத்தரவுப் பத்திரங்கள் வழங்கப்பட்டு அவர்கள் போய் காடுகளை வெட்டியிருக்கிறார்கள். ஆனால் நான்கு, ஐந்து வருடங்களின் பின் சட்டப்படி உத்தரவுப் பத்திரங்கள் வழங்கப்பட்ட போது அப்பத்திரங்கள் முஸ்லிம்களுக்கு வழங்கப்படவில்லை. இவ்வகையான இழப்புகளும் உண்டு. இதே போல் இறக்காமம், அக்கரைப் பற்று, அட்டாளைச்சேனை, நிந்தவூர், அம்பலத்தாறு ஓயா அம்பலம் ஓயா போன்ற கிராமங்களைச் சேர்ந்த மக்கள் காடுகளை வெட்டி மானாவாரி உத்தரவுப் பத்திரம் வைத்திருக்கிறார்கள். ஆனால் இக் காணிகள் பறிக்கப்பட்டு விட்டன. சட்டப்படி இப்பிரச்சினையை அணுகுகிறபோது அரசு சொல்கிறது, சட்டப்படி இவர்களுக்கு உரிமையில்லை. இது தற்காலிகமான பெர்மிட் என்று. இவ்வாறு முஸ்லிம்கள் ஏமாற்றப்பட்டார்கள். காடு வெட்டும் போது, நான்கு, ஐந்து வருடங்களின் பின் யாராவது வந்து காணியைப் பறிப்பார்கள் என்று யாரும் நினைப்பதில்லை.

அம்பாறை மாவட்டத்தில் முஸ்லிம்கள் 42%. ஆனால் முஸ்லிம்களுக்கு உள்ள நிலங்கள் 17% . அம்பாறை மாவட்டத்திலுள்ள முஸ்லிம்களது விகிதாசாரப்படி முஸ்லிம்களுக்குப் போய்விடும் என்ற அச்சத்தாலோ என்னவோ சீனிக் கூட்டுத்தாபனத்தூடாக சில நடவடிக்கைகள் எடுத்து நிறையக் காணிகளை முஸ்லிம்களுக்கு இல்லாது செய்து விட்டார்கள்.

உதாரணமாக, சீனிக் கூட்டுத்தாபனத்தின் அதிகாரத்தின் கீழ் வருகின்ற காணிகள் அங்கு குறித்த காலம் வேலை செய்து விட்டு விலகுபவர்களுக்கு 3 ஏக்கர் வீதம் வழங்குகிறார்கள். ஆனால் சீனிக் கூட்டுத்தாபனத்தில் வேலைக்கு வருபவர்கள் 90% மானவர்கள் அப்பிரதேச மக்களல்ல. சட்டப்படி பேசுகிறபோது சீனிக் கூட்டுத் தாபனத்தில் வேலை செய்தவர்களுக்கே வழங்கப்படுகிறது என்பார்கள்.

இனி உ அ. அதிபர் பிரிவுகளின் கீழ் காணிகள் பிரிக்கப்பட்ட இன்னுமொரு விடயத்தையும் சொல்லுதல் வேண்டும். 1971ம் ஆண்டு மொரஹொட கொமிஷன் நியமிக்கப்பட்டது. இந்த மொரஹொட கொமிஷனின் அறிக்கையைப் பார்த்தால் தெரியும் எப்படி அம்பாறை மாவட்டக் காணிகள் பிரிக்கப் பட்டதென்று. கல்முனை உ அ.அ. பிரிவில் அன்று 50,000 பேர் இருந்தார்கள். அக்காலப் பகுதியில் மக்கள் ஆகக் கூடிய செறிவாக இருந்த இடம் கல்முனை. இந்த 50,000 பேருக்கு 9.5 சதுர மைல் நிலம் தான் ஒதுக்கப்பட்டது. ஆனால் லபுகல, பாணமை போன்ற உ.அ.அ பிரிவுகள் உருவாக்கப்பட்ட போது அங்கு வாழ்ந்த 3000 பேருக்கு 500 ச. மைல் 600 ச. மைல் என ஒப்பிட முடியாத, கற்பனை பண்ணக்கூட முடியாதளவுக்கு விசாலமான காணிகள் வழங்கப்பட்டன.

இவை எல்லாவற்றுடனும் சேர்த்துச் செய்யப்பட்ட சேதம் என்னவென்றால் மட்டக்களப்பு மாவட்டத்துடன் சேர்ந்திருந்த 100% சிங்கள மக்கள் வாழும் மகாஓயா, விந்தனபத்து ஆகிய பிரதேசங்களை இரவோடிரவாக அம்பாறை மாவட்டத்துடன் சேர்த்தார்கள். இதனால் அம்பாறை மாவட்டத்தில் இரவோடிரவாக 500% சிங்களவர்களுடைய விகிதாசாரம் கூடியது. இவ்வாறான மேலெழுந்தவாரியான தகவல்களே எம்மிடமுள்ளன.

**முஸ்லிம் மக்கள் தொடர்பாக முன்னர் புலிகளுடன் பேசியிருக்கிறீர்களா ?**

இல்லை. முஸ்லிம் காங்கிரஸ் ஒரு போதும் புலிகளுடன் பேசவில்லை. நாம் எப்போதும் புலிகளை பாசிசவாதிகளாகவும், பயங்கரவாதிகளாகவுமே பார்த்திருக்கிறோம். புலிகளுடன் பேசியவர்கள் இன்று முஸ்லிம் காங்கிரசை விமர்சிக்கும். முஸ்லிம் ஐக்கிய முன்னணியினர் தான். அவர்கள் பேசியது மட்டுமல்ல எழுத்து மூலமான ஒப்பந்தத்தையும் செய்து கொண்டுவந்தார்கள். முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணி அதன் தலைவர் எம். எம். முஸ்தப்பா (பழைய மந்திரி) ஜலால்தீன், எம்.சி. அகமட், டாக்டர் பதியுதீன், முகமட் இவர்கள் தான் போய் ஒப்பந்தத்தைச் செய்து கொண்டு வந்தவர்கள். எம்மைப் பொறுத்தவரை இந்-இலங்கை ஒப்பந்தம் எழுதப்படுவதற்கு முன்பே பிரதேச சபைப் தேர்தலில் நாம் போட்டியிட வந்த போது விடுதலைப்புலிகள் முஸ்லிம் காங்கிரஸ் காரர் மீது மரண தண்டனை விதித்தார்கள்.

**எதற்காக உங்களுக்கு மரணதண்டனை விதித்தார்கள் ?**

தொடர் பக்கம் 13 இல்

நன்றி - நூலகத்திட்டம்



## புலிகளுடனும்.......

என்ன காரணம் என்றால் அவர்கள் தான் வட-கிழக்கில், வாழ்கின்ற தமிழ் பேசும் மக்களுடைய ஏக குரல் என்கிற அவர்களது நிலைதான்.

**தற்போது வட-கிழக்கு முஸ்லிம்கள் தொடர்பாக புலிகள் உங்களை பேச அழைத்தால் நீங்கள் அவர்களுடன் பேசத்தயாரா ?**

நாம் யாருடனும் பேசுவோம், யாருடனும் பேச மாட்டோம் என்று சிறுபிள்ளைத்தனமாக அடம்பிடித்துக் கொண்டிருப்பவர்கள் அல்ல நாம். ஆனால் இன்றைய நிலையில் விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரை அவர்களுக்குப் புரியக் கூடிய ஒரு மொழி ஆயுதம் மட்டுமே என்று நான் பல தடவை சொல்லியிருக்கிறேன். அதில் எந்தவிதமான மாற்றமும் இல்லை. நிறையப் பத்திரிகைகாரர் என்னிடம் வந்து புலிகள் அப்படிச் சொல்லியிருக்கிறார்கள், இப்படிச் சொல்லியிருக்கிறார்கள் அதைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள் என்று என்னிடம் கேட்பார்கள். அவர்களுக்கு நான் சொல்வது என்னவென்றால் ஒரு யானை றோட்டால் நடந்து போகிறது அதைப்பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் என்று கேட்டால் என்னால் எப்படி பதில் சொல்ல முடியாதோ அவ்வாறே புலிகளின் நடவடிக்கைகளுக்கும் என்னால் பதில் சொல்ல முடியாது. ஒரு மிருகத்தின் நடவடிக்கைக்கும், புலிகளின் நடவடிக்கைக்குமிடையில் என்னால் - தயவு செய்து மன்னிக்கவும்- என்னால் வேறுபாட்டைக் காண முடியாது. இருந்தும் உருவத்தில் மனிதர்கள் என்பதால் அவர்கள் பேச வேண்டுமென்றால் நாங்கள் பேசத் தயாராக இருக்கிறோம்.

**பேசுவதானால் எந்த அடிப்படையில் பேசுவீர்கள்?**

ஒரேஅடிப்படையில் தான். இரண்டு விசயங்கள். ஒன்று தமிழைப் பேசுகிறோம் என்ற காரணத்திற்காக நாம் தமிழர்களுக்கு அடிமைகள் அல்ல. 1956இல் இருந்து சமஷ்டிக் காலத்தில் இருந்து - எடுத்து வரப்பட்ட இப் போராட்டம் வடக்கு - கிழக்கு என்பது தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய தாயகம் என்ற அடிப்படையில் தான் வந்திருக்கிறது. அவ்வாறாயின் வட-கிழக்கில் தமிழ் மொழியைப் பேசும் இரண்டு இனங்கள் இருப்பது உண்மையானால் வடக்கு-கிழக்கு என்பது தமிழர்களுடைய தாயகம் மாத்திரம் அல்ல. வடக்கு-கிழக்கு என்பது தமிழ், முஸ்லிம் ஆகிய இரண்டு சமூகங்களுக்குரிய தாயகம் என்பது ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும். எக்காரணம் கொண்டும் எவ்வகையிலும் முஸ்லிம்கள் தமிழர்களுக்கு எந்த விதத்திலும் குறைந்தவர்கள் அல்ல. சமத்துவமானவர்கள் என்ற அடிப்படையில் தான் நாம் பேச முடியும்.

**வடக்கு-கிழக்கில் தமிழ் மக்களுக்கு எதிரான யுத்தம் ஒன்றை அரசபடை நடாத்தி ஆயிரக் கணக்கில் மக்களை கொன்று குவித்து ஒரு இன ஒடுக்கலை மேற்கொண்டு வருகிற போது அவ்வாறான ஒரு இனவாத இராணுவத்துள் "ஜிகாத்" என்கிற முஸ்லிம் இராணுவப் பிரிவை ஏற்படுத்த வேண்டும் என முஸ்லிம் காங்கிரஸ் எடுத்த நிலைப்பாடு பேரினவாதத்-திற்கு முஸ்லிம் காங்கிரஸ் உடந்தை ஆகின்றது என்கிற குற்றச்சாட்டை மெய்ப்பிக்காதா ?**

இல்லை. ஏனென்றால் முதலாவது உங்களது கேள்வியின் அடிப்படை என்னவென்றால் வட-கிழக்கில் இராணுவம் தமிழர்களுக்கு எதிராக போராடுகின்றது என்கின்றீர்கள். எமது நிலைப்பாடு இந்த யுத்தம் தமிழர்களுக்கு எதிரானது அல்ல வட-கிழக்கில் இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கிறது புலிகளுக்கு எதிரான யுத்தம். இரண்டாவது புலிகளுக்கு எதிராக போராடிக் கொண்டு இருப்பவர்கள் இராணுவம் மாத்திரம் அல்ல இராணுவத்துடன் சேர்ந்து ஆயுதம் தாங்கிய தமிழ் குழுக்களும் போராடிக் கொண்டிருக்கின்றன.EPDP., PLOT, TELO, ஆகியனவும் போராடிக் கொண்டிருக்கின்றன. இவர்கள் எல்லாம் தமிழர்கள். தமிழீழம் வேண்டும் என்று கேட்டவர்கள். தமிழர்களுக்கு தீர்வு வேண்டுமென்று அரசுடன் பேசிக் கொண்டு இருப்பவர்கள். அவ்வாறாயின் இக் கேள்வியை கேட்பவர்கள் சொல்ல வேண்டும் EPDP தமிழர்களுக்கு எதிரான இயக்கம் PLOT தமிழர்களுக்கு எதிரான இயக்கம் TELO வும் தமிழர்களுக்கு எதிரான இயக்கம் என்று. இது தமிழர்கள் தீர்மானிக்க வேண்டியது. எம்மைப் பொறுத்தவரை இலங்கை இராணுவம் இந் நாட்டில் வாழ்கின்ற சிறுபான்மையினரை பிரதிநிதிப் படுத்தும் இராணுவம் அல்ல என ஏற்றுக் கொள்கிறோம். இருப்பினும் கூட, இந்த இராணுவம் தமிழர்களுக்கு எதிராக யுத்தம் செய்கிறது என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது.

ஜிகாத் என்ற விஷேச பிரிவு இலங்கை இராணுவத்துள் ஏற்படுத்தப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டை நாம் எடுத்ததற்கு பிரதான காரணம் இவ்வமைப்பு தனியே உருவாக்கப்படுமானால் அவ்வமைப்பு கட்டுப்பாடற்ற சூழ்நிலையில் இயங்கும் போது தமது எதிரிகளை சரியாக இனம் காணாமல் எதிரிகள் அல்லாதவர்களையும் தாக்கலாம்.

இன்று "ஜிகாத்" என்ற கோரிக்கை பிழையாக விளங்கப்பட்டுள்ளது. "ஜிகாத்" என்பது எமது ஆத்மீக நம்பிக்கைகளுடன் சேர்ந்த ஒன்றாகும். "ஜிகாத்" என்றால் முஸ்லிம்கள் என்ற காரணத்திற்காக மட்டும் எங்களை யாராவது அழிப்பதற்கு முன்வந்தால் அவர்களுடன் போராடுவது எமது ஆத்மீகக் கடமையாகும். அதில் மரணிக்க வேண்டியதும் எமது ஆத்மீகக் கடமையாகும். வடக்கில் இருந்து முஸ்லிம்கள் விரட்டப்பட்ட விதம், சோனகத்தெருவில் இருந்து முஸ்லிம்கள் விரட்டப்பட்ட விதம், அண்மையில் "கிரான்" குளத்தில் "வானை" நிறுத்தி முஸ்லிம்கள் மாத்திரம் இறங்குங்கள் என்று கூறிய விதம் கும்புறுமுனையில் இடம் பெற்ற சம்பவங்கள் வட-கிழக்கு மாகாணசபை இருந்த போது வரதராஜப் பெருமாளுடைய காலகட்டத்தில் காரை தீவில் 42 முஸ்லிம்கள் மாத்திரம் கொல்லப்பட்ட விடயம் இவ்வாறு கொல்லப் பட்டவர்களுள் மேலதிகமாக ஒரு தமிழர் இருந்திருந்தால் இது ஜிகாத் ஆக மாட்டாது. கிரான் குளத்தில் போன வானில் 19 முஸ்லிம்கள் கொல்லப் பட்டார்கள். இதில் மேலதிகமாக ஒரு தமிழர் கொல்லப் பட்டிருந்தால் கூட இது "ஜிகாத்"தாக மாட்டாது சோனகத் தெருவில் இருந்து முஸ்லிம்கள் விரட்டப்பட்ட போது சில தமிழர்களும் வி. புலிகளின் கொள்கைக்கு விரோதமானவர்கள் என்ற காரணத்திற்காக விரட்டப் பட்டிருந்தால் இது ""ஜிகாத்" ஆக மாட்டாது. எப்படி முஸ்லிம்கள் வி. புலிகளின் கொள்கைகளை ஏற்றுக் கொள்ள மாட்டார்களோ, அதே போல் தமிழர்களிலும் புலிகளின் கொள்கைகளை ஏற்றுக் கொள்ளாதவர்கள் இருக்கின்றார்கள். புலிகளின் கொள்கைகளை ஏற்றுக் கொள்ளவில்லை அக் கொள்கைகளில் இருந்து வேறுபட்டவர்கள் என்ற காரணத்திற்காக முஸ்லிம்கள் அழிக்கப்படவில்லை. முஸ்லிம்கள் என்ற காரணத்திற்காகவே அழிக்கப் பட்டார்கள். வி. புலிகள் வெறுக்கின்ற, அவர்களுக்கு உடன்பாடு இல்லாத ஆத்மீக நம்பிக்கையைக் கொண்ட ஒரு சமூகம் என்பதற்காக அவர்கள் கொல்லுகிறார்கள் என்றால் அவர்களைக் கொல்லுவதைத் தவிர எங்களுக்கு வேறு வழியே இல்லை. இது எமது மார்க்கக் கடமை. இன்று வடமாகாணத்தில் மட்டும் 170க்கும் மேற்பட்ட பள்ளி வாசல்கள் மூடப்பட்டுக்கிடக்கின்றன. எனவே முஸ்லிம்கள் என்ற காரணத்திற்காக எந்தச் சக்தி எம்மை அழிக்க வந்தாலும் நாம் அதனை எதிர்ப்போம். எனவே இதுவரை புலிகளை ஒழிப்பதில் இலங்கை இராணுவம் வெற்றி அடையவில்லை. PLOT ம் வெற்றி அடையவில்லை TELO வும், வெற்றியடைய வில்லை EPDP யும் வெற்றியடைய வில்லை. நாம் கேட்கிறோம் எங்களிடம் அந்தப்பொறுப்பைத் தாருங்கள் நாங்கள் புலிகளுக்கு எதிராக யுத்தத்தை நடத்துகிறோம். தமிழர்களுக்கு எதிராக அல்ல தமிழர்கள் எமது நண்பர்கள்.

இதை அமைப்பு ரீதியாக செய்வதானால் எங்களுக்குள்ள ஒரே வழி இராணுவத்துள் "ஜிகாத்" பிரிவை உருவாக்குவதுதான் இல்லையென்றால் TELO, EPDP, PLOT போன்று சாரத்தைக் கட்டிக்கொண்டு ஆயுதங்களைத் தூக்கிக் கொண்டு நாங்களும் காடுகளில் திரிய வேண்டும். அது இன்னும் கூடுதலான விளைவை ஏற்படுத்தும்.

மற்றையது: முஸ்லிம்களின் பாரம்பரியங்களை பேணும் வகையில் தற்போது இராணுவம் இல்லை பன்றி இறைச்சி சாப்பிட வேண்டும். சாராயம் குடிக்க வேண்டும். தாடி வைக்க முடியாது. ஐந்து நேரம் தொழ முடியாது, என்வேதான் "ஜிகாத்" என்ற தனித்த அமைப்பை கோருகிறோம். இது முஸ்லிம் சமூகத்தின் பாதுகாப்பிற்காக அமைக்கப்படுவதேயொழிய பேரினவாத கட்சிகளுடன் சேர்வதற்கல்ல.

**இலங்கை அரசால் நடாத்தப் படும் யுத்தம் தமிழ் மக்களுக்கு எதிரானதல்ல புலிகளுக்கு எதிரானது தான் என்றா கூறுகிறீர்கள் ?**

ஆம். புலிகளுக்கு எதிரானது தான். ஆனால் புலிகளுக்கெதிராகத் தொடங்கப்பட்ட இந்த யுத்தத்தை யுத்தத்தில் ஈடுபடுபவர்கள் துஷ்பிரயோகம் செய்து அப்பாவி மக்களுக்கெதிராகத் திசை திருப்பலாம்.

> **"தமிழைப் பேசுகிறோம் என்பதற்காக நாம் தமிழர்களுக்கு அடிமைகளல்ல"**
>
> **தமிழர்களுடைய விடுதலைக்காகவா முஸ்லிம்களைக் கொல்கிறார்கள்**

**தென்னிலங்கை பேரினவாதக் கட்சிகளில் இருக்கும் முஸ்லிம் தலைமைகள் முஸ்லிம்களுக்கு எதிரான நிலைப்பாடுகளை எடுப்பது போல ஸ்ரீலங்கா அரசின் கீழ் கட்டுப்படும் "ஜிகாத்" படைப் பிரிவு முஸ்லிம்களுக்கு எதிராக திரும்பாதா ? உதாரணமாக 70களிலும் 80களின் இறுதியிலும் தென்னிலங்கையில் தமது இளைஞர்களுக்கெதிராகவே துப்பாக்கியைத் திருப்பியது போல.**

மாறலாம். அதற்காக ராணுவமே தேவையில்லை எனக் கூறமுடியாது. உதாரணமாக தமிழீழம் கிடைக்கிறது என வைத்துக் கொள்வோம். அப்போது தமிழீழத்திற்கென்றொரு ஒரு ராணுவம் வரும். அந்த தமிழீழ ராணுவம் கூட தமிழ்ப் பேரினவாதத்தின் சக்தியாக வராது என்று நீங்கள் உத்தரவாதம் தர முடியாது. ஜிகாத் படை அமைக்கப்படுவதன் நோக்கம் விடுதலைப் புலிகளை அழிக்க வேண்டும் அவர்கள் விடுதலைப் போராட்டத்தில் ஈடுபடுகிறார்கள் என்பதற்காகவல்ல. அவ்வாறாயின் விடுதலைப் புலிகள் இன்னும் ஆயிரம் ஆண்டுகளுக்கு நாட்டில் இருக்கலாம். எங்களுக்கு அதைப்பற்றிப் பிரச்சினை இல்லை. நாங்கள் புலிகளைப் பற்றிப் பேச மாட்டோம். ஆனால் புலிகள் தம்முடைய போராட்டத்தில் முஸ்லிம்களை அழிப்பதுவும் ஒரு இலக்கு என்று நினைத்தால் தமிழர்களுக்கு என்ன கிடைத்தாலென்ன இல்லாவிட்டாலென்ன எங்களுக்கு அது பிரச்சினையில்லை. எங்களுடைய பாதுகாப்பை பற்றித் தான் நாங்கள் சிந்திக்கிறோம். தமிழர்களுடைய விடுதலைக் காகவா முஸ்லிம்களை கொல்கிறார்கள் ? இவ்வடிப் படையில் தான் புலிகளை அழிக்க வேண்டும் என்கிறோம்.

**முஸ்லிம்களுக்கெதிராகப் புலிகள் தாக்குதல் நடாத்தியது போல "ஜிகாத்" என்கிற ஊர்காவற்படைப்பிரிவு தமிழ் மக்களுக்கெதிரான பல தாக்குதல் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது. அவ்வாறிருக்க புலிகளின் முஸ்லிம்கள் மீதான தாக்குதலை தமிழ் ஜனநாயக சக்திகளும், முற்போக்காளர்களும் கண்டித்தது போல ஜிகாத் மீதான கண்டனத்தை முஸ்லிம் காங்கீரஸோ, முஸ்லிம் அரசியல் தலைமைகளோ தெரிவிக்கவில்லை ஏன் ?**

அப்பாவித் தமிழர்கள் தாக்கப்பட்ட போதெல்லாம் அதைக் கண்டித்த ஒரேயொரு சக்தி முஸ்லிம் காங்கிரஸ். பல தடவைகள் பல அறிக்கைகள் விட்டிருக்கிறோம். பாராளுமன்றத்தில் பேசியிருக்கிறோம். இது ஒன்று தான் எங்களால் செய்யக் கூடியது. ஆனால் தமிழ் இயக்கங்கள் இதைச் செய்தது ஜிகாத் தான் என்று சொல்வார்கள். இதற்கு எந்த விதமான ஆதாரமும் இல்லை. முதலாவது அவ்வாறான ஜிகாத்படை இருக்கிறதா என்பதில் எனக்குச் சந்தேகங்கள் இருக்கின்றது.

**சர்வதேச மன்னிப்புச் சபை யின் அறிக்கையில் "ஜிகாத்" படையின் நடவடிக்கைகள் பற்றிக் குறிப்பிடப் பட்டுள்ளதே ?**

இந்தச் சர்வதேச மன்னிப்புச் சபையில் எமக்கு நம்பிக்கை இல்லை. இந்த மன்னிப்புச்சபை எத்தனையோ அறிக்கை விட்டுள்ளது. இது காத்தான்குடியில் நடைபெற்றதைப் பற்றி ஏதாவது எழுதியிருக்கா ? ஏறாவூர் சதாம் ஹுசைன் கிராமத்தில் நடந்த முஸ்லிம் படுகொலைகளைப் பற்றி எழுதியிருக்கிறதா ? இந்தச் சர்வதேச மன்னிப்புச் சபை என்பது அமெரிக்காவின் கையாட்களாக இருக்கலாம். அல்லது அமெரிக்காவை ஏற்கும் மொஸாட்டின் கையாட்களாக சர்வதேச முஸ்லிம் சமூகத்தின் எதிரிகளாக இருக்கலாம். எங்களுக்கு அதைப்பற்றி அக்கறையில்லை. கேள்வி என்னவென்றால் அப்பாவித் தமிழர்களை ஏதாவது ஒரு முஸ்லிம் இயக்கம் கொல்கிறதா ? அப்படி ஒரு இயக்கம் கொலை செய்ததாக சுயேச்சையான சபை அல்லது இயக்கம் அல்லது அமைப்பு நிரூபித்ததா ? இவ்வாறு பேசுபவர்கள் தமது மனச்சாட்சியைப் புதைத்து விட்டுப் பேசுகிறார்கள்.

நன்றி - நூலகத்திட்டம்



# தேசிய விடுதலைப் போராட்டம் - ஒரு மீளாய்வு நோக்கி -

,சென்ற இரு இதழ்களிலும் முதலாவது உடைவிற்கு பின்னரான தமிழ் இளைஞர் பேரவையின் முக்கியத்துவம் பற்றிப் பார்த்தோம். தனி நாட்டுக்கான பிரச்சாரங்களைப் பரவலாக்குவதற்கான நடவடிக்கைகளை எடுத்தமை, அகதிகள் புனர்வாழ்வு நடவடிக்கைகளில் ஈடுபட்டமை, தமிழ்ப் பிரதேசத்திற்கான சுய பொருளாதார முயற்சியில் அக்கறை செலுத்தியமை, ஆயுதம் தாங்கிய அமைப்பிற்கு ஊக்கியாக செயற்பட்டமை, குடா நாட்டிற்கு வெளியேயான அரசியல் நடவடிக்கைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்தமை, பெண்களையும் முழு நேர வேலைகளில் ஈடுபடுத்தியமை என்கிற விடயங்களைப் பொறுத்து தமிழர்களது போராட்ட வரலாற்றில் முக்கியத்துவம் பெற்ற அமைப்பாக இருந்தது என்று பார்த்தோம்.

இவ்விதழில் முதலாவது உடைவிற்கு பின்னரான தமிழ் இளைஞர் பேரவ்யின் பணிகள் எந்தளவு தூரம் வெற்றியைப் பெற்றுக் கொண்டன என்பது பற்றி ஆராய்வோம்.

இதன் போராட்ட நடவடிக்கைகளில் தமிழ்ப் பிரதேசத்துக்கான பொருளாதாரத்தை கட்டியெழுப்புதல் எல்லைப்புறக் குடியேற்றங்களை மேற்கொள்ளல் என்பவற்றினை ஆராய்வோமாயின் அதில் போதியளவு வெற்றிகளைப் பெற்றுக்கொள்ளவில்லை என்றே கூற வேண்டும்.

ஒரு பிரேதசத்தின் பொருளாதாரத்தை கட்டியெழுப்புதல் எனும் முயற்சியினை மேற்கொள்ளும்போது அப்பிரதேசத்தின் ஆட்சி அதிகாரங்கள் நம்மிடம் இருக்கும்போது மட்டுமே நமது எண்ணங்களுக்கேற்ற வகையில் கட்டி எழுப்ப முடியும், ஆட்சி அதிகாரம் கையில் இருக்கும் போது மட்டுமே உற்பத்தி உரிமையையும், விநியோக உரிமையையும் பெற்றுக் கொள்ள முடியும். இவ்விரு உரிமைகளையும் பெற்றுக் கொள்கின்ற போதே வெளியிலிருந்து வரும் பொருட்களை கட்டுப்படுத்தி மக்கள் மத்தியில் எமது உற்பத்திகளை அறிமுகப்படுத்த முடியும். எமது பொருட்கள் தரமாக இருந்தால்கூட பழைய நுகர்வை விடுத்து புதிய நுகர்வை மக்கள் மேற்கொள்வதற்கு நீண்டகாலம் எடுக்கும். வர்த்தகர்களும் கொள்வனவு செய்கையில் பழைய பொருட்களை விட்டு புதிய பெரருட்களை கொள்வனவு செய்ய முன்வர மாட்டார்கள். இந்நிலைமைகளினால் ஏற்பட்ட இன்னல்களை தமிழ் இளைஞர் பேரவையின் பொருளாதாரத்தைக் கட்டி எழுப்புதல் நடவடிக்கைகளில் அவதானிக்க முடிந்தது. தங்களுடைய உற்பத்தி பொருட்களை யாழ் நகரில் உள்ள ஒவ்வொரு கடையாக ஏறி இறங்கி இவர்கள் விற்க முயன்றபோதும் வர்த்தகர்கள் பெரிதளவிலான ஆதரவினை காட்டவில்லை. தனியார் வர்த்தகர்கள் மாத்திரமல்ல தமிழர் விடுதலைக் கூட்டணியின் கட்டுப்பாட்டில் இருந்த பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாஜங்கள் கூட இதனை ஆதரவுடன் நோக்கவில்லை. உண்மையில் திலகவதியும் யோகலிங்கமும் தங்களுடைய அமைப்பினால் உற்பத்தி செய்யப்பட்ட தும்புத்தடிகளை சைக்கிள்களின் பின்னால் கட்டிக் கொண்டு பெரிய கடைகளின் படிகளிலும் பலநோக்குக் கூட்டுறவுச் சமாஜப் படிகளிலும் ஏறி இறங்கினார்கள். இறைகுமாரன் ஒவ்வோர் ஆலயங்களின் பெரிய விழாக்களிலும் அகதிகளினால் செய்யப்பட்ட துவாய்களையும், படுக்கை விரிப்புக்களையும் பரப்பி தமிழீழ உற்பத்திக்கு ஆதரவு தாரீர் என்ற பெயர்ப்பலகையின் கீழ் விற்பனையை மேற்கொள்வார். அனேகமாக அளவெட்டி, கும்பழாவளை பிள்ளையார் கோவில் திருவிழாக் காலங்களில் இவரது கடையைக் காணலாம். இவர்கள் இவ்வாறு முயற்சிகளை மேற்கொண்ட போதும் அது பெரிதளவிலான வெற்றியினை பெற்றுக் கொடுக்கவில்லை.

தேசிய உற்பத்திக்கான பிரச்சினை என்பதுகூட பெரிதளவில் மேற்கொள்ளப்படவில்லை என்றே கூற வேண்டும். இப்பிரச்சாரம் பாரிய அளவில் எடுக்கப்பட வேண்டுமாயின் தமிழர் விடுதலைக் கூட்டணியே அதற்கு முயற்சித்திருக்க வேண்டும். இந்தியாவில் இந்திய தேசிய காங்கிரஸினால் மேற்கொள்ளப்பட்டது போல் அந்நியப் பொருட்கள் பகிஸ்கரிப்பு போராட்டத்தை நடாத்தி அதனூடாக உள்ளூர் உற்பத்தியை பயன்படுத்த வேண்டியதன் அவசியத்தை மக்களுக்கு புரிய வைத்திருக்க வேண்டும். ஆனால் தமிழர் விடுதலைக் கூட்டணி இது தொடர்பில் எவ்வித முயற்சியும் எடுக்காததோடு தனது வர்க்கத் தன்மை காரணமாக இதனை ஆதரவோடும் நோக்கவில்லை. இந்நிலையில் தமிழர் இளைஞர் பேரவையினால் இது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட பிரச்சாரம் போதுமானதாக இருக்கவில்லை. தமிழ் இளைஞர் பேரவையில் கூட. அங்கத்தினர் அனைவரும் இதற்கு போதியளவு உற்சாகம் காட்டி இதனை ஓர் முக்கிய வேலைத்திட்டமாக கருதவில்லை. அமைப்பிலிருந்த ஒரு சிலரே அதில் கூடிய அக்கறை செலுத்தியிருந்தார்கள். அதிகார மட்டத்தில் ஆதரவு இல்லை; வர்த்தகர்களின் ஆதரவு இல்லை, மக்களிடம் போதியளவு பிரச்சாரம் இல்லை, இந் நிலையில் இவர்களின் தேசிய உற்பத்தி முயற்சி போதியளவு வெற்றியை அளிக்கவில்லை. எனினும் பிற்காலத்தில் போர் நடவடிக்கைகளினால் தென் இலங்கையில் இருந்து பொருட்கள் வருவது முற்றாக நிறுத்தப்பட்ட போது இவர்களால் ஆரம்பிக்கப்பட்ட முயற்சிகளே ஓர் ஆரம்பப் படிக்கல்லாக இருந்து உதவியது எனலாம்.

தமிழ் இளைஞர் பேரவையின் குடியேற்ற முயற்சிகள் கூட போதியளவு வெற்றியளிக்கவில்லை என்றே கூறலாம். இவர்கள் குடியேற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது குடியேற்றப்பட்ட மக்களின் பாதுகாப்பு,. பொருளாதாரப் பிரச்சினைகளில் போதுமானளவு கவனம் செலுத்தாமல் எல்லைப் புறங்களைப் பாதுகாத்தல் வேண்டும் என்பதிலேயே கூடியளவு அக்கறை செலுத்தினர், இக்குடியேற்றங்களின் மூலம் சிங்களக் குடியேற்றங்களை தடுத்து விடலாம் எனவும் கருதினர். ஆனால் நடைமுறையில் அரசினால் திட்டமிட்ட குடியேற்றங்களின் மீது வன்முறை பிரயோகிக்கப்பட்ட போதுஅங்கு குடியேற்றப்பட்ட மக்களினாலோ குடியேற்றப் பணிகளை மேற்கொண்ட இளைஞர்களினாலோ நின்று பிடிக்க முடியவில்லை. மக்களும் ,தொண்டர்களும் குடியேற்றங்களை விட்டு விலகிட வேண்டிய நிலை எற்பட்டது. இந்நிலையைச் சாதகமாகக் கொண்டு லட்சக் கணக்கில் செலவு செய்யப்பட்டு மேற்கொள்ளப்பட்ட குடியேற்றங்கள் சிங்கள மக்களை குடியேற்றுவதற்கும் இராணுவ முகாம் அமைப்பதற்கும் பயன்படுத்தப்பட்டது. நெடுங்கேணியில் கென்ற் பண்ணை, டொலர் பண்ணை குடியேற்றங்கள் இதற்கு சிறந்த உதாரணங்களாகும். குடியேறியவர்களில் பெரும்பான்மையோர் மலையக மக்களாக இருந்த இடத்து மலையக புத்திஜீவிகள், அரசியல்வாதிகள் என்போரிடமிருந்து பாதுகாப்பற்ற இடத்தில் எமது மக்களை குடியேற்றி இம்சிக்கிறீர்கள் என்ற குற்றச்சாட்டையும் இவர்கள் பெற்றுக்கொள்ள வேண்டி நேரிட்டது.

குடியேற்றப்பட்டவர்களின் பொருளாதார பிரச்சினைகளை தீர்ப்பதிலும் போதியளவு அக்கறை இவர்களால் காட்டப்படவில்லை. மழைக் காலங்களைத் தவிர ஏனைய காலங்களில் அப்பிரேதசங்களில் பூர்வீகமாக வாழ்கின்ற பணக்கார விவசாயிகளிடம் கூலி வேலை செய்ய வேண்டிய நிலைக்கே குடியேற்றப்பட்டவர்கள் தள்ளப்பட்டார்கள். பணக்கார விவசாயிகள் அவர்களை ஈவிரக்கமின்றி சுரண்டியதோடு பெண்களை பாலியல் வன்முறைக்கும் உள்ளாக்கியிருந்தார்கள். கிளிநொச்சி, வவுனியா மாவட்டங்களில் இவ்வாறு ஒடுக்குமுறைக்கு உள்ளாக்கப்பட்ட மலையக மக்கள் நூற்றுக்கணக்கில் காணப்படுகின்றனர்.

மழைக் காலங்களில் தமக்கெனகொடுக்கப்பட்ட நிலங்களில் இவர்கள் உழுந்து, பயறு, கௌப்பி போன்றவற்றை சிறயளவில் மேற் கொண்டாலும் அவ் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்வதற்கான வசதிகள் எதுவும் செய்து கொடுக்கப்படவில்லை. இதனால் தரகர்கள் குறைந்த விலையில் கொள்ளை இலாபத்தில் அவர்களின் உற்பத்திப் பொருட்களை கொள்வனவு செய்தார்கள்.

சமூக மட்டத்திலும் குடியேற்றப்பட்டவர்களை பூர்வீகமாக வாழ்ந்தவர்கள் சந்தேகக் கண்ணோட்டத்தோடும் நோக்குகின்ற போக்கே வளர்ந்திருந்தது. இரு சமூகத்தினரும் ஒன்றோடொன்று இணையாமல் தனித்திருக்கவே முறபட்டனர். தமது பொது நிறுவனங்களில் குடியேற்றப்பட்டவர்களை அங்கத்தவர்களாக சேர்ப்பதற்கும் பூர்வீகமாக வாழ்ந்தவர்கள் பின் நின்றனர். குறிப்பாக வவுனியா மாவட்டத்தில் இந்நிலைமையை தாராளமாக அவதானிக்க முடிந்தது. இம் மாவட்டத்தில் வன்னி மக்கள் மலையக மக்களின் வருகையினால் தங்களுடைய வீதாசாரம் குறைந்து விடுமோ என அஞ்சியிருந்தனர். யாழ் அகற்றும் சங்கம் என முன்பு அமைக்கப்பட்டதுபோல் மலையக மக்களை அகற்றும் சங்கம் என ஒரு சங்கத்தை அமைத்து விடுவார்களோ என அஞ்ச வேண்டிக் கூட ஏற்பட்டது.

இதைவிட குடியேற்றங்களின் போது இவர்கள் விட்ட தவறுகளில் பாரதுாரமான தவறு அரசியல் வேலைகளில் முக்கியமாக ஈடுபட்டவர்களையே அவ்வேலைகளிலும் ஈடுபடுத்தியமையாகும். வெளிப்படையான அரசியல் வேலைகளில் ஈடுபட்டு பொலீசாரால் அடையாளம் காணப்பட்டவர்களே குடியேற்றத் திட்டங்களின் முக்கிய பொறுப்புக்களையும் ஏற்றிருந்தனர். சந்ததியார், இறை குமாரன், பேபி சுப்பிரமணியம் (தற்போது பிரான்ஸில் உள்ளார். எல்.ரி.ரி.ஈ இல் உள்ளவரல்ல) திலகவதி, திருமதி பொன்னுத்துரை (சிவகுமாரனின் தாயார்) என்போர் இவ்வாறு அடையாளம் காணப்பட்டவர்கள் ஆவர். இவர்கள் பொறுப்புக்களை ஏற்ற போது அரசாங்கமும் பயங்கரவாதப் பூச்சாண்டியை காட்டி குடியேற்றத்திட்டங்களுக்கு படைகளை அனுப்பியது. இந்நிலை குடியேற்றத்திட்ட வேலைகளை பொறுப்பேற்றிருந்த சமூக நிறுவனங்களான அகதிகள் புனர்வாழ்வுக்கழகம், மனித முன்னேற்ற நடுநிலையம், காந்தீயம் போன்றவற்றையும் தொடர்ந்து தமது பணிகளை ஈடுபடவிடாது தடுத்தது. அரசியல் சார்புள்ளவர்கள் குடியேற்ற வேலைகளில் ஈடுபடுவதைத் தவிர்த்து அவ் வேலைகளை முற்றாகவே சமூக நிறுவனங்களின் பொறுப்பில் விட்டிருந்தால் இந்நிலையை ஓரளவு தடுத்திருக்கலாம்.

இவ்வாறு மேற்கூறிய இரு விடயங்களில் தமிழ் இளைஞர் பேரவையின் செயற்பாடுகள் விமர்சனத்துக்குதரியதாக இருந்த போதிலும முக்கியத்துவம் பாரிய அளவிலானதாகவே உள்ளது. சிவில் பணியாற்றிய இறைகுமாரன், பேபி சுப்பிரமணியம், திலகவதி, ஊர்மிளா, யோகநாதன் என்போர் மகத்தான போராளிகளாகே விளங்கினர். அதுவும சந்ததியாரும் இறைகுமாரனும் தமிழ் தேசியப் போராட்டத்தில் இலகுவில் மறக்க முடியாத உன்னத போராளிகளாவர். அவர்களின் கொடூர மறைவு தமிழ் தேசிய போராட்டத்தின் பேரிழப்பு ஆகும். தேசப் போராட்ட வரலாற்றில் அவர்கள் இருவரும் ஒரு பெரும் சகாப்தம் என்றே கூற வேண்டும்.

**அன்னபூரணா**




நமக்கான காலம்
போய் விட்டதைப் போலுள்ளது
யுத்தம் வந்து
ஊர்களுக்குள் நதிகளையும்,
சிற்றாருகளையும் புகவிட்டு
வாரியடித்துக் கொண்டு
போயிருக்குகிறது.

போன ஆண்டிலும் முன்பனிக்காலத்தில்
யுத்தம் வந்து போனது
கடந்த காலத்திற்காக
பத்தாம் வகுப்பு பள்ளிக்கூடத்திற்காகவும்
அறுவடை செய்த
வயல்வெளிகளுக்காகவும்
அது ஏங்கவைக்கவில்லை
நான்
இனி நெடுகலும் தனித்துத் தான்
போனேன்
வயல்காட்டு எல்லைப் பூவரச
மரங்களுக்குத் தெரியும்
நிலம் இருண்ட பிறகு
கருங்கல் துருத்திக் கொண்டிருக்கிற
தார்றோட்டில்
உழவு முடிந்த கடா மாடுகளைச்
சாய்த்துக்கொண்டு போனான் ஒருவன்

காட்டுக்குள்ளிருந்த தனித்த பட்ட மரத்தில்
அது மேலும் வாழ விரும்பி
இறப்புக்காக முதிய அனுபவங்களுடன் நின்ற
பட்ட மரத்தில்-
கொட்டுக் காகம் உச்சிக்கிளையில் வந்திருந்தது.

ஒன்றாய்ச் சேர்ந்த துயரங்களுடன்
இயக்கத்துக்குப் போனவர்களில்
ஆனையிறவிலும் மணலாற்றிலும் செத்துப்போக
நான் மட்டும்
ஒரு வலிய சாவுக்காகக் காத்திருக்கிறேன்.

**நட்சத்திரன் செவ்விந்தியன்**

நன்றி - நூலகத்திட்டம்



# வடக்கு–கிழக்கு முஸ்லிம்களின்

# அரசியல் எதிர்காலம்

**- மருதூர் பஷீத்**

வடக்கு–கிழக்கு முஸ்லிம்களின் அரசியல் வரலாற்றில் நெருக்கடி மிக்க கட்டம் ஒன்று இப்போது நகர்ந்து கொண்டிருக்கிறது. இன்று உச்சநிலையை அடைந்துவிட்ட தேசிய இனப்பிரச்சினையில் தவிர்க்க முடியாத ஒரு அங்கமாகப் பிணைந்திருக்கும் வடக்கு–கிழக்கு முஸ்லீம்கள் தமக்கென பொருத்தமான அரசியல் தீர்வைக் கண்டு கொள்ள வேண்டிய அவசியத்தில் இருக்கிறார்கள். இத்தகைய தீர்வு அவர்களின் தனித்துவத்தையும், உரிமைகளையும் பேணுவதோடு எதிர்கால சந்ததியின் உறுதியான நிலைத்தலுக்கான அடித்தளமாகவும் அமைய வேண்டும். சமூகப் பொறுப்பு மிக்க இந்த விடயம் பற்றி, அண்மைக் காலங்களில் பலதரப்பட்ட முஸ்லிம்களிடமிருந்தும் கருத்து ரீதியானதும் செயல்ரீதியானதுமான வெளிப்பாடுகள் முனைப்புப் பெற்றிருக்கின்றன. இவ்வித சூழலில், பொதுவாக இலங்கை முஸ்லிம் சமூகத்தின் உரிய கவனத்தைப் பெறாதிருக்கும் சில யதார்த்த நிலைமைகளை வெளிப்படுத்துவதன் மூலம், வடக்கு–கிழக்கு முஸ்லிம்களுக்கான அரசியல் தீர்வு பற்றிய மதிப்பீட்டை முன் வைக்கும் முயற்சியில் இக்கட்டுரை எழுதப்படுகின்றது.

இலங்கை முஸ்லிம்களின் அரசியல் பாதையில், முக்கிய திருப்பங்கள் நிகழும் சந்தர்ப்பங்களின் போதெல்லாம் இலங்கை முஸ்லிம்களின் குடிசனப் பரம்பல் ஒரு முக்கிய விடயமாக முன்வைக்கப் படுகின்றது. அதாவது சிங்கள மக்களிடையிலும், தமிழ் மக்களிடையிலும் கலந்து வாழ்கின்ற சிக்கலான நிலையானது இலங்கை முஸ்லிம்களின் அரசியல் தீர்மானங்களின் போது, காத்திரமான பாதிப்பைச் செலுத்துகின்றது. இந்த நிலை, இன்றைய தேசிய இனப் பிரச்சினையில் வடக்கு–கிழக்கு முஸ்லிம்களுக்கான தீர்வைத் தேடும் முயற்சியிலும் தொடர்கின்றது. எனவே இந்த விடயத்தைத் தெளிவாக விளங்கிக் கொள்ளும் பொருட்டு, இலங்கை முஸ்லிம்களின் குடிசனப் பரம்பலும் அவர்களது சமூக, பொருளாதார, அரசியல் தளங்களில் காணப்படுகின்ற விசேட தன்மைகளும் இங்கு பரிசீலிக்கப்படுகின்றன.

மேற்படி அட்டவணை தரவுகளிலிருந்து பின்வரும் முடிவுகளுக்கு நாம் வர முடியும்.

(1) பொதுவாக தெற்கில் (இங்கு தெற்கு எனக் குறிப்பிடப்படுவது வடக்கு – கிழக்குக்கு வெளியே உள்ள பிரதேசங்களையாகும்.) மூன்றில் இரண்டு பங்கு முஸ்லிம்களும், வடக்கு – கிழக்கில் மூன்றில் ஒரு பங்கினரும் வாழ்கின்றனர். ஆயினும் இவர்களின் குடிசனப் பரம்பல்கள் மிகவும் வேறுபட்ட விதங்களில் அமைந்துள்ளன.

தெற்கிலுள்ள பதினேழு மாவட்டங்களில் ஆறில் மட்டுமே (கொழும்பு, களுத்துறை, கண்டி, மாத்தளை, புத்தளம், அநுராதபுரம்) தேசிய சராசரியான 7.12 வீதத்திலும் சற்று அதிகமாக முஸ்லிம்கள் வாழ்கிறார்கள். வடக்கு – கிழக்கிலுள்ள எட்டு மாவட்டங்களில் (தற்போதைய கிளிநொச்சி மாவட்ட அடங்கலாக) நான்கில் (அம்பாறை, திருகோணமலை, மட்டக்களப்பு, மன்னார்) தேசிய சராசரியிலும் பார்க்க மூன்று தொடக்கம் ஆறு மடங்கு அதிகமாக வாழ்கிறார்கள். அதாவது பெரும்பான்மை முஸ்லிம்கள் தெற்கில் வாழ்ந்தாலும் அவர்கள் அங்கு பரவலாக சிதறிய நிலையிலேயே வாழ்கிறார்கள். வட்க்கு – கிழக்கில் குறைவாக வாழ்ந்தாலும், அங்கு அவர்கள் குறிப்பிடத்தகுந்த செறிவில் வாழ்கின்றனர்.

(2) குடிசனப் பரம்பல் வேறுபாடானது, சமூக, பொருளாதாரத் தளங்களில் வேறுபாடுகளுக்குக் காரணமாகின்றது. வடக்கு – கிழக்கில் செறிவாக வாழும் முஸ்லிம்கள் அங்கு தமக்கென சுயமான, தனித்துச் செயல்படக் கூடிய பொருளாதார அமைப்பைப் பெற்றுள்ளார்கள். ஆனால் தெற்கில் சிதறி வாழுகின்ற முஸ்லிம்களோ, ஏனைய சமூகங்களைச் சார்ந்து, அவர்களுடன் நெருக்கமாகப் பிணைந்த நிலையிலேயே வாழ்கிறார்கள்.

(3) வேறுபட்ட சமூக, பொருளாதார நிலமைகள், வேறுபட்ட சமூக, அரசியல் நிலைமைகளைத் தோற்றுவிக்கின்றன. வடக்கு – கிழக்கில் சுயமாக, தனித்து வாழும் முஸ்லிம்கள் மத்தியிலிருந்து சுயமான சமூக, அரசியல் இயக்கங்கள் உருவாவது சாத்தியப்படுகின்றது. தெற்கில் ஏனைய சமூகங்களோடு பிணைந்தே வாழும் நிலையிலுள்ள முஸ்லிம்களிடத்தில், சுயமான சமூக, அரசியல் இயக்கங்கள் உருவாவது சாத்தியப்படக் கூடியதாக இல்லை.

(4) தேசிய இனப் பிரச்சினையில் அமைப்புரீதியான தீர்வுகள் எதனையும் காண்பதற்கு ஒரு சமூகம் செறிவாக வாழ்வதும், சுயமான சமூக அரசியல் இயக்கங்களைத் தோற்றுவிப்பதும் முக்கியமானது. இந்தவகையில் வடக்கு – கிழக்கு முஸ்லிம்கள் தமக்கென சுயமான அரசியல் தீர்வுகளை எட்டக் கூடியவர்களாக இருக்கின்றனர். ஆனால் தெற்கு முஸ்லிம்களோ இத்தகைய வாய்ப்பற்றவர்களாச இருக்கின்றனர்.

(5) குடிசனப் பரம்பல், சமூக, பொருளாதார நிலைமைகள், சுயமான சமூக, அரசியல் இயக்கங்களின் தோற்றம், அரசியல் தீர்வுகள் போன்ற அனைத்திலும் வேறுபட்டு நிற்கும் தெற்கு முஸ்லிம்களையும், வடக்கு – கிழக்கு முஸ்லிம்களையும் "இலங்கை முஸ்லிம்கள்" என்ற ஒரே வறையறைக்குள் அடக்குவதோ, அவர்களுக்குப் பொதுவான தீர்வுகளை முன்வைப்பதோ சாத்தியப்படக் கூடியதல்ல என்பதையே புறநிலை யதார்த்தமும், கடந்த கால வரலாறும் நமக்குக் க்றபிக்கின்றன.

இலங்கை முஸ்லிம்கள் தமது விருப்பமின்றியே இவ்விதம் இரு வேறுபட்ட பிரிவினராக அமைந்திருக்கின்றனர் என்ற உண்மை இலங்கை முஸ்லிம்கள் அரசியல் வரலாற்றில் இதுவரை முறையாகப் புரிந்து கொள்ளப்படவில்லை. எனினும் இந்த உண்மை முதன்மைப் படுத்தப்பட வேண்டிய கட்டம் இப்போது தோன்றியிருக்கிறது. தேசிய இனப்பிரச்சினையானது உச்சநிலையை அடைந்திருக்கும் இன்றைய நிலையில், தனக்கான அரசியல் பாதையைத் தேர்ந்து கொள்ள வேண்டிய வரலாற்றுத் திருப்பத்தில் வடக்கு – கிழக்கு முஸ்லிம்கள் இருக்கின்றனர். இந்நிலையில் தமது விருப்பமின்றியே, தமக்கிடையே நிலவி வரும் தெற்கு, வடக்கு – கிழக்கு என்ற வேறுபாட்டை இலங்கை முஸ்லிம்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும். இனிமேல் எந்த நியாயத்தின் அடிப்படையிலும், இவ்விதம் வேறுபட்டிருக்கும் முஸ்லிம்களின் ஒருபிரிவினரின் உரிமைகளும், நலன்களும் மற்றப் பிரிவனருக்காக இழக்கப்படுவதை சமூகப் பொறுப்புமிக்க எந்தவொரு முஸ்லிமும் அனுமதிக்கப் போவதில்லை.

> **வடக்கு கிழக்கிற்கான அரசியல் தீர்வில் முஸ்லிகளுக்கான தீர்வு என்ன என்பது தொடர்பாய் வாதப்பிரதி வாதங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. இக் கட்டுரை அது தொடர்பாய் சில அவதானங்களைத் தருகின்றது.**
>
> **ஆ—ர்**

இலங்கை முஸ்லிம்களிடையே புறநிலை யதார்த்தமாக நிலவி வரும் இந்த சமூகப் பிரிவினை முறையாகப் புரிந்து கொள்ளப்படாததன் விளைவாக, ஒரு நூற்றாண்டுக்கும் மேற்பட்ட இலங்கை முஸ்லிம்களின் ஜனநாயக அரசியல் போக்கானது, இருண்ட முட்டுச்சந்தை நோக்கி இட்டுச் செல்லப்பட்டிருக்கின்றது. சமூக உணர்வற்ற, சுயநலமிக்க தெற்கின் – குறிப்பாக கொழும்பு சார் முஸ்லிம் தலைமகளினால் இலங்கை முஸ்லிம்கள் ஒரு நூற்றாண்டுக்கும் மேலாக அரசியல் பலிக்கு ஆளாக்கப்பட்டிருக்கின்றனர்.

தமது ஒரு நூற்றாண்டுக்கும் மேலான தலைமையினூடாக, மரபுவழி தெற்கு முஸ்லிம் தலைமை, இலங்கை முஸ்லிம்களுக்கு எவ்வித காத்திரமான பங்களிப்புகளையும் செய்து விடவில்லை. ஒரு சமூகத்தின் அரசியல் உரிமைகள் என்ற அடிப்படையில் மதிப்பீடு செய்தால், மரபுவழி தெற்கு முஸ்லிம் தலைமை தனது சமூகத்திற்குச் செய்திருக்கும் துரோகத்தனங்கள் துல்லியமாக வெளிப்படும். ஒரு சிறுபான்மை இனமாக தெற்கு, வடக்கு – கிழக்கு எனப் பிரிந்து வாழுகின்ற ஒரு சமூகத்தின் நலன்கள், பாதுகாப்பு, அரசியல் உரிமைகள், எதிர்கால வளர்ச்சிக்கான உத்தரவாதங்கள் போன்றவை பற்றிய அக்கறையின்றி, தமது சொந்த நலன் ஒன்றையே குறியாகக் கொண்டு இந்த மரபு வழி தெற்கு முஸ்லிம் தலைமை செயற்பட்டு வந்திருப்பது (இப்போதும் செயல்படுவது) தெரிய வரும்.

(வரும்)

1981ம் ஆண்டு சனத்தொகை மதிப்பீட்டின்படி இலங்கை முஸ்லிம்களின் குடிசனப் பரம்பல் (மாவட்ட ரீதியில்) வறுமாறு

அட்டவணை 1

| மாவட்டம் | சனத்தொகை | மாவட்டத்தின் மொத்த சனத்தொகையில் முஸ்லிம்களின் வீதம் |
|---|---|---|
| கிழக்கு மாகாணம் | | |
| (1) அம்பாறை | 161481 | 41.53 |
| (2) மட்டக்களப்பு | 79317 | 23.97 |
| (3) திருகோணமலை | 74403 | 28.97 |
| வடக்கு மாகாணம். | | |
| (1) யாழ்ப்பாணம் | 13757 | 1.66 |
| (2) மன்னார் (வன்னி) | 28464 | 26.62 |
| (3) வவுனியா (வன்னி) | 6640 | 6.92 |
| (4) முல்லைத்தீவு (வன்னி) | 3777 | 4.87 |
| மேல்மாகாணம் | | |
| (1) கொழும்பு | 140461 | 8.27 |
| (2) கம்பஹா | 38607 | 2.78 |
| (3) களுத்துறை | 61706 | 7.46 |
| மத்திய மாகாணம் | | |
| (1) கண்டி | 112052 | 9.95 |
| (2) மாத்தளை | 25836 | 7.23 |
| (3) நுவரெலியா | 14668 | 2.81 |
| தென்மாகாணம் | | |
| (1) காலி | 25896 | 3.18 |
| (2) மாத்தறை | 16457 | 2.25 |
| (3) அம்பாந்தோட்டை | 4732 | 1.12 |
| வடமேல் மாகாணம் | | |
| (1) புத்தளம் | 47959 | 9.72 |
| (2) குருநாகல் | 61342 | 5.05 |
| வடமத்திய மாகாணம் | | |
| (1) அநுராதபுரம் | 41833 | 7.12 |
| (2) பொலநறுவ | 17095 | 6.5 |
| சப்ரகமுவ மாகாணம் | | |
| (1) இரத்தினபுரி | 13531 | 1.7 |
| (2) கேகாலை | 34832 | 5.1 |
| ஊவா மாகாணம் | | |
| (1) பதுளை | 26808 | 4.17 |
| (2) மொனராகலை. | 5322 | 1.9 |

இலங்கையின் நிர்வாக அலகாக மாகாணங்களே அமைந்திருப்பதால் மாகாணரீதியிலும் இலங்கை முஸ்லிம்களின் குடிசனப் பரம்பலைத் தெரிந்து கொள்வது பொருத்தமானதாக இருக்கும்.

அட்டவணை 2

| மாகாணம் | முஸ்லிம்களின் எண்ணிக்கை | மாகாண சனத் தொகையில் முஸ்லிம்களின் வீதம | பிரதான பொருளாதாரம் |
|---|---|---|---|
| கிழக்கு மாகாணம் | 316164 | 33.00 | விவசாயம் கடற்தொழில், வர்த்தகம் |
| வடமாகாணம் | 50831 | 4.6 | விவசாயம். கடற்தொழில் வர்த்தகம் |
| மேல் மாகாணம் | 238728 | 6.1 | வர்த்தகம் போக்குவரத்துத் துறை, சிறு கைத்தொழில் |
| தென் மாகாணம் | 46699 | 2.5 | |
| மத்திய மாகாணம் | 1469 | 37 | நகர் சார் கூலித்தொழில் |
| வடமேல் மாகாணம் | 109791 | 6.4 | சந்தைப்பயிர் சார்ந்த உற்பத்தி |
| வடமத்திய மாகாணம் | 53729 | 6.5 | (உதாரணமாக, |
| ஊவா மாகாணம் | 31912 | 3.5 | ஏலம், கறுவா, கராம்பு) |
| சப்ரகமுவ மாகாணம் | 43180 | 3.3 | இரத்தினக்கல அகழ்வ. |

இலங்கை முஸ்லிம்களின் மொத்த சனத்தொகை 1056974
மொத்த சனத்தொகையில் முஸ்லிம்களின் வீதம் 7.12

நன்றி - நூலகத்திட்டம்

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

# சரிநிகர்

இல. 6 அலோசாலை கொழும்பு 3. தொலைபேசி: 574047

## பனையால் விழுந்தவனை..

கொக்கட்டிச் சோலை படுகொலைகள் நடந்து ஒரு வருடத்திற்கும் மேலாகிவிட்டது. ஒருவாறாக ஜனாதிபதி நியமித்த விசாரணைக்குழு கொழும்பிலும், மட்டக்களப்பிலுமாக மாறி மாறி விசாரணைகளை நடாத்தி படையினர் தான் இந்தப் படுகொலைக்குக் காரணம் என்ற உண்மையைக் கண்டுபிடித்து விட்டது.

இதைக் கண்டுபிடிப்பதற்குள் காணாமல் போனோரும் கொல்லப்பட்டோரும் ஏராளம் என்பது வேறு விடயம்.

இந்த 'துரித' விசாரணையின் பின் கொல்லப்பட்டவர்களுக்காக அவர்களது குடும்பத்தினருக்கும், காயப்பட்டவர்களுக்கும், வீடுகளையும் சொத்துக்களையும் இழந்தவர்களுக்கும் கடந்த மாதம் நஷ்டஈடு வழங்கியது.

இந்த நஷ்டஈடும் எத்தனையோ இழுபறிகளுக்குப் பிறகு உரியவர்களை வந்தடைய வழியாயிற்று.

கொடுக்கப்பட்ட நஷ்டஈடு கொல்லப்பட்ட ஒருவரையும் கொண்டுவரப் போவதில்லை என்பதும், இழந்தவற்றையும், தொலைத்தவற்றையும் மீட்டுத்தரப் போவதில்லை என்பதும் உண்மையான போதும், அகதி வாழ்வுக்கும், தொடரும் யுத்தத்திற்குமிடையில் இந்த நிவாரணம் ஒரு சிறு ஆறுதல்.

ஆனால் துரதிர்ஷ்டம் என்னவென்றால் நஷ்டஈடு வீடு வந்து சேரமுன்னே வீட்டு வாசலில் வந்து நிற்கிறார்களாம் புலியும், ரெலோவும். நஷ்ட ஈட்டில் பங்கு கேட்டு.

ஆக பனையால் விழுந்தவனை மாடேறி மிதித்த கதையோ?

# கொப்பேகடுவவின் மரணமும் யாழ்குடா தாக்குதலும்

டென்சில் கொப்பேகடுவை, விஜய விமலரத்தின ஆகியோரின் மரணத்தின் பின் பலதரப்பட்ட சிந்தனைகள் இலங்கை இராணுத்தினுள் மேலோங்கியுள்ளன. இதில் பிரதான சிந்தனைப் போக்கு, இராணுவத் தலைமைப் பீடத்தின் கடும் போக்காளரிடமிருந்து வருகிறது. பொதுவாக இலங்கை இராணுவத்துள், கொப்பேகடுவ, ஸ்டான்ஸ்லி சில்வா, (அண்மைக் காலம்வரை (Chief of Staff)ஆக கடமையாற்றியவர்) மேஜர், ஜெனரல் பாலரட்ணராஜா (தற்போதைய Chief-of-Staff)ஜெரி சில்வா ஆகிய நால்வரும் மிதவாதிகள் எனவும், தற்போதைய இராணுவப் பிரதம தளபதி சிசில் வைத்தியரட்னா, கடற்படைத் தளபதி கிளான்சி பெர்னான்டோ, விமானப்படைத் தளபதி - ஆகியோர் கடும் போக்காளர் எனவும் கருதப்படுகின்றனர். மிதவாதிகளுக்கும், கடும்போக்காளர்களுக்கும் இடையில் முரண்பாடுகள் கடந்த ஒரு வருடமாகப் புகைந்து கொண்டிருந்தன. சகல இராணுவ நடவடிக்கைகளையும் யுத்தத் தளபாடக் கொள்வனவு, பங்கீடு தொடர்பான தீர்மானங்ளையும் கட்டுப்படுத்திவந்த கூட்டுப் படைத் தலைமயகத்தின் (JOC) அதிகாரங்களை ஒரு திடீர் வர்த்தமானி அறிவிப்பின் மூலம் இவ்வருடம் சித்திரை மாத நடுப்பகுதியில் ஜனாதிபதி பிரேமா கடுமையாகக் குறைத்ததிலிருந்து இம் முரண்பாடுகள் வெளிப்படையாகத் தெரிய வரலாயிற்று. கூட்டுப்படைத் தலைமையகத்தின் திடீர் அதிகாரக் குறைப்பு பிரேமாவின் அரசியற் காய்நகர்த்தலின் வெளிப்பாடேயாகும். இதைத் தொடர்ந்து தெல்லிப்பழை இராணுவ நடவடிக்கை தொடங்கிய காலத்திலிருந்து கடும் போக்காளரின் திறமைகளை ஓகோ எனப் புகழ்பாடி பிரேமாவின் சிந்தனையோட்டங்களை வெளிப்படுத்துபவரான ஒப்சோவர் ஆசிரியர் மகிந்தபாலா ஆசிரியர் தலையங்கங்கள், நடுப்பக்க கட்டுரைகள், செய்திகள் வெளியிட்டு வந்தார். இவற்றிற்குச் சிகரம் வைத்தாற் போல் கூட்டுப்படைத் தலைமையகத்தையும் அதன் தலைமைப் தளபதி ஹமில்டன் வணசிங்காவையும் மிகவும் மோசமாகவும் கடுமையாகவும் திட்டி மகிந்தபாலா ஒரு முன்பக்க ஆசிரியர் தலையங்கம் வரைந்தார். இராணுவத்தின் ஒரு முக்கிய பிரிவை நீங்கள் இங்ஙனம் பகிரங்கமாகவும் இழிவாகவும் தாக்குவது மடத்தனமான வேலையல்லவா என மகிந்தபாலாவின் வலது கையிடம் ஒரு பத்திரிகையாளர் ஒருமுறை கேட்டபோது மேலிடத்து சிந்தனையோட்டத்தின் பிரதிபலிப்புத்தான் இது'' என புன்சிரிப்போடு பதில் கிடைத்ததாம். இவ்வாறு இராணுவத் தலைமைப் பீடத்தின் கடும்போக்காளர்களை பிரேமா ஊக்குவிப்பதன் நோக்கம் யாது? வடகிழக்கு யுத்தத்தில் அதன் விளைவுகள் யாவை?

அ) ராணுவத்துள் முரண்பாடுகள் ஓரளவு புகைந்து



டென்சில் கொப்பேகடுவ

கொண்டிருப்பதுதான் எடுக்கும் முடிவுகளை நடைமுறைப்படுத்துவதற்குத் தோதான ஒரு சூழலை பிரேமாவிற்கு உருவாக்குகிறது.

ஆ) இந்தியா தென்னிலங்கை எதிர்க்கட்சிகளினுள் புகுந்து தனக்கெதிராக செயல்படுவதுபோல் இராணுவத்தினுள்ளும் செய்ய முற்படும், முற்படுகிறது என்று பிரேமாவிற்கு ஏற்பட்டுள்ள சந்தேகம்

இ) கடும்போக்காளர்கள் ஜே.வீ.பி யை அடக்குவதில் முன்னின்றவர்களாதலால் அவர்களுக்கு மக்கள் செல்வாக்கு அதிகமில்லை. எனவே அரசியல் ஆபத்தற்றவர்களாயிருப்பார்கள் எனப் பிரேமா கருதுவது

பிரேமாவிற்கு இந்தியா தென்னிலங்கையில் பெற்றுவரும் செல்வாக்கு ஒரு தடுமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. இதில் முக்கியமானது இலங்கை இராணுவத்தை நோக்கிய இந்தியாவின் அணுகுமுறை, ஒரு காலத்தில் இலங்கை



தலுவத்த

இராணுவத்தை மோசமாகச் சித்திரித்து வந்த இந்தியப் பத்திரிகைகள் தற்போது அது வடகிழக்கு யுத்தத்தில் சிறப்பாகச் செயல்படுவதாகவும் வெற்றி மேல் வெற்றி பெற்று வருவதாகவும் புகழ்ந்து எழுதுகின்றன. அதே நேரத்தில் பிரேமா எந்நேரமும் புலிகளுடன் கதைத்து விடக்கூடிய பேர்வழி எனவும் கோடிட்டுக் காட்டுகின்றன. இலங்கை இராணுவத்தை இந்தியா 'பாசத்துடன் அணுகுகின்றது என்பது இன்று கண்கூடு.

இராணுவ தலைமைப்பீடத்தின் கடும் போக்காளர் கூட இந்தியாவை நட்புணர்வுடன் -எதிரியின் எதிரி நண்பன் என்ற வகையில்- நோக்குகின்றனர். அல்லது இந்தியாவைத் குறைந்த பட்சம் இத்தருணத்தில் பகைக்கக் கூடாது என்ற சிந்தனை கொண்டவர்களாகவாவது காணப்படுகின்றனர்.

இந்தியாவும் இம்மனோ நிலையைப் பயன்படுத்திக் கொள்ளத் தவறவில்லை. இராணுவம் பல பகுதிகளை விடுவித்து அகதிகளை மீள்குடியமர்த்தக்கூடிய சுமூகமான நிலையை சிறப்பாக உருவாக்கி வருகிறது என இந்தியா மிக மும்முரமாக தனது பத்திரிகைகளினூடாகவும், ராஜதந்திரிகள் ஊடாகவும் மேற்கு நாடுகளில் பிரச்சாரம் செய்கிறது.

தமிழ் அகதிகளை திருப்பி அனுப்ப் ஐரோப்பிய நாடுகள் முனைவதற்கு, இந்தியாவும் அதனுடன் மறைமுக நட்புக் கொண்டுள்ள சில பொது ஸ்தானங்களும், இலங்கை இராணுவத்திற்கு வழங்கியுள்ள நற்சான்றிதழும் ஒரு காரணமாகும்.

புலிகளை நசுக்குவது



ஜெரி சில்வா


தொடர்பாக இராணுவத் தலைமையதிகாரிகள் பலர் இந்தியாவுடன் அடிக்கடி தொடர்பு கொண்டு வருகின்றனர். தெல்லிப்பளை, பலவேகய-2 ஆகிய நடவடிக்கைகள் குடா நாட்டில் ஆரம்பிக்கப்டுவதற்கு முன்னர், கடற்படைத்தளபதி கிளான்சி பெர்ணான்டோ இந்தியா சென்று பாக்குநீரிணை ரோந்து ஒழுங்குகளைப் பற்றி பேசியதோடு மட்டுமல்லாமல் ஜெயலலிதா

வையும் சந்தித்துப் புலி ஒழிப்புப் பற்றியும் நீண்ட நேரம் உரையாடினார். இலங்கை திரும்பியவுடன் அவர் ஜெயலலிதாவின் புலி எதிர்ப்புணர்வையும் திறமையையும் மிகவும் புகழ்ந்து பாராட்டினார். இவ்வாறாக இலங்கை இராணுவத்திற்கும் இந்தியாவிற்கும் இடையிலான உறவின் இறுக்கம் வளர்ச்சியடைவதை பிரேமா அவ்வளவாக விரும்பவில்லை. அவ்வுறவு புலிக்கெதிரான ஒரு கூட்டு மட்டுமல்ல காலப் போக்கில் தனக்கெதிராகவும் திரும்பிவிடுமோ என்ற சந்தேகமும் இதற்கு ஒரு காரணம். இவ்வாறான சந்தேகங்களும் பயங்களும் பிரேமாவிற்கும் அரசிற்கும் ஒரு முக்கிய சிக்கலை இன்று தோற்றுவித்துள்ளன. அது யாது? தொடர்ந்து பாரிய இராணுவ நடவடிக்கைகளை நடாத்துவதற்கும் அவற்றிற்குரிய தளவாடங்கள், ஆட்பலம் ஆகியவற்றை தொடர்ந்து பெற்றுக் கொடுப்பதற்குமான நிதி நெருக்கடிகள் மாதா மாதம் கூடி வருகின்றன. உலக வங்கியும், சர்வதேச நாணய நிதியமும் (I.M.F)அண்மையில் பாதுகாப்புச் செலவீனத்தை ஒரு மட்டத்தோடு கட்டுப்படுத்த (Freeze)வேண்டுமெனவும் வற்புறுத்தியுள்ளன. பெருகிவரும் தென்னிலங்கைப் பொருளாதார நெருக்கடிகளை சமாளிக்க முடியாத அளவிற்கு யுத்தச் செலவீனம் கூடி வருகிறது.

ஆனாலும் பிரேமாவிற்கும் மேற்குறிப்பிட்ட பயங்கள், சந்தேகங்கள் காரணமாக இராணுவக் கடும் போக்காளரின் முழுமையான ஆதரவாளனாக அவர் இன்று செயல்படுகிறார்.

இச் சூழ் நிலையில் தான் கொப்பேகடுவ புலிக்கெதிராகப் பின்பற்றிய பிரதான இராணுவ தந்திரோபாயம் பற்றிய விமர்சனமும் அரச பத்திரிகையொன்றில் முன்வைக்கப்பட்டது. புலிகளிடமிருந்து பிரதேசங்களை மீட்டு அவற்றைப் பாதுகாக்க பாரிய அளவில் துருப்புக்களை அங்கு நிறுத்தி வைப்பதும் அத்துருப்புக்கள் நாளாந்தம் புலிகளின் தாக்குதலுக்கு உட்படுவதும் வீண், எனவே புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுள் சென்று கூடிய அளவில் புலிகளை அழித்து மீள்வதன் மூலமே புலியைப் பலவீனப்படுத்தலாம் என்பதே கொப்பேகடுவையின் பிரதான தந்திரோபாயமாக இருந்து வந்தது. இவ்வாறு பாரிய நடவடிக்கைகளைச் செய்து மீள்வது வீண்விரயத்தை உண்டுபண்ணுகிறது. ஆகவே ஒரு புலிப் பிரதேசத்தினுள் நடவடிக்கை மேற்கொண்டு சென்றால் இராணுவம் அப்பிரதேசத்தை தன் கையில் வைத்திருக்க வேண்டுமென்ற கருத்து சித்திரையில் நடைபெற்ற கூட்டப்படைத் தலைமையக மாற்றத்தின் பின் கடும் போக்காளரால் நடைமுறைப்படுத்தப்பட்டது. ஆக் பத்திரிகையொன்று கொப்பேகடுவவின் பெயர் குறிப்பிடாமல் ''தாக்கிமீளும் தந்திரோபாயத்தை விமர்சித்தது. இச்சூழ்நிலையில் யாழ்பபாணத்தைக் கைப்பற்றி வைத்திருப்பது எங்ஙனம் என்பது பற்றிய முழுமையான சிவில் நிர்வாகம் உட்பட திட்டம் வகுக்கப்பட்டு அதற்கு அரசியற் தலைமைப் பீடத்தின் அங்கீகாரமும் கிடைத்திருந்தது. கொப்பேகடுவவின் மரணத்தின்பின் அத்திட்டத்தின் நிலை என்ன? அடுத்த இதழில் பார்ப்போம்.

**பிரம்மா**



## யுத்தத்தை நிறுத்து!

வடகிழக்கில் நடைபெறும் யுத்தத்தை நிறுத்தக் கோரி முற்போக்கு முஸ்லிம் முன்னணியினர் ஓகஸ்ட் 7ம் திகதியன்று ஆர்ப்பாட்டமொன்றை நடாத்தினர்.

யுத்தத்தை நிறுத்து! இனவாதத்தை நிறுத்து! என்பன போன்ற சுலோகங்களைத் தாங்கிய வண்ணம் மருதானை ஜும்மாப் பள்ளிவாசலில் தொழுகையின் பின்னர் இவ்வார்ப்பாட்டத்தை இவர்கள் நடாத்தினார்கள்.

இது தொடர்பாக முற்போக்கு முஸ்லிம் முன்னணியின் தலைவர் முஹிர் ரஹ்மான் அறிக்கை ஒன்றையும் வெளியிட்டுள்ளார்.

வடகிழக்கில் யுத்தத்தை நிறுத்த அரசை வலியுறுத்தும் இயக்கம் ஒன்றை நாடளாவிய ரீதியிலும், சர்வதேச ரீதியிலும் நடத்த எதிர்க்கட்சிகள், அமைப்புகள், ஜனநாயக சக்திகளை வலியுறுத்துவது அவசியமென்றும், வடகிழக்கு யுத்தத்தால் முஸ்லிம்கள் தினந்தோரும் கொல்லப்படுகிறார்கள். அரசினால் வடகிழக்கு முஸ்லிம்களைப் பாதுகாக்க முடியாது. யுத்தம் மேலும் தொடர்ந்தால் முஸ்லிம்கள் மேலும் பலியாவார்கள் எனவும் முஸ்லிம் மாகாணக் கோரிக்கைக்கு தாம் பூரண ஆதரவென்றும் எனினும் வடகிழக்கு மாகாண சபைக்குரிய அதிகாரங்களை வழங்காது அதனைக் கலைத்துவிட்டு முஸ்லிம் மாகாணசபை தனியாக வழங்கப்படும் என்பது வெறும் கனவே என்றும் அவ்வறிக்கையில் முஹிர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.